

சென்னை - பாரகனில் தினசரி மூன்று காட்சிகள்



கிரிக்கெட்காரர் கீல்வாதத்தினுல் அவுட்டாக்கப்பட்டார்



ஒரு முறை 'க்ருஷன்' சாப்பிட்டபின் மறுபடியும் தகுதி

சாம்ஸனின் ஓட்டங்கள் கீல் வாதத்தினுல் பாழடைந்தன. கூரிய வலி அவனுடைய கீல்களையும் தசைகளையும் பிடித்தன. மட்டையைப் பிடிப்பது கூட பெரும் வேதனையாக இருந்தது. பந்தயத்தினின்று ஓய்வு எடுத்துக் கொண்டபோது தனது கிரிக்கெட் விளையாட்டே ஓர் முடிவெல்லைக்கு வந்து விட்டது என நினைத்தான். அவன் தலைவன் சில யோசனைகள் சொன்னான்: தினமும் காலை உண்டிக்கு முன் 'க்ருஷனை'ப் பரிக்ஷியுங்கள்."

சாம்ஸன் அவ்வாறே செய்தான். மூன்று வாரங்களுக்குப் பின்னரே ஓர் வணுவுள்ள பந்தயத்தில் அறுபது ஓட்டங்கள் எடுத்துவிட முடிந்தது. அவனுடைய விளையாட்டு முன்னை விட அதிக மேன்மையுடன் விளங்கிற்று — 'க்ருஷனுக்கு' நன்றிகள். நீங்கள் கஷ்டப்படும் எவ்வித கீல்வாதமும் ஒரே ஒரு முக்கிய காரணத்தைக் கொண்டுள்ளது — மூத்திர நீர் கணுவிலும் தசையிலும் சேர்த்துக்கொண்டு விடுவதால். உங்கள் உடம்பினின்று மூத்திர நீரை வெளியேற்ற ஒரே ஒரு வழிதான் உளது — அதுதான் மூத்திரக் காய்களினின்று நீரை வெளியேறச் செய்வது. 'க்ருஷ'னுடைய ரகசியம் அது செய்யும் இரட்டை வேலையில்தான் உள்ளது. அது அங்கேயும் குடல்களிலும் ஒருங்கே வேலை செய்து நீர் தங்குமிடங்களினின்று அவற்றை வெளியேற்றுவதுடன் மறுபடி அவ்விதம் சேராமலும் செய்கிறது. இன்றே 'க்ருஷ'ன் வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும். விலை ரூ. 1/10 (மஞ்சள் பெட்டியில்.)



நீங்கள் கூட அந்த க்ருஷன் உணர்ச்சியை அடையலாம்

DESI. 2.


வலியை ஒழியுங்கள்...
அந்த துன்புறும் நாள்களில்
ஸாரிடன்
10 Saridon
BRAND ANALGESIC TABLETS
ROCHE
ஒரு ரோச் தயாரிப்பு


5 வது
வாரம்
இராஜதானி பூராவும்
இப்பொழுது நடைபெறுகிறது
சென்னையில்
பிரபாத்.. ஸன்..ஸரஸ்வதி
கணபதி பிக்சர்ஸ்
மாயாவதி
மஹாலிங்கம்
அஞ்சலிதேவி
லலிதா.பத்மினி
டைரக்ஷன்
T.R.சுந்தரம்
B.A.B.Sc.,(Leeds)
ஸ்டுடியோ. மாடர்ன்.

கல்கி பொருளடக்கம்

மலர் 9	செப்டம்பர் 11	விரோதி ஹு
இதழ் 6		ஆவணி 26உ.

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 6

என்ன சேதி?

பதக்கமும் பாராட்டுதலும்

பாரத நாட்டின் மாணிக்கமாய் விளங்கும் பண்டித ஜவாஹர்லால் நேருவைப் பேரறிஞர் என்றும் அரசியல் மேதாவி என்றும் உலகம் முழுவதும் போற்றிப் புகழ்கின்றது. அவ்வாறு ஒரு புறம் அறிவிலும் அன்பிலும் அஹிம்சையிலும் அகண்ட உலகத்துக்கும் வழிகாட்டியுள்ள இந்தியா, மற்றொரு புறம் போர் அரங்கத்திலும் படை வலிமையிலும் தன்னுடைய வீரதீரத்தைக் காட்டி அழியாப் புகழை ஸ்தாபித்துக் கொண்டிருக்கிறது. உலகத்திலே இணையற்ற ஆயுத பலம் வாய்ந்த அமெரிக்கா, இந்தியாவின் பிரதம சேனாபதி ஜெனரல் கே. எம். கரியப்பாவைக் கௌரவித்திருப்பதே அதற்குச் சான்றாகும்.


சென்ற மகாயுத்தத்திலும் அதற்குப் பிறகும் ஜெனரல் கரியப்பா பொறுப்புள்ள பதவிகளைத் திறம்பட வகித்ததற்காகவும், பல்வேறு போர்முனைகளிலும் இந்திய சேனா வீரர்கள் புரிந்த பராக்கிரம சாகஸங்களுக்காகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜெனரல் கரியப்பாவுக்கு வீரப் பதக்கம் அளித்திருக்கிறார். புது டில்லியில் நடந்த வைபவத்திலே, அமெரிக்க ஸ்தானீகரான ஸ்ரீ லாய் ஹெண்டர்சன் அமெரிக்க ஜனாதிபதியின் சார்பில் அந்தப் பதக்கத்தை இந்தியா பிரதம சேனாபதிக்கு நேரில் சூட்டினார். அப்போது பேசிய அமெரிக்க ஸ்தானீகர், இந்தியாவினிடம் அமெரிக்காவின் நட்பையும் மதிப்பையும் தெரிவித்துக் கொண்டார். அமெரிக்காவின் பிரதம சேனாபதி பதவியையும் வகித்து வரும் ஜனாதிபதி, அன்னிய நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு அளிக்கும் மிக்க உயர்ந்த கௌரவம் மேற்படி வீரப் பதக்கமேயாகும். சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதம சேனாபதியை ஒரு பெரிய வல்லரசு அவ்விதம் பாராட்டிக் கௌரவித்திருப்பது இந்திய சைன்யங்களுக்கும் இந்திய மகாஜனங்களுக்கும் மிகவும் பெருமை அல்லவா?

பயங்கரமான பகைவன்!

இந்திய சர்க்கார் தீவிரமான சிக்கன முறைகளைக் கைக்கொள்ளத் திட்டமிட்டு வருகிறார்கள். அமித விலை என்ற விரோதியை அடக்கி ஒடுக்குவதற்கான முறைகளில் சிக்கனமும் ஒன்று என்று சொல்லி வருகிறார்கள். அமித விலையைக் காட்டிலும் பயங்கரமான பகைவனை அடக்க வேண்டிய அவசியம் இப்போது சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுதான் பெரிய வர்த்தகர்களின் பேராசை!

முன்பு துணிக் கட்டுப்பாட்டை சர்க்கார் ரத்து செய்ததும் துணி விலைகள் உயர்ந்து கொண்டே போயின. காப்பிக் கொட்டையின் கதை சொல்லவே வேண்டியதில்லை. சமீபத்தில் யாதொரு காரணமுமின்றி சர்க்கரையின் விலை வானளாவத் தொடங்கி விட்டது. சில மாதங்களுக்கு முன் சர்க்கரைக் கட்டுப்பாடு ரத்தானவுடன் அதன் விலை ஏற ஆரம்பித்தது. பிறகு சர்க்கார் தலையிட்டதின் மீது குறிப்பிட்ட அளவுக்குமேல் விலையை உயர்த்துவதில்லை என்று வியாபாரிகள் உறுதி கூறினர். ஆனால் அவர்கள் தங்களுடைய சொல்லைக் காப்பாற்றவில்லை என்பது சர்க்கரை விலை திடீரென்று ஏறியதிலிருந்து நன்கு தெரிந்து விட்டது. எனவே, சென்ற வாரம் அலகாபாத்திலே நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசிய பண்டித ஜவாஹர்லால் நேரு, விலைகள் உயர்வதற்கு வியாபாரிகளின் சுயநல நோக்கம்தான் காரணம் என்று அவர்களைக் கண்டித்தார். அவர்களுடைய பேராசைக்கு ஜனங்கள் இரையாகாமல் இருக்க வேண்டுமாயின், கண்ட்ரோல்களை நீடித்தே தீரவேண்டும் என்றும், எனவே சமீபத்தில் அவற்றை ரத்து செய்யும் நோக்கம் சர்க்காருக்கு இல்லை என்றும் கூறினார். எதிர்காலத்தில் உணவுப் பொருள்களின் விலை இன்னும் ஏறிவிடுமோ என்று கலங்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு ஜவாஹர்லால்ஜியின் உறுதிமொழி ஆறுதலை அளிக்கும்.

நடுக் கண்ட நியாயம்!



காஷ்மீர் [illegible] பாகிஸ்தான் [illegible] விட்டும்கூட, அதைக் கண்டிக்காமல் அமெரிக்காவும் பிரிட்டனும் ஐக்கிய நாடுகள் சபைக் கமிஷனின் மத்தியஸ்த யோசனைக்கு இணங்கவேண்டும் என்று இந்தியாவையும் பாகிஸ்தானையும் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

பாடுவோம்! கொண்டாடுவோம்!

கவி ஒன்று கிடைக்குமானால், அதற்காகத் தனியே ஒரு விழாக் கொண்டாடலாம் என்று ரஸிக சிகாமணிகள் சொல்லுவார்கள்.

ஒரு கவிஞர் கிடைத்து விட்டால், அதற்காக எத்தனையோ விதமான எவ்வளவோ விழாக்கள் கொண்டாடலாம்.

ஒரு மகா கவி கிடைத்து விட்டாலோ, அந்த நாட்டின் மக்கள் என்ன விதமான கொண்டாட்டம் நடத்துவது என்று தெரியாமல் திண்டாட வேண்டியதாகும்.

* * *

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஒரு நாட்டில் ஒரு மகா கவி தோன்றக் கூடும் என்று இலக்கிய ஆராய்ச்சியாளரும் சரித்திரக்காரரும் திட்டமாய்க் கூறுகிறார்கள்.

குறைந்த பட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இடையறுமல் தொடர்ந்து கலைகளும் இலக்கியமும் வளர்ந்து வந்த நாட்டிலேதான் மூன்று மகா கவிகள் வரிசைக் கிரமத்தில் தோன்றியிருக்க முடியும்.

தமிழ்நாடு அத்தகைய அதிர்ஷ்டம் வாய்ந்த நாடு. இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் திருவள்ளுவர் என்னும் மகா கவி தோன்றினார். சத்திய வேதம் என்று சொல்லத் தக்க தத்துவ ஒழுக்க நூலை அற்புத சக்தி வாய்ந்த கவிதையில் அமைத்துக் கொடுத்தார்.

வள்ளுவருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு கவிச் சக்கரவர்த்தி கம்பர் அவதரித்தார். உலகத்தில் வேறு எந்த நாட்டு எந்த பாஷைக் காவியத்துக்கும் மேம்பட்டது என்று சொல்லத் தக்க இராமாயண மகா காவியத்தைத் தமிழில் செய்தளித்தார்.

கம்பருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, நம்முடைய காலத்தில், மகா கவி பாரதியார் தோன்றினார். எத்தனையோ நூற்றாண்டுகள் அடிமையிருளில் கிடந்த நாட்டுக்கும் செத்தவர்கள்போ லிருந்த நாட்டு மக்களுக்கும் புத்துயிர் தந்தார். தேச பக்தியையும் சுதந்திர தாகத்தையும் தமிழ் வெறியையும் தன்னம்பிக்கையுடன் கவிதை இன்பத்துடன் கலந்து மக்களுக்கு ஊட்டினார்.

பாரதியாரின் பாடல்கள் பலவற்றில் அதி ஆச்சரியமான தீர்க்க தரிசன சக்தியை நாம் காண்கிறோம். அவருடைய தீர்க்க தரிசன வாக்குகள் ஒவ்வொன்றாகப் பலித்து வருவதைக் கண்டு கண்டு மகிழ்கிறோம்.

பாரதியார் தம் காலத்தில் கண்ட தமிழ் மக்களைப் பற்றி அவ்வளவாக உற்சாகம் கொண்டுவிட வில்லை. தமிழ் மக்களிடத்திலும் இந்திய மகாஜனங்களிடத்திலும் பற்பல குறைகளைக் கண்டு நைந்து ஆவி நெஞ்சுருகி நின்றார்.

"நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மாந்தரை நினைந்துவிட்டால்!"

என்று மனம் பதறிக் கதறினார்.

"நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை செய்வாரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி!"

என்று ஆத்திரத்தைக் கொட்டினார்.

ஆயினும் இத்தகைய நிலைமையைக் கண்டுவிட்டு உற்சாகக் குறைவு அடைந்து விட்டாரோ? அடியோடு நம்பிக்கை இழந்து விட்டாரோ?

அவருடைய காலத்து 'அறிவாளி'கள் சிலரைப்போல, "இந்த தேசம் உருப்படவாவது? இந்தியாவுக்கு விடுதலையாவது?" என்று சொல்லிக் கொண்டு இருந்து விட்டாரோ? இல்லவே இல்லை!

அந்த நிலைமையில், அப்படிப்பட்ட மக்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு, தீர்க்க திருஷ்டியுடன் வருங் காலத்தை நோக்கினார்.

"ஜய பேரிகை கொட்டடா!" என்று முழங்கினார்.

"ஜயமுண்டு பயமில்லை மனமே—இந்த
ஜன்மத்திலே விடுதலை யுண்டு நிலையுண்டு"

என்று கையடித்துச் சத்தியம் செய்து கொடுப்பதுபோல் உறுதி கூறினார்.

காரிருளுக்கு மத்தியில் பேரொளி பொங்கி வரும் அறிகுறிகளைக் கண்டார். அடிமைத் தனத்துக்கு மத்தியில் விடுதலையின் உதயப் பிரகாசத்தைக் கண்டு வரவேற்ருர்.

இந்தியாவைப் பிடித்திருந்த பீடைகளும் இந்திய மக்களிடம் குடி கொண்டிருந்த இழி குணங்களும் விரைவிலே அகன்று போய்விடும் என்பதை உள்ளுணர்ச்சியினுல் மகா கவி பாரதியார் நிச்சயமாய் அறிந்தார்.

'' வலிமையற்ற தோளினுய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினுய் போ போ போ''

என்ற பாடலில், அச்சம் மடமை பலவீனம் முதலிய மக்களின் குறைபாடுகளை யெல்லாம் அடித்து விரட்டுவது போல் சபித்து ஓட்டினுர்.

'' வேறுவேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போபோபோ ''

என்று தாய்மொழிப் பற்றில்லாதவர்களை நாடு கடத்திஞர்.

'' ஜாதிநூறு சொல்லுவாய் போபோபோ
தருமமொன் றியற்றிலாய் போபோபோ
நீதிநூறு சொல்லுவாய்—காசொன்று
நீட்டினுல் வணங்குவாய் போபோபோ''

என்று மூட நம்பிக்கையாளரையும் சமூகத் துரோகிகளையும் அதட்டி அடித்தார்.

பின்னர், வருங்காலத்தில் வரப்போகும் உண்மையான பாரத ஜாதியை ஞானக்கண் கொண்டு பார்த்து சக்தி வாய்ந்த சொற்களினுல் அற்புதமான கவிதை செய்து வரவேற்ருர் :—

'' இளைய பாரதத்தினுய் வா வா வா
எதிரிலா வலத்தினுய் வா வா வா
ஒளியிழந்த நாட்டிலே — நின்றேறும்
உதயஞாயி றொப்பவே வா வா வா
களையிழந்த நாட்டிலே — முன்போலே
கலைசிறக்க வந்தனை வா வா வா
விளையுமாண்பு யாவையும்— பார்த்தன்போல்
விழியினுல் விளக்குவாய் வா வா வா'' *

இப்படிப்பட்ட தீர்க்க தரிசனத்துடன் சுதந்திர பாரதத்தை அகக் கண்ணினுல் கண்டு வரவேற்புக் கூறிய மகனுக்கு எத்தனை விழாக்கள் தான் நடத்தக்கூடாது? தினந் தினம் ஒரு கொண்டாட்டம் ஊரெங்கும் நாடெங்கும் நடத்தி மகிழலாமே!

பாரதி வாழ்ந்திருந்த காலத்து மக்களின் இலட்சணத்தைப் பற்றி அவரே நன்ருகப் பாடி யிருக்கிருர். தெளிவான வசன நடையிலும் '' மண்ணுலகம்'' என்னும் ஞானரதப் பகுதியில் எழுதி யிருக்கிருர்.

ஆகவே, பாரதி வாழ்ந்திருந்த காலத்திலும் அதற்குப் பிற்பாடு சிலகாலம் வரையிலும் கூடத் தமிழ் மக்களில் பெரும்பாலோர் '' பாரதி யார்?'' என்றும், '' எந்தப் பாரதி?'' என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போதெல்லாம் அப்படி யாரும் கேட்பதில்லை. '' நம்முடைய பாரதியார்!'' என்று பெருமையுடன் மார் தட்டிக் கொண்டு சொல்கிறோம். '' கவியரசர் பாரதியார்'' என்றும் ''மகாகவி பாரதியார்'' என்றும் போற்றிப் புகழ்கிறோம்; பாருக்கெல்லாம் அவர் பெருமையைப் பறை சாற்றுகிறோம்.

• • •

பாரதியார் பிறந்த எட்டயபுரத்தில் பாரதியார் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் செப்டம்பர்மீ 11ல் பாரதி விழாக் கொண்டாடப் படுகிறது.

பாரதி மண்டபத்துக்கு அஸ்திவாரம் நாட்டியவரும், பாரதி மண்டபத்தைத் திறந்து வைத்தவருமான நம் ராஜாஜி அவர்கள் புது டில்லி சிம்மாசனத்தில் வீற்றிருந்தாலும் பாரதியார் விழாவை அவரால் மறந்துவிட முடியவில்லை. விழாவுக்கு கவர்னர் ஜெனரல் அனுப்பியுள்ள அருமையான ஸ்ரீ முகத்தில், '' இந்த வருஷமும் நான் இல்லாமலே பாரதி விழா நடத்துகிறீர்களே?'' என்று ஆரம்பித்து, தம் உள்ளத்தின் உணர்ச்சிகளைக் கொட்டி யிருக்கிருர். தமிழ்நாட்டில் அனைவரும் பாரதியார் காட்டிய வழியில் நடந்து தமிழ்நாடு மேம்படச் செய்ய வேண்டும் என்னும் ஆர்வத்தை வெளியிட்டிருக்கிருர்.

• • •

இந்த ஆண்டு பாரதியார் விழாவுக்குப் பாரதி பரம்பரையில் வந்த ஆஸ்தான கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமை வகிப்பது மிகவும் பொருத்தமாகும்.

காந்தி மகாத்மாவின் திட்டங்களை நிறைவேற்றுவதில் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் தமிழ்நாடு தீவிரமாக இருந்து வந்தது தேசம் அறிந்த செய்தி. இதற்குக் காரணம் என்ன வென்பதை ஆஸ்தான கவிஞர் தம் முன்னுரையில் விளக்கி யிருக்கிருர். காந்தியத்தை ஏற்பதற்குப் பாரதியார் தமிழர்களைத் தயார் செய்து வைத்

* உதய சூரியனை யொத்த இளைய பாரதக் குழந்தையைத் தம்முடைய தீர்க்க தரிசனத்திஞல் கண்டு கவியரசர் பாரதியார் வரவேற்கும் காட்சியைத்தான் இந்த இதழின் மேலட்டையில் நமது சித்திரக்காரர் ஓவியக் கண் கொண்டு பார்த்துத் தீட்டி யிருக்கிருர்.

இருந்ததுதான் காரணம் என்று கூறுகிறார். காந்தி மகாத்மா போதித்த தத்துவங்கள் பெரும்பாலும் பாரதியார் பாடல்களில் அடங்கியிருப்பதை எடுத்துக் காட்டி நிரூபித்திருக்கிறார். அவருடைய தலைமை உரையைப் படிக்கும்போது ஒரு கவியின் பெருமையை இன்னொரு கவிதான் நன்கு உணர முடியும் என்று தோன்றுகிறது.

* * *

பாரதி விழாவைத் திறந்து வைக்கும் சென்னை மாகாணப் பிரதமர் கனம் குமாரஸ்வாமி ராஜா தம்முடைய பிரசங்கத்தில் கூறுவதைக் கேளுங்கள்:—

"பாரதி, சுதந்திர தேவியின் பக்தர். எத்தனையோ வகைகளில் அந்தத் தேவியைத் துதித்திருக்கிறார். சுதந்திர தேவியை வெவ்வேறு கோணங்களில் நிறுத்தி வைத்துப் பூசனை செய்திருக்கிறார். எனவே, சுதந்திர நாளை நம் நாட்டார் கொண்டாடும் பொழுது, எந்த சந்தர்ப்பத்துக்கும் ஏற்றதாகப் பாட்டுக்கள் தமிழர்களுக்கு மட்டுந்தான் தயாராயிருந்தன."

கனம் குமாரஸ்வாமி ராஜா பாரதியாரின் பாடல்களை எவ்வளவாக ஆராய்ந்து படித்துச் சிந்தித்திருக்கிறார் என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

இன்னும் நம் தொழில் மந்திரி கனம் பெருமாள்சாமி ரெட்டியார், உணவு மந்திரி கனம் ரோச் விக்டோரியா, ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், ஆசிரியர் ஸ்ரீனிவாச ராகவன், முதலிய பாரதி பக்தர்கள் திருவிழாவில் பாரதியார் பெருமையைப் பறை சாற்றுகிறார்கள்.

இசைச் செல்விகளும் இசைவாணர்களும் பாரதி கீதங்களைப் பாடி மகிழ்விக்கிறார்கள்.

* * *

இப்படியெல்லாம் கவிகள், கவிதா ரஸிகர்கள், மந்திரிமார்கள், பொது மக்கள், தலைவர்கள், தொண்டர்கள், எழுத்தாளர்கள், படிப்பாளர்கள் அனைவரும் சேர்ந்து பாரதி திருநாளைக் கொண்டாடுகிறார்கள். பாரதியாருடைய ஆத்மாவும் அவருக்கு முன் தமிழகத்தில் அவதரித்த கவியரசர்களின் ஆத்மாக்களும் ஆனந்தப்படும் படியான முறையில் பாரதியார் தினத்தைத் தமிழர்கள் கொண்டாடுகிறார்கள்.

இந்த வருஷத்தில் பாரதியார் விழாவை முந்தைய வருஷங்களைக் காட்டிலும் அதிக குதூகலத்துடன் கொண்டாடுவதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது.

பாரதியார் பாடல்களின் அச்சுப் பிரசுர உரிமையும் ஒலிப் பதிவு செய்யும் உரிமையும் தனிப்பட்ட அன்பர்களின் தனிச் சொத்துரிமையாக இருந்தது. பல பாரதி பக்தர்களின் உள்ளத்துக்குத் துன்பத்தை அளித்து வந்தது. இந்த வருஷத்தில் பாரதியார் பாடல்களுக்கிருந்த அந்த பந்தங்கள் எல்லாம் நிவர்த்தியாகி விட்டன.

மேற்படி இருவித உரிமைகளும் பொது மக்களின் உடைமையாகிப் பொதுஜன சர்க்காரால் இப்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இவ்விதமாக, அநேக பாரதி பக்தர்கள்—தமிழன்பர்கள் மனதில் பொங்கிக்கொண்டிருந்த தாபத்தைத் தணித்துப் பாரதியார் பாடல்களைப் பொது உடைமையாக்கிக் கொடுத்த சென்னை மாகாண காங்கிரஸ் சர்க்காருக்கு நமது மனமார்ந்த நன்றியை இந்தப் புனிதத் திருநாளில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


அந்தக் காரியம் சாத்தியமாவதற்குப் பெரிய மனதுடன் உதவி புரிந்த ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்களையும் ஸ்ரீ சி. விசுவநாதய்யர் அவர்களையும் முன்னொரு தடவை பாராட்டியிருப்பதோடு இன்று பாரதி திருவிழா தினத்திலும் பாராட்டுகிறோம்.

மகா கவி பாரதியார் தமது சொந்தக் கரத்தினால் முத்துப் போன்ற எழுத்துக்களில் எழுதிய கையெழுத்துப் பிரதிகளை ஸ்ரீ சி. விசுவநாதய்யர் அவர்களிடமிருந்து சென்னை சர்க்கார் பெற்று எழும்பூரிலுள்ள அரசாங்கக் கண்காட்சிச் சாலை (மியூஸியம்) யில் வைத்திருக்கிறார்கள். இதுவும் போற்றத் தகுந்த செயலாகும். அந்தக் கையெழுத்துப் பிரதிகளைப் பத்திரமாக வைத்துப் பாதுகாத்து வந்தால் தலைமுறை தலைமுறையாகத் தமிழ் நாட்டில் பிறக்கப்போகும் சந்ததிகள் அந்தப் பிரதிகளைப் பார்த்துப் படித்துக் கண்ணிலே ஒற்றிக் கொண்டு மகிழுவார்கள்.

பாரதியார் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து ஒரு பக்கத்தைப் போட்டோ பிடித்து இந்த ஆபீலில் வேறொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

* * *

செப்டம்பர் 11-ல் பாரதியார் தினத்தில் தமிழ்நாடெங்கும், தமிழர்கள் வாழும் இடமெங்கும் பாரதியார் பாடல்களைப் பாடுவோமாக; பாரதி திருநாள் கொண்டாடுவோமாக.



தமிழ்நாடு மேம்பட வேண்டும்!

GOVERNMENT HOUSE
NEW DELHI

இந்த வருஷத்துப் பாரதி விழாவும் நான் இல்லாமலே நடத்துகிறீர்கள். இதற்கு யார் பேரில் வருத்தப்படுவது? என் உள்ளம் உங்கள் மத்தியில் இருக்கிறது. உடல் தான் தில்லியில் இருக்கிறது.

ஆண்டுதோறும் சுப்பிரமணிய கவிஞருடைய ஜயந்தி விழாவை சிறப்பாக நடத்துங்கள். அது தமிழ்க் குலமுடைய உள்ளங்களை மங்களமாக்க வேண்டும். மண்ணும் புளியும் போட்டுத் தேய்த்தெடுத்த பாத்திரங்களைப் போல் தமிழ் மக்கள் ஒவ்வொரு வருஷமும் பாரதி விழாவினின்று பளபளவென்று சுத்தப்பட்டு வெளியேற வேண்டும்.


ஆங்கிலத்தைப் புகழைப் பெற்ற கவிஞர்பால் ஷேக்ஸ்பியர் அன்னை அந்நாட்டில் அறியாதவர்கள் எந்தப் பட்டம் பெற்றாலும் ஏழைகளே. அவர் நமக்குக் கீழ்மக்கள் தான். பாரதியார் பெரு மகிழ்ச்சியை நமக்குக் கவிஞர் அடைந்துவிட்டார். உலகப் போக்கில் மனித முன்னேற்றமே இப்படியே தான் நடைபெறும். இவர் அடைய சந்தோஷத்தை நாம் அடையவில்லையா? அதிர்ஷ்டம் பெற்ற இந்தியாவைப் பார்க்காமல் மறைந்துபோன பெரியார் இல்லை — அந்த பாக்கியசாலிகளாக நாம் அனுபவிக்கிறோம். பாரதியார் உள்ளத்தின் அகமகிழ்ச்சியே அவருடைய ஆனந்த அபிஷேகமாக இருந்தது. "பயமில்லை" என்று பாடிய மகனுக்கு

எட்டயபுரம் பாரதி மண்டபத்தில் செப்டம்பர் 11ல் நடைபெறும் பாரதியார் விழா வைபவத்துக்கு நம் மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அனுப்பிய ஸ்ரீமுகம் :—

பாரதியின் கோயிலில் பட்டயம் வேண்டிய
தில்லையல்லவோ? அவர் பாடிய
தமிழுக்கு மரணமில்லை. அமரகவிக்கு
இன்று அஞ்ஞான கவிஞர் நிலைமையில்
நாமெல்லாம் பூஜை வைத்து பூஜை
செய்கிறது.

தமிழ் நாட்டை இன்னும் கொஞ்சம்
மேம்பட்ட செய்ய நாம் யோசிக்க வேண்டும்.
ஒருவரோடு ஒருவர் தோஷங்களைக் கண்ணால்
கட்டிக் கொண்டு போட்டிகளையும் வெறுப்புகளையும்
தூவென்று தள்ளித் தமிழ் நாட்டு ஆண்களும்
பெண்களும் மிக நல்லவர்கள், பொய்யும்
பித்தலாட்டமும் அவர்களிடம் கிடையாது,
அவர்கள் புத்திசாலிகள், நகைச்சுவை
பொங்கியெழப் படைத்தவர்கள், படபடப்பு
கிடையாது, அகம்பாவம் இல்லை, துன்மார்க்கத்தை
வெறுக்கிறார்கள், அவர்களை எப்போதும்
நம்பலாம் என்று நம்முடைய நாட்டுக்குப்
பெயர் சம்பாதிக்க வேண்டும். இது கஷ்ட
மில்லை. ஆண்டவனை வேண்டிக்கொண்டால்,
உண்மை உறுதி வேண்டிக் கொண்டால், நிச்சயமாக
எல்லாம் உண்டாகும். அவரவர் தன்மையே
பார்த்துக் கொள்ள வேண்டும். பிறர் குற்றத்தைக்
கவனிப்பதில் பயனில்லை. வாழ்க, செந்தமிழ் நாடு!

சி. ராஜகோபாலாச்சாரி





ஓம் சக்தி

(அ)

ஜய பேரிகை.

பல்லவி.

ஜய பேரிகை கொட்டடா – கொட்டடா!
ஜய பேரிகை கொட்டடா!

சரணங்கள்

பய மெனும் பேய் தனை யடித்தோம் – பொய்மைப்
பாம்பைப் பிளந் துயிரைக் குடித்தோம்
வியனுல கனைத்தையு மமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப் பிடித்தோம் – (ஜய பேரிகை) (1)

இரவியி னொளி யிடைக் குளித்தோம் – ஒளி
யின்ன முதினைச் சுவைத்துக் களித்தோம்.
கரவினில் வந் துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடு நடுங்க விழித்தோம் – (ஜய பேரிகை) – (2)

காக்கை, குருவி எங்கள் ஜாதி – நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசை யெலாம் நா மன்றி வே றில்லை;
நோக்க, நோக்கக் களி யாட்டம் – (ஜய பேரிகை) – (3)

அழகிய நங்கை ஆவலுடன்

- எவ்வளவு குளிர்ச்சி
- என்ன புதுமை
- எத்தனை சுத்தம்

வேண்டுவது காந்தி டாய்லட் சோப் தான்.



காந்தி

டாய்லட் சோப்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட்; பம்பாய்

SOM 38 TAMILA

டாக்டர் ஆரோக்கியம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

"இனி ஒரு நாள் தவணை கூடக் கொடுக்க முடியாது" என்றார் சேட் பன்ஸிலால்.

"உங்களுக்காக நான் எவ்வளவு பாடு பட்டிருக்கிறேன்? திடீரென்று இவ்வளவு பெரிய தொகை தரச் சொன்னால், நான் ஏழை, எங்கிருந்து கொடுப்பேன்?" என்றார் டாக்டர் பால் ஆரோக்கியம்.

மீண்டும் அவர் "ஏதோ கெட்ட வேளையில் புத்தி தவறிப் போய்த் தப்பிதம் செய்து விட்டேன். மன்னித்து விடுங்கள். உங்களை ஆண்டவன் காப்பாற்றுவான். உங்களுக்கு ஒரு குறையுமில்லை. சுவாமி வேண்டிய தனம் கொடுத்திருக்கிறார், இன்னும் கொடுக்கப் போகிறார். உங்களுக்கு இது ஒரு பெரிய விஷயமல்ல" என்று கண்கள் சிவந்து மிகப் பரிதாபமாக வேண்டிக் கொண்டார்.

"சுவாமியாவது, பூதமாவது!" என்று உரத்த குரலில் சேட்டு கத்தினார். "நம்பின ஆளை மோசம் செய்து விட்டுப் பன்னிரண்டு மாதங்களாகப் பொய் சொல்லி என்னுடைய பணத்தைத் திருடி விட்டு இப்போது சுவாமி பேர் சொல்லுகிறீரா? மோசம் செய்யும் போதெல்லாம் சுவாமி எங்கே போனார்? இந்த வருஷம் பந்திகானாவில் இருந்து விட்டுப் பிறகு சுவாமிக்குப் பூஜை செய்யும். இதுவே கடைசி வார்த்தை. வெள்ளிக்கிழமைக்குள் பணம் காலாயிரம் ரூபாயும் வைத்து மன்னிப்புக் கேட்டால் ஆச்சு. இல்லாவிட்டால் போலீசார் நடவடிக்கை எடுப்பார்கள்" என்று சொல்லி விட்டுச் சேட்டு போய்விட்டார்.

* * *

டாக்டர் பால் ஆரோக்கியத்துக்கு அவருடைய தாய் தகப்பனார் இட்ட பெயர் வைத்தியநாதன். இவரை ஞானஸ்நானம் செய்வித்த பாதிரியார் தம்முடைய பெயரில் ஒரு பகுதியையும் வைத்தியநாதனுடைய பெயரைக் கொஞ்சம் மாற்றி அமைத்து அதையும் சேர்த்துப் பால் ஆரோக்கியம் என்று நாமகரணம் செய்தார். கிறிஸ்துவப் பள்ளியில் கொஞ்ச காலம் படித்து மெட்ரிகுலேஷன் பரீட்சை தேறாமல் கல்கத்தாவிலும் பம்பாயிலும் வேலைக்காக அலைந்து பிறகு சூட்சுமப் பிரயோக முறை – அதாவது ஹோமியோபதி சிகிச்சை கொஞ்சம் கற்றுக் கொண்டு டாக்டர் ஆரோக்கியம் காசியில் அந்தத் தொழில் செய்து வந்தார். ஆனால் வருமானம் ஒன்றும் சரியாகக் கிடைக்கவில்லை. பக்கத்துத் தெருவில் ஒரு ஜவுளி வியாபாரியுடன் சிநேகம் செய்துகொண்டு அவருக்காகப் பெங்களூரில் தமக்குத் தெரிந்த வியாபாரிகளிடமிருந்து புடவை தினுசுகள் தருவித்துக் கொடுத்து வந்தார். குடிப் பழக்கத்தில் சிக்கிவிட்டிருந்தபடியால் முதலாளியிடம் வாங்கிய பணத்தை ஆசாமிகளுக்குச் சரியாக அனுப்பாமல் செலவு செய்து வந்தார். இவ்விதம் இரண்டு வருஷங்களாகக் கையாண்டது பெருந் தொகையாகிவிட்டது. சேட்டுக்கு விஷயம் தெரிந்து போய் விட்டது.

சேட் பன்ஸிலாலுக்குப் போலீஸ் அதிகாரிகள் ரொம்ப வேண்டியவர்களாயிருந்தனர். அவர்களுடன் யோசனை செய்தார். கேஸ் போட்டால் ஆள் ஜெயிலுக்குப் போய்விடுவான், பணம் வராது என்று அவருக்கு விளங்கிற்று. கேஸ் தாக்கல் செய்யாமலேயே ஆசாமியை மிரட்டிப் பணம் வாங்க வேண்டும் என்று போலீசாருடன் கலந்து அவர்களும் இவருமாகத் தீர்மானித்து அதற்கு வேண்டியதைச் செய்தார்கள். வியாழக்கிழமை பிற்பகலில் ஒரு போலீஸ் அதிகாரி டாக்டர் ஆரோக்கியத்துடைய வீட்டுக்கு வந்து டாக்டர் இருக்கிறாரா என்று விசாரித்து விட்டுத் திரும்பிப் போனார். சிறைச்சாலை நிச்சயம் என்று டாக்டர் மனதில் தீர்மானித்துக் கொண்டார். சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்தவர் தம்முடைய வாழ்க்கை முழுதும் துரதிருஷ்டமாகவே நடைபெற்றதை எண்ணி எண்ணிக் குழந்தை போல் அழுதார். சிறு வயதில் தாயார் இறந்ததும், தகப்பனார் மறுகல்யாணம் செய்து கொண்ட பிறகு தான் பட்ட துயரங்களும், வீட்டை விட்டு ஓடிப்போனதும், திருக்கோயிலூரில் கிறிஸ்து மதத்தில் சேர்த்துவிட்ட பின் பாதிரிமார்கள் தம்மைக் காப்பாற்றியதும், பிறகு அவர்களும் தம்மைத் துரத்தி விட்டதும், புதுச்சேரியிலும் பம்பாயிலும் கல்கத்தாவிலும் படாத பாடெல்லாம் பட்டு அலைந்ததும் இன்னும் பல நிகழ்ச்சிகளும் சினிமாப்படம் போல் வேகமாகவும் முன் பின்னாகவும் மனதிலே இயங்கின. கொஞ்ச நேரம் தூங்கினார்.

"ஏன் அழுகிறாய்?" என்று கேட்டுக் கொண்டு ஆனை முகக் கடவுள் பிரசன்ன மானதாகக் கனவு கண்டார். விநாயக ருடன் எப்படியோ அவருடைய அக்கா பாலம்மாளும் கனவில் தோன்றிப் பரி தபித்ததாகக் கண்டார். ஒருசமயம் அவ ளும் ஒரு சமயம் பிள்ளையாரு மாகக் கனவு இயற்கைப்படி மாறி மாறி வந்து நின்று "அழாதே, அழாதே, எல்லாம் சரியாகப் போகும்!" என்று சொன்னார்கள். அவரும் சிறு பையனைக் கொஞ்ச நேரம் துக்கம் தீர்ந்த நிலையிலிருந்த போது திடீர் என்று சேட்டும் மாற்றுந்தாயும் ராட்சதத் தோற்றமாக வந்தார்கள். உடனே நினைவு வந்து எழுந்து உட்கார்ந் தார். விடியற்காலம். யாரோ வாசற் கதவு தட்டின சத்தம் கேட்டது.

போலீஸார்தான் என்று தீர்மானித் துக் கொண்டார். பிறகு இத வெள்ளிக் கிழமை அல்லவே என்று தைரியம் செய்து கொண்டு எழுந்து கதவைத் திறந்து யார் என்று விசாரித்தார்.

• • •

"நீங்கள் வைத்தியம் பார்த்துச் சுகப்படாமல் இறந்து விட்டார் என்று ஒரு சீட்டு எழுதித் தந்தால் போதும். இந்த ரூ. 5000 உங்களுடையது" என் றார் சிவசுப்பிரமணிய அய்யர்.

"அய்யரே! நீங்கள் சொல்லுவது சரியே. ஆனால் இதில் பல சிக்கல்கள் வந்து சேருமோ என்று சந்தேகமா யிருக் கிறது. இதில் கை வைக்க முடியாது" என்றார் டாக்டர் ஆரோக்கியம்.

"ஒரு அபாயமுமில்லை, டாக்டர்வாள்! நீங்கள் யோசிக்கவே வேண்டாம். நானும் தமிழன்; நீங்களும் தமிழன். உங்களை நான் ஒரு அபாயத்திலும் சிக்க வைக்க மாட்டேன். விஷயங்களை உண் மையாகச் சொல்லி யிருக்கிறேன். ஒன் றும் மறைக்க வில்லை. பெரிய மனது செய்து உதவுங்கள்" என்றார் சிவசுப் பிரமணிய அய்யர்.

சிவசுப்பிரமணிய அய்யர் டாக்டர் பால் ஆரோக்கியத்திடம் சொன்னதாவது:— "அவரும் வயோதிகரான அவர் மாமனா ரும் யாத்திரைக்குப் புறப்பட்டுப் பதிரி முதலிய ஸ்தலங்களுக்குப் போய்விட்டுக் காசிக்கு வந்து சேர்ந்தார்கள். அவ்விடம் செட்டியார் சத்திரத்தில் தங்கினார்கள். மாமனாருக்கு வழியில் வந்த சுரம் தணிய வில்லை. புதன்கிழமை இரவு இறந்து விட்டார். எட்டு நாளாகச் சுரம் அடித் தது. விருத்தாப்பியமும் குடும்பத்தில் ஏற் பட்ட துக்கங்களும்சேர்ந்து கிழவனார் உயி ரைப் புண்ணிய ஸ்தலத்தில் பரமபதம் அடையச் செய்தன. ஒரு வருஷமாகவே அவர் உடல்நலம் சரியாக இருக்கவில்லை. மரணசாசனமும் எழுதி ரகசிய ரிஜிஸ் தரும் செய்து வைத்திருந்தார். அதன் பிரதி அவருடைய பையில் வைத்திருப் பதை நான் பார்த்தேன். இறந்த பிறகு தான் பார்த்தேன். அதன்படி தன்னு டைய நிலங்களைக் குடும்ப சம்ரக்ஷணைக்கு வைத்துவிட்டு ரொக்கச் சொத்தைத் தன் மகளுக்கு – அதாவது என் மனைவிக்குப் போகவேண்டியது என்று ஒரு நிபந்தனை யுடன் எழுதி வைத்திருக்கிறார். தன் உயிர் போவதற்குள் என் மனைவிக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும்என்பது நிபந்தனை. இல்லா விட்டால் தன் ஆண் வாரிஸுக் குப் போகவேண்டி



யது என்று எழுதியிருக்கிறார். டாக்டர் வாள்! உங்களிடம் மறைக்காமல் உண்மை சொல்லுகிறேன். எனக்கு ஒன்றன் பின் ஒன்றாகப் பெண் குழந்தைகளே மூன்று பிறந்தன. நான் ஊரைவிட்டுப் புறப்பட்டபோது என் மனைவி ஏழு மாதம் கர்ப்பிணி. இன்று பகல் பத்து மணிக்கு ஒரு தந்தி வந்தது, இன்று காலை ஆண் குழந்தை சுகப்பிரசவம் ஆயிற்று என்று. இந்தப் பிரசவம் நேற்று இரவு மாமனார் பரமபதமடைவதற்கு முன் நிகழ்ந்திருந்தால் சொத்து மிஞ்சி யிருக்கும். இப்போது அது யாரோ தாயாதி ஒருவனுக்குப்போகும். எங்களுக்குத் தெரியப்படுத்தாமல் அவசரப்பட்டுக் கன்னாபின்னா என்று சரியாக யோசிக்காமல் உயில் சாசனம் எழுதி ரிஜிஸ்தரும் செய்து விட்டார். இதற்கு வேறு வழி இல்லை. யாரோ தாயாதி ஒருவனுக்குப் போய் விடாமல் சொத்தைக் காப்பாற்றுவது உங்கள் கையில் இருக்கிறது. கிழவர் நேற்றிரவு இறந்தாலென்ன, இன்று காலை இறந்தாலென்ன? காசியில் நம் உறவினர் வேண்டியவர்கள் யாருமில்லை. இன்று காலை இறந்தால் சொத்து சின்னா பின்னமாகப் போகாமல் தப்பும். நீங்கள் தமிழர் என்று அறிந்து உங்களிடம் சரண் புகுந்தேன். பிரேதம் இன்னும் தகனம் செய்யப்படவில்லை. ஹனுமான் கட்டத்தில் இன்று செய்து விடப் போகிறேன். நீங்கள் வைத்தியம் பார்த்து இன்று மத்தியானம் இறந்து போனதாக எனக்கு ஒரு சீட்டு எழுதித் தந்தால் போதும். இதில் நீங்கள் யாருக்கும் எந்தத் தீமையும் செய்தவராக மாட்டீர். உங்களுக்கு இதோ இந்த ரூ. 5000 நோட்டாகக் கொடுக்கிறேன். இதைப் பெற்றுக் கொண்டு எனக்கு ஒரு வெற்றுக் காகிதக் கடிதம் எழுதித் தந்து விடவும். நானும் அதை அனுசரித்து ஊருக்கு ஒரு தந்தி அனுப்பி விடுகிறேன். நீங்களும் ஹனுமான் கட்டத்துக்கு இன்று மாலை வந்து தகனக்கிரியை நடப்பதைப் பார்த்து விட்டு என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்றார் சிவசுப்பிரமணிய அய்யர்.

விநாயகப் பெருமானே தம் கஷ்டத்தைத் தீர்க்க இம்மாதிரி யெல்லாம் செய்திருக்கிறார் என்று பால் ஆரோக்கியம் எண்ணினார். பாழும் சேட்டின் தொல்லை தீர்ந்து விட்டது. அவருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு மீந்த பணத்துடன் தென்னாட்டுக்கே போய் எப்படியோ பிழைக்கலாம் என்று தீர்மானித்தார். இனி மதுபானம் வேண்டாம் என்றும் நிச்சயம் செய்து கொண்டார். இதில் பொய்யும் அதிகமாக இல்லை. நேற்று இறந்தால் என்ன, இன்று காலை இறந்தால் என்ன? மகனுக்குப் போக வேண்டிய சொத்து தானே? இது நியாயமாகவே இருக்கிறது என்று மனதில் நிச்சயம் செய்து கொண்டு "கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம்: அவகாசம் கொடுங்கள். பிறகு இருட்டினதும் வாருங்கள், சொல்லுகிறேன்'' என்றார் டாக்டர்.

"வேண்டாம்! ஒன்றும் யோசிக்க வேண்டாம். தகன காரியம் இனித் தாமதிக்க இடமில்லை. இதில் ஒரு மோசமும் இல்லை. இதோ இன்னொரு ஆயிரம் ரூபாய் நோட்டு. இந்த ரூ. 6000 வைத்துக் கொள்ளவும்'' என்று நோட்டுகளை டாக்டர் கையில் பலவந்தமாக மடித்து வைத்து, பேனாவும் கடுதாசியும் எடுத்து நீட்டினார் சிவசுப்பிரமணிய ஐயர்.



டாக்டர் ஆரோக்கியமும் பணத்தைப் பெற்றுக்கொண்டு உள்ளே போய்ப் பெட்டியில் வைத்து விட்டுத் திரும்பி வந்து பேசாமல் பேனாவை எடுத்துக் காகிதத்தில் எழுத உட்கார்ந்தார்.

"உங்கள் பெயர் என்ன?''

"சிவசுப்பிரமணிய அய்யர்.''

'சிவசுப்பிரமணிய அய்யர் என்ற தஞ்சாவூர் பிராமணர் அவருடைய மாமனாருடன் காசிக்கு வந்து யாத்திரையில் கிழவருக்குக்

கண்ட சுரத்துக்கு என்னிடம் சிகிச்சை செய்து வைத்தார். சுரம் தணியவில்லை. விருத்தாப்பியத்தின் காரணம் மருந்து பலிக்கவில்லை. இன்று காலை 10 மணிக்கு இறந்துவிட்டார். சிவசுப்பிரமணிய அய்யர் கேட்டுக் கொண்டபடி இந்த அத்தாட்சிச் சீட்டு எழுதித் தரப்பட்டது'' என்று எழுதித் தந்துவிட்டார்.

சிவசுப்பிரமணிய அய்யர் டாக்டர் பால் ஆரோக்கியத்துக்குச் சாஷ்டாங்க தண்டனிட்டு நமஸ்காரம் செய்தார். "மாலை சுமார் 6 மணிக்கு ஹனுமான் கட்டத்துக்கு வரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.



* * * *

டாக்டர் பால் ஆரோக்கியம் சேட்டுக்குத் தரவேண்டிய பணத்தைத் தந்துவிட்டு ரசீதும் பெற்றார். "இனி திருட்டு வேலையை விட்டுவிடுங்கள். உங்களை மன்னித்தேன்'' என்றார்கள் சேட்டும் கூட இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரும்.

திரும்பி வீட்டுக்கு வரும்போது அன்று விநாயக சதுர்த்தித் திருவிழா. ஒரு கடையில் விநாயகமூர்த்தி ஒன்றை வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தார். கிறிஸ்துவ மதத்தை மனதில் தள்ளிவிட்டு விநாயக தாஸனாய்விட்டார். விளக்கேற்றி மூர்த்திக்குப் பக்தி பரவசமாகப் பூஜை செய்தார். புஷ்பம் சமர்ப்பித்து "ஆண்டவனே! என்னை ரக்ஷித்தாய். இனி நான் உன் அடிமை!'' என்று தியானத்தில் ஒரு நிமிஷம் ஆழ்ந்தார். மாலை ஹனுமான் கட்டத்துக்குச் சென்று சிவசுப்பிரமணிய அய்யருடன் சேர்ந்துகொண்டார். அவருடைய மாமனாரின் உடலை, 'இது வல்லவோ என்னை ஆபத்தினின்று ரக்ஷித்தது!' என்று பார்க்க ஆவல் கொண்டு நெருங்கிப் போய்ப் பார்த்தார்.

பால் ஆரோக்கியம் திடுக்கிட்டார்! தன் தகப்பனார் சாயலாக இருந்ததாக எண்ணினார். மறுபடியும் உற்றுப் பார்த்தார். தகப்பனார்தான். சந்தேகமேயில்லை! ஆனாலும் தகப்பனாருக்கு இரண்டு வேலி நன்செய் இருந்ததே தவிர சொத்து ஒன்றும் பிரமாதமாக இருக்கவில்லையே என்று சந்தேகம் தீராமல் நின்றார்.

கிரியை எல்லாம் அவசரமாகவே முடிந்தது. கங்கைக் கரையில் நடைபெறும் கிரியைகளைப் பற்றித் தெரியுமே! சிவசுப்பிரமணிய அய்யரைத் தம் வீட்டுக்குக் கூட வரும்படி சொன்னார்.

"இல்லை. சத்திரத்தில் இன்னும் சில கிரியைகள் சரியாகப் பிராமணர்களைக் கொண்டு செய்துவிட்டு நாளைக் காலையில் வருகிறேன்'' என்றார் ஐயர்.

• • •

சிவசுப்பிரமணிய அய்யர் விஷயங்களை விவரமாகச் சொன்னார். உயில் சாஸனத்தின் பிரதியையும் காட்டினார்.

"சீர்காழி தாலூகா காட்டுமுனியப்பன் கோயில் கிராமம் மகாதேவய்யர் மகன் சாம்பசிவ அய்யர் எழுதிவைத்த உயில் சாஸனம். என்னுடைய முதல் மனைவியின் வழி பிறந்த மகன் வீட்டை விட்டு ஓடிப்போய் முப்பது வருஷங்களாயின. என் இரண்டாம் மனைவி பெற்ற ஆண் குழந்தை அம்மை வார்த்து இறந்து போயிற்று. என் மூத்த மனைவி மூலம் உண்டான பெண் பாலம்மாள் மிராசுதார் சிவசுப்பிரமணிய அய்யருக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டுச் சுகமாக இருக்கிறாள். அவளுக்கு யாதொரு குறையுமில்லை. என்னுடைய இரண்டு வேலி நிலம் என் இரண்டாம் மனைவி கௌரியம்மாளுக்குச் சேரவேண்டியது. நான் யுத்த கண்டிராக்ட்டு செய்து சம்பாதித்த ரொக்கம் பாங்கியிலிருக்கிறது. இரண்டு லக்ஷம் சொச்சம் ரூபாய். அதில் என் செலவுக்கு நான் அவ்வப்போது எடுத்துக் கொண்டது போக மிஞ்சியுள்ள தொகை முழுதும் எனக்குப் பின் என் ஆயுள் திருமுன் மேற்கண்ட என் மகள் பாலம்மாளுக்கு ஆண் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தைக்குச் சேரவேண்டியது.



அவன் எனக்குக் கருமம்செய்யவேண்டியது. என் ஆயுளுக்குள் அவளுக்கு ஆண் குழந்தை பிறக்காமற் போனால் இந்தரொக்கச்சொத்து மனுஸ்மிருதிப்படி என் ஆண் வாரிசுக்குச் சேர வேண்டியது. அதாவது வீட்டை விட்டு ஓடிப் போன என் மகன் ஒரு வேளை திரும்பி வந்தானால் அவனுக்குச் சேரவேண்டியது. அல்லது என் தாயாதிகளில் யார் என் மரண காலத்தில் நெருங்கியவரோ அவருக்குச் சேரவேண்டியது. இந்த உயில்... தேதியில் ரகசிய ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது."

டாக்டர் ஆரோக்கியம் ஒன்றும் பேசவில்லை. சிவ சுப்ரமணிய அய்யரும் திரும்பிப் போய்விட்டார்.

"எல்லாம் தங்கை பாலுவுக்குத்தானே போகிறது? நான் ஏமாந்தது உண்மையே. ஆனால் இதில் என்ன வருத்தம்?" என்று விநாயகமூர்த்தியைத் தியானித்தார் பால் ஆரோக்கியம்.

• • •

"அண்ணா! திரும்பி வந்தாயா? உன்னைப் பார்த்ததும் அப்பா இறந்து போன துக்கத்தையும் மறந்து விட்டேன். வைத்தி! நீ கிறிஸ்தவனாகப் போனாயே?" என்று வருந்தினாள் பாலம்மாள்.

"இல்லை, பாலு! இதோபார், பூணூல்!" என்று சட்டையைப் பிரித்து மார்பைக் காட்டினார் டாக்டர் பால் ஆரோக்கியம். "இரண்டு லக்ஷ ரூபாய் சொத்தை விட்டு விட்டு 6000 ரூபாய்க்காக முட்டாளாகப் போனேன் பார்த்தாயா?" என்று சொல்லி விட்டுச் சிரித்தார்.

"நீ ஊருக்குத் திரும்பி வந்ததே போதும்! சொத்தில் பாதி நீ வைத்துக் கொள். அதுவுங்கூட வேண்டாம். முழுதும் நீயே எடுத்துக் கொள்" என்று பாலம்மாள் சொல்லி விட்டுக் குழந்தைக்குப் பால் கொடுக்கப் போனாள்.

"அசடு மாதிரி பேசாதே!" என்றார் சிவ சுப்பிரமணிய அய்யர். "அவர் உன் பணத்துக்கா ஆசைப்படுவார்? அவர் மகா வைராக்கிய புருஷர் ஆச்சே? சங்கராச்சாரியர் மடத்துக்குப் போய் சத்சங்கத்தில் சேர்ந்து காலக்ஷேபம் செய்வதாகத் தீர்மானித்திருக்கிறார்!" என்றார்.

சிவசுப்பிரமணிய அய்யர் சொன்னது உண்மைதான். டாக்டர் பால் ஆரோக்கியம் தன் அவதாரத்தை முற்றிலும் மாற்றிக்கொண்டு மறுபடி வைத்தியநாத அய்யராகக் கும்பகோணத்துக்குப் போனார். அங்கே வைதிக கோஷ்டியில் சேர்ந்து யோக்கியமாக வாழ்க்கை நடத்தி ஆசார சிஷ்டராகக் காலம் கழித்தார்.

கவிராயனும் கொல்லனும்

ஐரோப்பாவிலே மஹா கீர்த்தி பெற்ற கவிராயரொருவர் ஒரு கொல்லன் பட்டறை வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அப்போது பாட்டுச் சத்தம் கேட்டது. கவிராயர் உற்றுக் கேட்டார். உள்ளே கொல்லன் பாடிக்கொண்டிருந்தான். அந்தப் பாட்டு அந்தக் கவிராயராலே எழுதப்பட்டது. அதை அவன் பல வார்த்தைகளைச் சிதைத்தும் மாற்றியும் சந்தந் தவறியும் மனம் போனபடிக் கெல்லாம் பாடிக் கொண்டிருந்தான். கவிராயருக்கு மஹா கோபம் வந்து விட்டது; உடனே உள்ளே போய்க் கொல்லனுடைய பட்டறையிலிருந்த சாமான்களைத் தாறுமாறாக மாற்றி வைத்துக் குழப்பமுண்டாக்கத் தொடங்கினார்.




கொல்லன் கோபத்துடன், "நீ யாரடா, பயித்தியம் கொண்டவன்? என்னுடைய சாமான்களையெல்லாம் கலைத்து வேலையைக் கெடுக்கிறாய்?" என்றான்.

"உனக்கென்ன?" என்று கேட்டார் கவிராயர்.

"எனக்கென்னவா! இந்தச் சாமான்களெல்லாம் என்னுடைய சொத்து, தம்பி! என்னுடைய ஜீவனம்!" என்றான் கொல்லன்.

அதற்குக் கவிராயர், "அது போலவேதான், என்னுடைய பாட்டும். நீ சில நிமிஷங்களுக்கு முன்பு பாடிக் கொண்டிருந்த பாட்டை உண்டாக்கிய கவிராயன் நானே: என்னுடைய பாட்டை நீ தாறுமாறாகக் கலைத்தாய்! எனக்கு அதுதான் ஜீவனம். இனிமேல் நீ சரியாகப் படித்துக் கொள்ளாமல் ஒருவனுடைய பாட்டைக் கண்டபடி கொலை செய்யாதே!" என்று சொல்லி விட்டுப் போனார்.—பாரதியார்.

ஹமாம் உண்மையிலேயே இந்திய மக்களின் மனதிற்கிசைந்த ஸோப்பே! ★



★ ஹமாம் வாங்குவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறதென்பதை அசல் விற்பனை புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்!

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்


அது
கேவர்ட்டானல்
மிகவும் நல்லது
Gevaert

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

✱

265. மனசு புனிதம் அடைகிறது!

விபீஷணனை அழைத்து வரப் போன சுக்கிரீவன் அவனைத் தழுவிக் கொண்டான். இருவரும் தழுவி நின்ற நிலையில், "தன் குலத்திற்கு ஏற்ற முறையில் உனக்கு அபயம் கொடுத்திருக்கிறான், ராமன்!" என்கிறான் சுக்கிரீவன்.

தழுவினன் நின்றகா லைத்
  'தாமரைச் செங்கணான், தன்
முழுமுதற் குலத்திற்கேற் ற
  முறைமையால் உவகைமூ ள,
வழுவல்இல் அபயம்உன் பால்
  வழங்கினன்; அவன்பொற்பா தம்
தொழுதியால் விரைவில்,' என் றுக்
  கதிரவன் சிறுவன்சொன் னான்.

[தழுவினன் நின்ற காலை: தழுவினவராக நின்ற சமயத்தில்; தாமரைச் செங்கணான்: ராமன்; தன் முழுமுதற் குலத்திற்கு ஏற்ற முறைமையால்: மூதாதைகள் எல்லாருமே நிற்கும் கருணைக்கும் அறி தேவதையாய் இருந்தவர்கள். யாரையும் குறை சொல்லமுடியாது. அத்தகைய குலத்துக்கு ஏற்றவாறாக; உவகை மூள: மிக்க உவகை கொண்டவனாகவே; வழுவல் இல் அபயம் உன்பால் வழங்கினான்: யாதொரு சந்தேகமும் இல்லாத முறையில் அபயம் உனக்குக் கொடுத்திருக்கிறான்; அவன் பொற்பாதம் தொழுதியால் விரைவில் என்று: அவனது திருவடிகளை விரைவில் வந்து பணிவாயாக என்று; கதிரவன் சிறுவன் சொன்னான்: சூரிய புத்திரனான சுக்கிரீவன் விபீஷணனுக்குச் சொன்னான்.]

* * *

சுக்கிரீவனாகிய வீரன் சொன்ன வார்த்தை எதிர்பாராத வார்த்தையாய் இருந்தது; அதைக் கேட்ட மாத்திரத்தில் விபீஷணன் இதயம் இளகிப் பரவச நிலையை அடைந்து விட்டது. ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாகப் பொழிகிறது.



செங்கய(று) அனையான்சொன்ன
  வாசகம் செவிபுகா முன்,
கங்குலின் நிறத்தினான் தன்
  கண்மழை தாரைகான் ற,
அங்கமும் மனமும்தென் னக்
  குளிர்ந்த(து); அவ் அகத்தைமிக்குப்
பொங்கிய உவகைஎன் னப்
  பொடித்தன உரோமப்புள் ளி.

[செங்கயறு அனையான் சொன்ன: சுக்கிரீவன் சொன்ன; கங்குலின் நிறத்தினான்: கருநிறம் கொண்ட விபீஷணன்; கண்மழைத் தாரை கான்ற: கண்ணீர் மழை தாரை தாரையாய்ப் பொழிந்தது; அங்கமும் மனமும் என்னக் குளிர்ந்தது: மனம் குளிர்ந்து விட்டது. அதை ஒட்டிய உடலுமே குளிர்ந்து விட்டது; அகத்தை மிக்குப் பொங்கிய உவகை என்ன: அப்படிக் குளிர்ந்த மனதில் உண்டான ஆனந்தம் அதிகப்பட்டுப் பொங்கி வெளியாயிற்று என்று சொல்லும்படி; பொடித்தன உரோமப் புள்ளி: ரோமம் எல்லாம் புளகித்தன.]

* * *

இந்தப் பரவச நிலையில் அவமானமும் துன்பமும் வந்து விபீஷணனது இதயத்தைத் தாக்குகின்றன.



வாலிபன் :—என் மாமனார் வீட்டுக்கு நான் இந்த வருஷத்திலே ஒரே ஒரு தடவைதான் போயிருந்தேன்...

கிழவர் :—ஏண்டாப்பா, அப்படி? மாமனார் வீட்டில் ஏதாவது சண்டை போட்டுக் கொண்டாயோ?

வாலிபன் :—சண்டை ஒன்றும் இல்லை. எட்டு மாதத்துக்கு முன்னால் போயிருந்தேன்; நேற்றுத்தான் அங் கிருந்து திரும்பி வந்தேன்!

பஞ்செனச் சிவக்கும்மென்கா ல்த்
தேவியைப் பிரித்தபா வி
வஞ்சனுக்(கு) இளையஎன் னை
வருகஎன்(று) அருள்செய்தா னே!

தஞ்செனக் கருதினா னே!
தாழ்சடைக் கடவுள்உண் ட
நஞ்செனச் சிறந்தேன்அன் றோ,
நாயகன் அருளின்நா யேன்!

[பஞ்செனச் சிவக்கும் மென்கால்: செந்நிறக் குழம்பு தோய்ந்த பஞ்சுதானோ என்று சந்தேகிக்கக் கூடிய இயல்பிலேச் சிவந்த மெல்லிய பாதம் கொண்ட; தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கு: சீதாதேவியை எடுத்து வந்த பாவியாகிய ராவணனுக்கு; இளைய என்னை வருக என்று அருள் செய்தானே: தம்பியாகிய என்னையும் வரட்டும், என்று சொல்லி அருளினானே: தஞ்செனக் கருதினானே: உண்மையிலேயே அடைக்கலத்துக்கான ஒருவன் என்று எண்ணினானே: தாழ் சடைக் கடவுள் உண்ட நஞ்செனச் சிறந்தேன் அன்றோ: நாலா திசையும் படர்ந்து தாழும் சடையோடு ஆடும் சிவபெருமான் உட்கொண்ட நஞ்சைப்போல உயர்ந்த பொருளாய் அல்லவா ஆகிவிட்டேன்; நாயகன் அருளின் நாயேன்: ராமபிரானது கருணையினால் அல்லவா எளியேன் சிறந்தேன்!

குறிப்பு :—சிவபெருமான் உட்கொண்ட காரணத்தினாலேயே விஷமானது உயர்வு பெற்று விட்டது என்ற விஷயம், விபீஷணனது மன நிலையை அபூர்வமான உண்மையோடு வெளிப்படுத்துகிறது.]

* * *

இயற்கையிலேயே சிலர் தூய உள்ளமும் இரக்கமும் படைத்தவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் அவர்களைச் சுற்றி உள்ளவர்கள் எல்லாரும் பாவத் தொழிலில் மூழ்கியவர்களாய் இருக்கிறார்கள். அதைச் சகிக்க முடிவதில்லை அந்தத் தூய உள்ளம் படைத்தவர்களுக்கு; தங்களைச் சதா வெறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வெறுத்துக் கொண்டிருப்பவர்களை இன்னும் இந்த உலகத்தில் நாம் பார்க்கிறோம்.

விபீஷணன் அப்படி வெறுத்துக் கொண்டிருக்கிற ஒரு தூய பாத்திரம்.

தனக்கு விமோசனமே இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்த விபீஷணனது உள்ளத்துக்கு இப்போது எதிர்பாராதபடி அமைதி ஏற்படுகிறது.

'உலகத்தில் யாரும் உறவில்லை; துறவறமே தங்களுக்கான உறவு' என்று எண்ணும் தூயவர்களுக்கே ஒரு துணைவனும் உள்ளவன் ராமன். அவனல்லவா என்னை உறவெனக் கருதி அடைக்கலம் தந்திருக்கிறான்!

துறவெனும் உறவுபூண் ட
தூயவர் துணைவன்,என் னை
உறவுதந் தருளி,மீ ளா
அடைக்கலம் உதவினா னே!
மறவினை நீக்கல்இல் லா
மாயமும் மாயவாழ்க் கைப்
பிறவியும் பெயர்த்தேன்,பின் னும்
நரகினிற் பிழைப்பதா னேன்.

[தூயவர் துணைவன்: ராமன்; மறவினை நீக்கல் இல்லா: கொடுஞ் செயலோடே ஒட்டியுள்ள; மாயமும் மாய வாழ்க்கைப் பிறவியும் பெயர்த்தேன்: மோசம் செய்யும் செயல்களுக்கும் மோசமான வாழ்க்கைக்கும் உரியதான பிறப்பை ஒழித்தேன்; பின்னும் நரகினிற் பிழைப்பதானேன்: நரகம் என்று சொல்லுகிறார்களே, அது இனி எனக்குக் கிடையாது, தப்பி விட்டேன்!]

* * *

இவ்வாறாகத் தன் இதயத்தில் பொங்கிப் பொங்கி வந்த கஷ்டங்களை

யும் துன்பங்களையும் சுக்கிரீவன் முன்பாகக் கொட்டுகிறான் விபீஷணன். அதில் அவனுக்கு எதிர்பாராத ஆறுதல் உண்டாகிறது.

இத்தகைய ஆறுதலைக் குறித்தே குறளாசிரியர்,

"புறந்தூய்மை நீரான்
அமையும்; அகந்தூய்மை
வாய்மையால் காணப்
படும்."

என்று சொன்னார். மிகவும் உண்மையான விஷயம்.

புறமாகிய உடம்பு தண்ணீரால் சுத்தமடைகிறது. அதேபோல உண்மையை வெளியிட்டுச் சொல்லுவதால் உள்ளம் பரிசுத்தம் அடைகிறது.

அப்படிப் பரிசுத்தம் அடைகிறது விபீஷணனுடைய உள்ளம்.

குற்றம் என்பது இல்லாதிருந்தும் குற்றத்துக்கு உள்ளானமாதிரி துன்பப்படுகிறான். அவனுடைய தூய உள்ளத்துக்கு அமைதி உண்டாகிறது.

மண்ணுலகம்

திருவல்லிக்கேணியிலே "செ... ஸங்கம்" என்பதாக ஒரு தேசபக்தர் சபை உண்டு. அதில் தேச பக்தர்கள்தான் கிடையாது. நானும் சிற்சில ஐயங்கார்களுமே சேர்ந்து, "காரியங்கள்"—ஒரு காரியமும் நடக்க வில்லை — நடத்தினோம். நாங்கள் தேசபக்தர்கள் இல்லையென்று, அந்தச் சபை ஒன்றுமில்லாமற் போனதிலிருந்தே நன்கு விளங்கும்.

நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர்களெல்லாம் புளியஞ்சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத் தொண்டர்; 'காசு'வின் அடியார்க்கும் அடியார்.

ஆனால், எங்களிலே ஒவ்வொருவனும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும்படியாக இருக்கும். பணத் தொண்டரடிப்பொடி யாழ்வார் எங்களெல்லோரைக் காட்டிலும் வாய்ப் பேச்சில் வீரர். ஒருவன் வானத்தை வில்லாக வளைக்கலா மென்பான். மற்றொருவன் மணலைக் கயிறாகத் திரிக்கலா மென்பான். இன்னொருவன் "சியாம்ஜீ கிருஷ்ண வர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷமாகு மென்று கணக்குப் போட்டிருக்கிறார். ஆறு வருஷத்தில் கிடைத்துவிடுமென்று எனக்குத் தோன்றுகிறது" என்பான். தலைமையுருவங் கொண்ட மூன்றுமொருவன் "ஆறு மாதமென்று சொல்லடா!" என்று அவன் சொன்ன தவணையைத் திருத்திக் கொடுப்பான்.



ப...... ஆழ்வார் எங்களிலே முக்கியஸ்தர்.

அவர் இதையெல்லாம் கேட்டுப் பரமானந்த மடைந்து கொண்டிருப்பார். ஆனால், ஒரு தேவதை அவரிடம் வந்து, "உங்களுக்கு நான் ஸ்வராஜ்யம் நாளை ஸூர்யோதயத்திற்கு முன்பு சம்பாதித்துக் கொடுக்கிறேன். நீ உன் வீட்டிலிருந்து அதற்காக ஒரு வராகன் எடுத்துக்கொண்டு வா!" என்று சொல்லுமாயின், அந்த ஆழ்வார், "தேவதையே, உனக்கு வந்தனம் செய்கிறேன். ஓம் சக்த்யை நம; ஓம்பராயை நம; இத்யாதி. அம்பிகே, இந்த உபகாரத்துக்கு நாங்கள் உனக்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகிறோம்? எங்கள் உடல், பொருள், ஆவி மூன்றும் உன்னுடையதே யாகும். ஆனால், ஒரு வராகன் கேட்ட விஷயத்தைப் பற்றி நான் ஒரு வார்த்தை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதைக் கேள்: நீ சொல்லுகிற காரியமோ பொதுக் காரியம். அதற்குப் பொது ஜனங்கள் பணம் சேர்த்துக் கொடுப்பதே பொருத்த முடையதாகும். நான் ஒருவன் மட்டிலும் கையிலிருந்து பணம் செலவிடுதல் பொருத்தமன்று. இவ் விஷயத்தைப் பற்றி நாங்கள் அடுத்த வாரம் கூடப் போகிற 'மீட்டிங்'கில் பேசித் தீர்மானம் செய்கிறோம். அதன் பிறகு நீ பெருங் கருணையுடன் எழுந்தருள வேண்டும். இப்போது போய் வருக; வந்தே மாதரம்!" என்று மறுமொழி சொல்லியனுப்பிவிடுவார்.

ஐயோ! என்ன உலகமடா, இந்த மண்ணுலகம்! —பாரதியார்.

எமனையும் வென்றார்!

சபரி



திருவல்லிக்கேணியில் துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் ஒரு வீடு. கவிச்சக்கரவர்த்தி சுப்ரமணிய பாரதியார் நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் ஏதோ விரைவாக எழுதிக்கொண்டிருக்கிறார். அப்போது அவருடைய கடைசிப் புதல்வி சகுந்தலா ஓடோடியும் வந்து பாரதியாரிடம், "அப்பா, வாசலில் யாரோ ஒருவன் எருமைக் கடாவுடன் வந்திருக்கிறான். அவனைப் பார்த்தால் ரொம்பப் பயமாயிருக்கிறது!" என்றாள்.

பாரதியார் சற்று நேரம் யோசித்தார். பிறகு, தாம்பூலம் போட்டு செக்கச் செவேலென்று சிவந்துபோயிருந்த தமது திருப்பவளச் செவ்வாயைத் திறந்து கடகடவென்று சிரித்துவிட்டு, தம் புதல்வியை நோக்கி, "அம்மா, இப்போது அவன் வாசலில் இருக்கிறானா?" என்று கேட்டார்.

"ஆமாம், அப்பா! அவன் என்னைப் பார்த்து, 'அப்பா வீட்டில் இருக்கிறாரா?' என்று கேட்டான். நான் பார்த்துவிட்டு வந்து சொல்லுவதாக ஓடி வந்தேன். அவன் யார், அப்பா?"

பாரதியார் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு, மீசையையும் நன்றாக முறுக்கிவிட்டுக்கொண்டு, "அம்மா, போய் அந்த தடிப் பயலை சீக்கிரமாக இங்கே வரச் சொல்லு!" என்றார்.

* * *

அமாவாசை இருட்டைப் போல விளங்கிய கரிய திருமேனியுடனும், தழல் கக்கும் விழிகளுடனும், பெருந் தூண்களைப் போன்ற புஜங்களுடனும் மலையைப் போல விளங்கிய விசாலமான மார்புடனும் ஒரு ஆசாமி உள்ளே வந்தான். அவனுடைய முகத்திலே கோபம் பொங்கித் ததும்பியது. வெறும் கண் நோக்கினாலேயே எல்லாப் பொருள்களையும் சுட்டு எரித்துவிடுபவன் போலத் தோன்றினான். அவனைப் பார்த்ததும் பாரதியார் தம் கைகள் இரண்டையும் குவித்து இறைஞ்சி, "வரவேண்டும், வரவேண்டும். எமதர்மப் பிரபு! உம்முடைய வரவு நல்வரவாகட்டும்" என்று சொல்லிவிட்டுத் தமக்கு எதிரேயிருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டி, "உட்காரும்" என்றார்.

பொங்கி வரும் கோபம் என்னும் பெருநெருப்பை ஒரு வகையாக அடக்கிக்கொண்டு, எமன் அந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அவனுடைய சுமையைப் பொறுக்க மாட்டாமல் அந்த இரும்பு நாற்காலி கூடக் கொஞ்சம் வளைந்தது. "சுவாமி, 'ஸ்ட்ராங்'காக ஒரு கப் காப்பி சாப்பிடுகிறீரா?" என்று கேட்டார் கவிஞர் பெருமான், இனிமையும் தெளிவும் கம்பீரமும் மிகுந்த தம்முடைய வெண்கல மணித் தொண்டையிலே.

கடுகடுப்பு மிகுந்த முகத்திலே, வெறுப்பும் உதாசீனமும் ததும்ப, "வேண்டாம்" என்றான் கூற்றுவன்.

"வெற்றிலையாவது போடுங்கள்!" என்று சொல்லிவிட்டு வெற்றிலைச் செல்லத்தை எடுத்து அவர் முன்பு வைத்தார் பாரதியார்.

"போதும்! நிறுத்தும் உபசாரத்தை!" என்று இடி முழக்கம் செய்தான் தென் திசைக் கோமான். திக்குகள் எட்டும் அண்டமும் குலுங்கியது அந்த இடி முழக்கத்திலே.

அப்போது மூன்று மாத வாடகை பாக்கியைக் கேட்பதற்காக முத்தியாலு செட்டியார் வெகு வேகமாக உள்ளே வந்தார். செட்டியாரைப் பார்த்ததும் பாரதியார், "வாரும், செட்டியாரே, வாரும்!" என்று புன்னகையும் குதூகலமும் முகத்தில் ஒருங்கே ததும்ப உபசரித்துவிட்டு எமனைக் கடைக்கண்ணால் நோக்கினார். எமன் திரும்பி அந்தப் பேர்வழி யார் என்று பார்த்தான். எமனுடைய பயங்கரமான முகத்தைச் செட்டியார் பார்த்தாரோ இல்லையோ, அவ்வளவுதான் — உளறியடித்துக் கொண்டு ஓட்டோட்டமாக வெளியே ஓடிப் போய் விட்டார்!

பாரதியாருக்குச் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் அதை ஒரு வகையாக அடக்கிக் கொண்டு, எமனை நோக்கி "பிரபு, நீர் இந்த வீட்டிலேயே ஒரு மாதம் ஜாகை வைத்துக் கொண்

டிருந்தால் எனக்கு எவ்வளவு சௌகரியமாக இருக்கும்! ஒரு கடன்காரன் கூடக் கிட்டே அண்டமாட்டான்'' என்றார்.

"நிறுத்து, பரிகாசத்தை! — ஜோகை வைத்துக் கொள்வதற்காக நான் இங்கு வரவில்லை'' என்றான் எமன்.

"அப்படியானால் வேறு எதற்காக வந்திருக்கிறீர்கள், சுவாமி?'' என்று கேட்டார் கவிஞர்.

"எனக்கு நேர்ந்த அவமானத்தைப் போக்குவதற்காக, எனக்கு நீ இழைத்த அபகீர்த்திக்காக உன்னைப் பழி வாங்க வந்திருக்கிறேன்.''

"அவமானமா? அபகீர்த்தியா? — என்ன இது! நீங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லையே!''

இதைக் கேட்டதும் எமனுடைய கண்களிலே கோபத்தீ கொழுந்து விட்டு எரிந்தது. "ஆம், உனக்குத் தெரியாது. உனக்கு எப்படித் தெரியும்? தெரியும்படி செய்கிறேன்'' என்று சொல்லி விட்டு மேஜைமீது ஓங்கி ஒரு குத்து விட்டான்.

பாரதியாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. எமன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்: "உன்னைப்போல ஒரு கவியாவது என்னை இவ்வளவு கேவலமாகப் பாடியதே இல்லை. என் பெருமை என்ன! புகழ் என்ன! மூவுலகமும் என் பெயரைக் கேட்டதும் கதி கலங்குமே! — அப்படியிருக்கும்போது நீ என்னை எவ்வளவு துச்சமாகவும் அவமரியாதையாகவும் பாடிவிட்டாய்! 'காலா! உனை நான் சிறுபுல் எனவே மதிக்கின்றேன்— சற்று வாடா என் காலருகே!'— இப்படியா பாடுவது? என்ன அகம்பாவம்! என்ன திமிர்! — நான் புல்லா, நீ புல்லா என்பதை இப்போது காட்டுகிறேன்.''

இதைக் கேட்டதும் பாரதியார் தமக்கு வந்த சிரிப்பை அடக்க முடியாமல் கடகடவென்று சிரித்துவிட்டார். "இவ்வளவு தானா? தர்மராஜனே, உமக்கு ரசிகத் தன்மை மிகவும் குறைவு!'' என்றார்.

அவ்வளவுதான்! — அதற்குமேல் பொறுக்க முடியுமா எமனால்? — எழுந்தான். பாசக் கயிற்றைக் கையில் எடுத்தான். "ஹே பாரதி! என்னை அவமதித்த உன்னைச் சும்மா விட்டுப்போவதில்லை. இதோ, சூலத்தையும் பாசத்தையும் எறிந்து மரணப் பெருவெள்ளத்திலே உன்னை ஆழ்த்தப் போகிறேன்'' என்றான்.

பாரதியார் எமனை நோக்கிச் சொன்னார்: "என்ன சொன்னாய்? என்ன சொன்னாய், நீ?—மரணமா? எனக்கா?— கிடையாது, ஒரு நாளும் கிடையாது! நான் சிரஞ்சீவி. எனக்கு மரணமே கிடையாது, மூடனே! கவிகளை அழிக்க உனக்கு வலுவு ஏது?'' என்றார்.

எமன் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டான்.

இந்தச் சமயத்தில் குழந்தை சகுந்தலை அங்கு ஓடி வந்து, "அப்பா வாசலில் இருந்த எருமைக்கடாவைக் காணோம். போலீஸார் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள் போலிருக்கிறது!'' என்றான்.

அவ்வளவுதான்; எமன் நாற்காலியை விட்டுக் குதித்தெழுந்து வெளியே ஓடினான். குழந்தை சகுந்தலாவும் ஸ்ரீமதி செல்லம்மாவும் கதவை இழுத்துப் பூட்டித் தாளிட்டார்கள்.

"எப்போது முடியும்?"

நானிருக்கும் தெருவுக்குப் பக்கத்துத் தெருவிலே ஒரு சாஸ்திரியார் இருக்கிறார். நல்ல வைதிகர்; அத்தியயனத்திலே புலி; சிராத்தம் பண்ணி வைப்பதிலே ஸாக்ஷாத் வியாழக்கிழமைக்கு (பிருஹஸ்பதி பகவானுக்கு) நிகரானவர். அவர் வீட்டிலே அவர் ஒரு கக்ஷி. மூத்தாள் பிள்ளை முத்துஸாமியும், அவன் மனைவியும் ஒரு கக்ஷி — ஆக மூன்று கக்ஷிகளாக இருந்து பல வருஷங்களாக இடைவிடாமல் சண்டை நடந்து வருகிறது. அவர் இன்று காலை என்னிடம் வந்து, "என்ன வாசித்துக் கொண்டிருக்கிறீர்?'' என்று கேட்டார்.

"சுதேசமித்திரன் பத்திரிகை வாசித்துக்கொண்டிருக்கிறேன்.''



"இந்தச் சண்டை எப்போது முடியும்?'' என்று கேட்டார்.

நான் ஏதோ ஞாபகத் தவறாக, "நீங்கள் வேறு குடும்பம், உங்கள் பிள்ளை முத்துஸாமி வேறு குடும்பமாகக் குடியிருக்க வேண்டும். உங்கள் பத்தினியும், அவன் மனைவியும் சந்திக்க இடமில்லாதபடி ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது ஒருவேளை முடியலாம்'' என்றேன்.

"சரி, நான் போய் வருகிறேன்!'' என்று கோபத்துடன் எழுந்து போய்விட்டார்.

சாஸ்திரியார் கேட்டது ஐரோப்பா யுத்தத்தைப்பற்றியது என்ற விஷயம் அவர் போன பிறகு தெரிந்தது. -பாரதியார்

புகழரசி

விந்தன்

காலதேவன் வழக்கம்போல் வான வீதியில் பவனி வந்துகொண்டிருந்தான். எழில் மிகுந்த புகழரசி மணம் மிகுந்த மலர் சூடி அவனுக்கு எதிரே வந்தாள்.

வரையறை யற்ற வயதான போதிலும் வற்றாத இளமையுடன் விளங்கிய அந்த வானுலக வாசிகள் இருவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்னகை பூத்தனர்.

"வா, வா! நெடுநாட்களாக உன்னை நான் தேடிக்கொண் டிருந்தேன்; எதிர்பாராத விதமாக உன்னை இன்று சந்தித்ததில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி!" என்றான் காலதேவன்.

"ஏனாம்?" என்று பெண் குலத்துக்கே உரித்தான நெளிவு குழைவுகளுடனும் அங்க அசைவுகளுடனும் நெஞ்சை யள்ளும் நீங்குரலில் புகழரசி என்று பெயர் பெற்றிருந்த அந்த அழகரசி கேட்டாள்.

"பூலோகத்திலுள்ள கலைஞர்களைப் பற்றி உன்னிடம் நான் சிறிது நேரம் பேச வேண்டும். எனக்குத்தான் நிற்க நேரமில்லை யென்று உனக்குத் தெரியுமே? ஏறிக் கொள், இரதத்தில்!" என்றான் காலதேவன்.



புகழரசி மறுக்கவில்லை; உடனே ஏறிக் கொண்டாள்.

"இந்தக் கலைஞர்கள் இருக்கிறார்களே, அவர்கள் மிகவும் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள்! உன்னுடைய தலையை உருட்டுவதற்குப் பதிலாக அவர்கள் என்னுடைய தலையைத் தினந்தோறும் உருட்டுகிறார்கள்!" என்று ஆரம்பித்தான் காலதேவன்.

புகழரசிக்கு விஷயம் புரிந்து விட்டது. ஆனால் பதில் ஒன்றும் சொல்லவில்லை; அதற்குப் பதிலாக அவள் சிரித்தாள்.

"நான் ஓடிக் கொண்டே இருக்கிறேனும்; நீயோ அவர்களைக் கடைக் கண்ணால்கூடப் பார்க்கவே மாட்டேன் என்கிறாயாம்!" என்றான் காலதேவன்.

"காலம் போய்க் கொண்டே இருக்கிறது, கனவு நனவாக வில்லை என்றுதானே அவர்கள் கவலைப்படுகிறார்கள்?" என்று கேட்டாள் புகழரசி.

"ஆமாம், ஆமாம்."

"அதற்காக யாராவது கவலைப்படுவார்களோ?"

"கவலைப்படாமல் வேறு என்ன செய்வது? கலைத் தொண்டோ தற்சமயம் பூலோகத்தில் பலனை எதிர்பாராமல் செய்ய வேண்டிய கருமமாயிருக்கிறது. கிருஷ்ண பரமாத்மா கலைஞர்களுக்கென்றே அந்தக் கீதோபதேசத்தைச் செய்திருக்கிறாரோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. மற்றவர்களைப் போலவே வாயும் வயிறும் படைத்தவர்கள் கலைஞர்கள் என்பதை யார் மறந்தாலும் அவர்கள் மறக்க முடியுமா? மறக்க முயன்றாலும் வாயும் வயிறும் அவர்களைச் சும்மா விடுமா? இருந்தாலும் அவற்றை அவ்வளவாகப் பொருட் படுத்தாமல் தங்களுடைய ஆத்ம திருப்திக்காக அவர்கள் கலைத் தொண்டில் இறங்குகிறார்கள். இந்த லட்சணத்தில் பலன் பொருளாகக் கிடைக்காவிட்டாலும் புகழாகவாவது கிடைக்க வேண்டாமா?"

"திறமை யிருந்தால் புகழ் அவர்களைத் தேடிக்கொண்டு வருகிறது!"

"திறமை யில்லாதவர்களைப் பற்றி இப்பொழுது நான் பேசவே யில்லையே! திறமை யுள்ளவர்களைப் பற்றித்தானே பேசுகிறேன்?"

"அதற்கு அவசரப்பட்டால் முடியுமா? பொறுத்திருந்து பார்க்க வேண்டும்."

"எவ்வளவு காலம் பொறுப்பது? நானாவது அவர்களுக்காக நின்று தொலைக்

கிறேனா? அதுவும் இல்லை. ஓடிக் கொண்டே இருக்கிறேன்......''

"வேண்டுமானால் அவர்கள் ஒன்று செய்யலாமே! உங்களைத்தான் அவர்களால் நெருங்க முடியாது; நெருங்கினாலும் பிடித்து நிறுத்த முடியாது. கடிகாரத்தைக் கூடவா அவர்களால் பிடித்து நிறுத்த முடியாது?''



"வேடிக்கைதான்; கடிகாரத்தை நிறுத்தினால்......''

"கனவு நனவாகும் வரை காலம் போகாமலிருக்கிறது!'' என்று சொல்லி விட்டுப் புகழாசி, 'கலகல'வென்று நகைத்தான்.

"அபூர்வமான யோசனைதான்! பொழுது விடிய வேண்டாம் என்பதற்காக யாரோ ஒருத்தி சேவற் கோழியை எடுத்து ஒளித்து வைத்தாளாமே, அவள் கூடப் புத்திசாலித்தனத்துக்கு உன்னிடம் பிச்சை எடுக்க வேண்டும். ஆனால் இந்த அருமையான யோசனையை அவர்களிடம் நான் சொல்ல முடியுமா? நீதான் சொல்ல வேண்டும்'' என்றான் காலதேவன்.

"நான்தான் உயிரோடிருக்கும்வரை அவர்களை நாடுவதே கிடையாதே!''

"அப்படியானால் அவர்கள் சொல்வது ரொம்ப சரி!''

"என்ன சொல்கிறார்கள்?''

"செத்தாரைத்தான் நீ வாழ வைப்பாய் என்று அவர்கள் உன்னைப் பரிகசிக்கிறார்கள்!''

"உண்மை; அதற்குக் காரணம் என்னவென்று தெரிந்தால் அவர்கள் என்னைப் பரிகசிக்க மாட்டார்கள்.''

"அது என்ன காரணம்?''

"மனிதன் உயிரோடிருக்கும்போது குற்றமுள்ளவனாயிருக்கிறான்; குற்றமற்றவனாயிருந்தாலும் மற்றவர்களால் குற்றமுள்ளவனாகக் கருதப் படுகிறான். இதற்குக் கலைஞனும் விதிவிலக்கல்ல.''

"இறந்த பிறகு......?''

"மனிதனும் சரி, கலைஞனும் சரி—குற்றமற்றவர்களாகிறார்கள். மரணம் அவர்களுடைய குற்றங்களை ஜீரணித்துக் கொண்டு விடுகிறது!''

"அப்படியானால் மரணத்துக்குப் பிறகுதான் நீ அவர்களை நாடுவாயோ?''

"ஆமாம்; மரணத்துக்குப் பிறகுதான் அவர்கள் குற்றமற்றவர்களாகிறார்கள்.''

"இந்த அக்கிரமத்தைத்தான் அவர்கள் வெறுக்கிறார்கள்!''

"இதில் என்ன அக்கிரமம் இருக்க முடியும்?''

"செத்த பிறகு நீ கலைஞர்களை நாடும் அக்கிரமந்தான்; அதனால் அவர்களுக்கு என்ன பயன்?''

"பயன் இல்லாமல் என்ன? என்னுடைய அருளைப் பெறாத மனிதர்கள் மரணத்துக்குப் பின் மண்ணோடு மண்ணாக மறைகிறார்கள்; என்னுடைய அருளைப் பெற்ற கலைஞர்களோ மரணத்துக்குப் பின் அமரர்களாகி மனித உள்ளத்தில் என்றும் நீங்காத இடத்தைப் பெறுகிறார்கள்.''

"அந்த இடத்தை அவர்கள் ஜீவியவந்தர்களாயிருக்கும்போதே பெற்றால் என்ன?''

"அதனால் அவர்களுக்கு நன்மையில்லை!''

"நன்மையில்லா விட்டாலும் தீமையொன்றும் இல்லையே?''

"தீமை வேண்டியமட்டும் இருக்கிறது. புகழினால் கர்வமடையும் கலைஞர்களுமுண்டு; பெருமையடையும் கலைஞர்களுமுண்டு. கர்வம் கலையைக் குலைக்கும்; பெருமை கலையை வளர்க்கும். இது எப்படியானாலும் உயிரோடிருக்கும்போது ஒரு கலைஞனுக்குக் கிடைக்கும் புகழை உண்மையான புகழ் என்று ஜனங்கள் நம்ப மாட்டார்கள்.''

"ஏன் நம்ப மாட்டார்கள்?''

"கலைஞன் உயிரோடிருக்கும்போது அவனுடைய குற்றங்கள் பெரிதாகவும் கலைத் திறன் சிறிதாகவும் ஜனங்களுக்குத் தோன்றுகிறது. ஆகவே, என்னுடைய அருள் ஒரு கலைஞனுக்கு அவனுடைய ஜீவிய காலத்தில் நியாயமாகக் கிடைத்தாலும், ஏதோ காரியார்த்தமாக நாலு பேர் சேர்ந்துகொண்டு அவனைத் தூக்கிவிடுவதாக ஜனங்கள் புறம் பேசுகிறார்கள். அசூயையும் பொறாமையும் சேர்ந்து அவர்களுடைய உள்ளத்தை அவ்வாறு கெடுத்துவிடுகிறது!''

"கெட்டவர்களுடைய உள்ளத்தைத் தானே கெடுக்கிறது? நல்லவர்களுடைய உள்ளத்தைக் கெடுக்கிறதில்லையே?"

"கட்டாயம் கெடுக்கிறது; நல்லவர்களுடைய உள்ளத்தையும் கெடுக்கும் சக்தி அருமைக்கும் பொறுமைக்கும் இருக்கத்தான் செய்கிறது!"

"அதனால் என்ன? ஜனங்கள் நம்பினால் நம்பட்டும்; நம்பாவிட்டால் போகட்டுமே!"

"ஜனங்கள் நம்பவில்லையென்றால் கலைஞனுக்கு என்னால் கிடைத்த புகழினால் எந்தவிதமான பெருமையும் இருக்காது. பெருமையற்ற புகழை ஒரு கலைஞன் அடைவதும் ஒன்றுதான்; அடையாமலிருப்பதும் ஒன்றுதான்!"

"அதற்காகக் கலைஞர்கள் சாகும்வரை உன்னை நினைந்து உருகுவதா? அவர்கள் மேல் உனக்குக் கொஞ்சமாவது இரக்கம் இல்லையா?"

"இரக்கம் இருப்பதால்தான் மரணத்துக்குப்பின் அவர்களை நான் நாடுகிறேன்; மக்களின் அவதூறிலிருந்து அவர்களைக் காக்கிறேன்; மங்காத புகழை அவர்களுக்கு அளிக்கிறேன்; என்னால் அவர்களுடைய பூதவுடல் கர்வமடையாமல் புகழுடல் பெருமையடைய வேண்டுமென்று விரும்புகிறேன்; அதன் பயனைக் கலையைக் குலைக்காமல் வளர்க்கிறேன். இந்த உண்மையை அறியாத கலைஞர்கள் சாகும் வரை என்னை நினைந்து உருக வேண்டியதே!" என்று சொல்லிவிட்டு, ஓடும் இரதத்திலிருந்து கீழே குதித்தாள் புகழரசி.

"அப்படியானால் அதுவரை அந்த அப்பாவிக் கலைஞர்கள் என்னுடைய தலையை உருட்டிக் கொண்டே இருக்க வேண்டியதுதானா!" என்றான் காலதேவன் ஏமாற்றத்துடன்.

புகழரசி சிரித்துக் கொண்டே அவனுடைய பார்வையிலிருந்து மறைந்தாள். அந்த உல்லாசக்காரியின் சிரிப்பொலி நெடுநேரம் வரை காலதேவனின் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.


கந்தர்வ லோகம்

மனம் என்னும் ஞானரதத்தில் ஏறிக் கந்தர்வலோகத்திற்குப் போய் வந்த பாரதியார் எழுதுவதாவது:—

கந்தர்வ லோகத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடனே என்னை யறியாமல் ஓர் ஆனந்தம் உண்டாயிற்று. அதிரமணீயமான ஸங்கீதத் தொனி கேட்டது. அவ்வொலி பொன்னாற் செய்யப்பட்ட தொண்டையினையுடைய பெண் வண்டுகளின் ரீங்காரம்போலிருந்தது. அன்று; அது சரியான உவமையாக மாட்டாது. உயிருக்குள்ளே இன்னிசை மழையை வீசிக்கொண்டேயிருந்தது போலத் தோன்றிய அவ்வொலிக்கு இன்ன உவமை சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. "இது என்ன ஒலி! எங்கிருந்து வருகிறது?" என்று யோசித்தேன். எனது அறிவிற்குப் புலப்படவில்லை. கண்களோ பரவசமடைந்து போயின. அங்குள்ள மாடங்களும், மாளிகைகளும், கோயில்களும், கோபுரங்களும், நாடக சாலைகளும்—எல்லா வீடுகளும் சந்திர கிரணங்களைப் போன்ற, குளிர்ந்த இனிய பொன்னொளி வீசிக்கொண்டிருந்தன. இவற்றிலும், மற்ற மண், கல், தரை முதலிய எல்லாப்பொருள்களிலுமே அவ்வொளி அநேக விதமான வர்ண வேறுபாடுகளுடன் கலந்திருக்கக் கண்டேன்.



இதை வாசிப்பவர்களே! நீங்கள் எப்போதாயினும் மாரி காலத்தில் மழையில்லாத மாலைப் பொழுதிலே கடற்கரை மணல்மீது இருந்து கொண்டு, வானத்தில் மேற்புறத்தில் ஸூரியன் அஸ்தமிக்கும்போது, ரவி கிரணங்கள் கீழ்த்திசையிலுள்ள மெல்லிய மேகங்களின் மீதும் இடையிடையே தெரியும் வான வெளிகளின் மீதும் வீச, அதனின்றும் ஆயிர விதமான மெல்லிய அற்புதகரமான வர்ண வேறுபாடுகள் தோன்றுவதைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த மண்ணுலகிலே உங்களுக்குப் ப்ரக்ருதி தேவியின் ஸௌந்தர்யங்களைப் பார்த்துப் பரவசமடைய அவகாசம் அடிக்கடி ஏற்பட்டிராது.



அத்தியாயம் 42

லலிதாவின் மன்னி

தேவ பட்டணத்துத் தேரோடும் வீதியில் எதிர் எதிராக நின்ற இரு மச்சு வீடுகளின் வாசலிலும் இப்போது போர்டு பலகைகள் தொங்க வில்லை. அட்வகேட் ஆத்மநாதய்யரைப் பின் தொடர்ந்து அவருடைய நண்பர் தாமோதரம் பிள்ளையும் தேவலோக நீதிமன்றத்தில் வழக்காடுவதற்குச் சென்று விட்டார்.

"ஆத்மநாதய்யர் பி. ஏ., பி. எல்." என்ற போர்டு தொடங்கிய இடத்தில் சிலகாலம் "ஸ்ரீ பட்டாபிராமன், சேர்மன், முனிசிபல் கௌன்சில்" என்ற போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அதைச் சீக்கிரத்திலேயே எடுத்துவிட வேண்டியதாயிற்று. ஏனெனில், பட்டாபிராமனுக்குப் போட்டியாக நின்ற கள்ளமார்க்கெட் முதலாளி பட்டாபிராமனுடைய தேர்தலில் ஊழல் நடந்ததாகவும் ஆகையால் அந்தத்தேர்தல் செல்லுபடியாகாதென்றும் வழக்குத் தொடர்ந்தார். பணத்தின் பலத்தினால் கள்ளமார்க்கெட் ஆசாமியின் பக்கமே தீர்ப்பாயிற்று. பட்டாபிராமனுடைய சேர்மன் பதவி போயிற்று.

அப்பீல் பண்ணும்படி சிலரும் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கும்படி சிலரும் பட்டாபிராமனுக்கு உபதேசித்தார்கள். லலிதாமட்டும், "போதும், போதும். ஒருதடவை தேர்தலுக்கு நின்று பட்டதெல்லாம் போதும்!" என்று சொன்னாள். அவளுடைய யோசனையை ஏற்றுக் கொண்டு பட்டாபிராமன் அப்பீல் செய்யவும் மறு தேர்தலுக்கு நிற்கவும் கண்டிப்பாக மறுதளித்து விட்டான்.

தாமோதரம் பிள்ளையின் மரணத் தறுவாயில் ஊருக்கு வந்து சேர்ந்த அமரநாதன் திரும்பக் கல்கத்தாவுக்குப் போக விரும்பவில்லை.

நண்பர்கள் இருவரும் சுதந்திர இந்தியாவில் பொருள் வளத்தைப் பெருக்குவதற்கு ஏதேனும் தொழில் செய்யவேண்டும் என்று யோசனை செய்து கொண்டிருந்தபோது காந்தி மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வந்து அவர்களைக் கலக்கத்தில் ஆழ்த்தி விட்டது. நாள் கணக்காக அந்தச் சம்பவத்தைப் பற்றியே அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர, வேறு எதைப்பற்றியும் சிந்தனை செய்ய ஓட வில்லை.

இந்த நிலைமையிலேதான் சீதாவின் மரணத்தைப் பற்றிய செய்தியும்

வந்து அவர்களுடைய கலக்கத்தை அதிகமாக்கியது. கல்கத்தா சாலையில் மூர்ச்சை யடைந்து கிடந்த சீதாவை எடுத்துச் சென்று உயிரளித்துக் காப்பாற்றியவனான அமரநாத் அவள் கடைசியாக மரணமடைந்தது குறித்துப் பெரிதும் பரிதாபப் பட்டான். பட்டாபிராமனோ சிலகாலம் சீதா தன் வீட்டில் தங்கி யிருந்தபோது வாழ்க்கை எவ்வளவு குதூகலமாயிருந்தது என்பதையும், உணர்ச்சிவசப்பட்டுத் தான் செய்த சிறு தவறினால் அவளுக்கு நேர்ந்த கஷ்டங்களையும் நினைத்து நினைத்து வருந்தினான். சீதாவிடமிருந்த நல்ல குணங்களையும் துர்க்குணங்களையும் பற்றி அந்த நண்பர்கள் இருவரும் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டு ஒத்துப் பார்த்துக் கொண்டார்கள்.

ஆனால் அவர்களுடைய தர்ம பத்தினிகளான லலிதாவும் சித்ராவுமோ சீதாவிடம் எந்தவிதமான துர்க்குணமும் இருந்ததாக ஒப்புக் கொள்ளவில்லை. லலிதா எல்லாத் தவறுகளையும் தன்பேரிலேயே போட்டுக் கொண்டு பச்சாதாபப் பட்டாள். சீதாவுக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கெல்லாம் தானே காரணம் என்று சொல்லிச் சொல்லிக் கண்ணீர் விட்டாள். சௌந்தரராகவன் தன்னைப் பார்க்க வந்த இடத்திலே தானே சீதாவைப் பார்த்துக் கலியாணம் செய்து கொண்டான்? தான் பட்டிருக்க வேண்டிய கஷ்டங்களை யெல்லாம் அவனைக் கலியாணம் செய்து கொண்டு சீதா அல்லவா அனுபவித்தாள்? அப்படிப் பட்டவள் தன்னுடைய சொந்த மனக் கஷ்டங்களை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இங்கே இருந்த சமயம் எவ்வளவு சந்தோஷமாக இருந்தாள்? அவள் இருந்தபோது தன் வீடு எவ்வளவு கலகலப்பாக இருந்தது? வாழ்க்கையே ஒரு புது மெருகு பெற்று ஆனந்த கோலாகலமாக மாறி யிருந்ததே! அப்படிப்பட்டவளை அநாவசியமாகச் சந்தேகித்து வீண் பழி சொல்லி கடு ராத்திரியில் வீட்டை விட்டு ஓடும்படி செய்தேனே? அந்தப் பாவத்துக்காகக் கடவுள் என்னை என்னமாதிரி தண்டிப்பாரோ தெரியவில்லையே?— இப்படி யெல்லாம் ஓயாது புலம்பிய லலிதாவுக்கு அவளுடைய தோழி சித்ரா பலவிதமாக ஆறுதல் சொன்னாள்.

"நீயும் நானும் என்னடி செய்யக் கிடக்கிறது? அவரவர்கள் தலைவிதிப்படி யல்லவா ஏதுவும் நடக்கிறது?" என்றாள் சித்ரா.

"அழகா யிருக்கிறது நீ சொல்லுகிறது! எல்லாம் தலைவிதி என்றால் பாவ புண்ணியமே கிடையாதா? காந்தி மகாத்மா இறந்ததும் தலைவிதி தானா? அவரைச் சுட்டுக் கொன்ற மகாபாவியின் பேரில் குற்றம் ஒன்றும் இல்லை என்றுகூடச் சொல்வாயோ?" என்றாள் லலிதா.

"எதற்கும் எதற்கும் உவமானம் சொல்கிறாய், லலிதா! காந்தி மகாத்மா இறந்தது அவருடைய தலைவிதி என்றால், அவரைக் கொன்றவனைத் தண்டித்தால் அதுவும் அவன் தலைவிதி தானே? நாம் செய்யும் காரியங்களில் பாவபுண்ணியம் பார்த்துச் சரியான காரியத்தைச் செய்ய வேண்டும். அப்புறம் நடக்கிறது தலை விதிபோல் நடக்கும்!" என்றாள் சித்ரா.

"சிலபேர் இந்த உலகத்தில் பாவ புண்ணியம் பார்த்து நல்ல காரியங்களையே செய்து வருகிறார்கள். ஆனாலும் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டே யிருக்கிறார்கள். வாழ்க்கை யெல்லாம் சந்தோஷமே யில்லாமல் கஷ்டப்பட்டுச் சாகிறார்கள். இது அவர்கள் செய்த பாவமா? புண்ணியமா? தலைவிதியா? பகவானுடைய செயலா? உன்னுடைய தத்துவம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை!" என்றாள் லலிதா.

"முதலாவது நீ சொல்கிறதே தப்பு. வாழ்க்கை யெல்லாம் சந்தோஷமில்லாமல் கஷ்டப்பட்டுச் சாகிறார்கள் என்கிறாய். யார் அப்படிச் சாகிறார்கள்? வெளிப் பார்வைக்கு நமக்கு அப்படித் தோன்றலாம். எல்லாருடைய வாழ்க்கையிலும் சந்தோஷமும் துக்கமும் மாறி மாறித்தான் வருகிறது!"

"இல்லவே இல்லை! சீதாவையே பாரேன்! வாழ்க்கை யெல்லாம் அவள் கஷ்டப்பட்டு விட்டுக் கடைசியில் செத்தும் போனாளே?"

"சீதா சந்தோஷமென்பதையே அறியாமல் செத்துப் போனாள் என்று சொல்கிறாய்? சுத்தத் தவறு, லலிதா!

நானும் சீதாவுடன் கொஞ்சம் பழகி யிருக்கிறேன். அவள் சந்தோஷப்பட்டதும் அதிகம்; துக்கப் பட்டதும் அதிகம். இந்த உலகத்தில் சிலருடைய வாழ்க்கை சந்தோஷமும் இல்லாமல் துக்கமும் இல்லாமல் எப்போதும் சப்புச் சவுக்கென்று இருந்து கழிந்து விடுகிறது. இவர்கள் தான் இந்த உலகத்தில் பாக்கிய சாலிகள் என்று என்னால் ஒத்துக் கொள்ள முடியாது. வங்காளத்து மகாகவி ரவீந்திரநாத தாகூர் என்ன சொல்கிறார் தெரியுமா? 'ஆண்டவனே! எனக்கு வேறு ஒரு பாக்கியமும் இந்த உலகத்தில் வேண்டாம். கண்ணீர் பெருக்கி அழும் பாக்கியத்தைக் கொடு!' என்று கடவுளை வரம் கேட்கிறார். துக்கமும் சந்தோஷமும் கலந்த வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை. காவியங்கள், இதிகாசங்கள், கதைகள்,—எல்லாவற்றையும் பார்! கதாநாயகர்கள்—கதாநாயகிகளில் கஷ்டப் படாதவர்கள் யார்!"

"சீதாவின் வாழ்க்கையும் ஒரு கதையாகத்தான் முடிந்து விட்டது. சித்ரா! உனக்குத் தெரியுமோ என்னமோ? சீதாவுக்கு அந்த நாளிலிருந்தே கதை என்றால் ரொம்பப் பிரியம். ராஜம் பேட்டைக் குளத்தங்கரையில் முன் னிலவு எரிக்கும் இரவுகளில் அவளும் நானும் கதை பேசிக் கழித்த நாட்களை நினைத்தால் எனக்குக் கபீர் என்கிறது. எத்தனை எத்தனை கதைகள் சொல்வாள்? லைலா மஜ்னூன் கதை, ரோமியோ ஜூலியட் கதை, அனார்க் கலியின் கதை, தமயந்தி நளன் கதை, சகுந்தலை துஷ்யந்தன் கதை,—இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டிருப்பாள். கதை சொல்லும் போதெல்லாம் தானே அந்தந்தக் கதாநாயகி என்று நினைத்துக் கொண்டு விடுவாள். பாவம்! அவளுக்கா இப்படிப் பட்ட கதி வரவேண்டும்? அவள் எத்தனை எத்தனையோ கனவு கண்டாள்! ஒன்றையும் காணமல், ஒரு சுகத்தையும் அநுபவிக்காமல் போய்விட்டாளே?" என்று சொல்லி லலிதா 'ஓ' வென்று அழுதாள்.

சித்ரா அவளைச் சமாதானப்படுத்த முயன்றாள். நல்ல வார்த்தை சொல்லிப் பார்த்துப் பயன் படாமற் போகவே கோபமாகவும் பேசினாள்.

கடைசியாக, "சீதாவுக்காக இவ்வளவு வருத்தப்பட்டுக் கண்ணீர் விடுகிறாயே? அவளுடைய தமக்கையைப் பற்றிக் கொஞ்சம் அநுதாபங் காட்டக் கூடாதா? செத்துப் போன சீதாவைக் காட்டிலும் ஒரு கண்ணையும் ஒரு கையையும் இழந்து உயிரோடு இருக்கிறாளே, அவளுடைய கதி இன்னும் பரிதாபம் இல்லையா?" என்றாள்.

லலிதாவின் அழுகையும் கண்ணீரும் உடனே நின்று விட்டது.

"அதை நினைத்தால் ரொம்பப் பரிதாபமாய்த்தா னிருக்கிறது. என் மூத்த அத்தங்காளை நான் பார்த்ததே யில்லை. முதன் முதலில் பார்க்கும் போது இப்படிப் பார்க்கவேண்டுமா என்று கஷ்டமா யிருக்கிறது!" என்று சொன்னாள் லலிதா.

"இதிலேகூட உன்னுடைய மனக் கஷ்டத்தையே பார்க்க வேண்டுமா, லலிதா! அடுத்தாற் போல் உன் தமையன் சூரியாவைப் பார்! தீரன் என்றால் அவன் அல்லவா தீரன்? அப்படி அங்கஹீன மானவளைக் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்ல யாருக்குத் துணிச்சல் வரும்? உன் அகத்துக்காரரும் சரி, என் அகத்துக்காரரும் சரி, பத்து காத தூரம் ஓடிப்போவார்கள். சீதாவின் கணவன் இருக்கிறானே, அந்த மகாராஜன்,—அவனைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை! கல்கத்தாவிலே அவன் சுரம் வந்து படுத்திருந்தபோது எனக்குக் கொஞ்சம் இரக்கமா யிருந்தது. இப்போது என்ன தோன்றுகிறது, தெரியுமா? அவன் எதற்காகப் பிழைத்தான், கல்கத்தாவிலே செத்துப் போன அத்தனை ஆயிரம் பேரோடு அவனும் தொலைந்து போயிருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது."

"அதெல்லாம் சரிதான், சித்ரா! அவர்கள் எல்லாம் பொல்லாதவர்களாகவே இருக்கட்டும். சூரியா இந்த விஷயத்தில் செய்கிற காரியம் சரியா? எனக் கென்னமோ சரியாகத்தோன்றவில்லை. அப்படியாவது என்ன கலியாணம் வேண்டிக் கிடந்தது! ஒரு கையும் ஒரு கண்ணும் இல்லாதவளைக் கலியாணம் செய்து கொள்ளவாவது? ஊருக்கெல்லாம் பரிகாசமாகப் போய் விடுமே?" என்றாள் லலிதா.

"அது உனக்குப் ரொம்ப அவமானமாகத்தான் இருக்கும்! ஒரு கண்ணும் ஒரு கையும் இல்லாதவளை மன்னி என்று அழைக்க உனக்கு வெட்கமாயிராதா? ஆனால், லலிதா! உன்னை அப்படியெல்லாம் சூரியா அவமானப் படுத்தமாட்டான். இங்கே தாரிணியை அழைத்துக் கொண்டு வரவே மாட்டான். அப்படி வருவதாயிருந்தால் நீ ராஜம்பேட்டைக்குப் புறப்பட்டுப் போய் விடு! வந்தவர்களை நான் நன்றாய்த் திட்டித் திருப்பி அனுப்பிவிடுகிறேன். அந்த வெட்கங் கெட்ட மூளிகள் இங்கே எதற்காக வர வேண்டும்?" என்று சித்ரா லலிதாவை ஏசுகிற பாவத்தில் பேசினாள்.

"அவ்வளவு கொடுமையானவள் அல்ல நான். இருந்தாலும் சூரியாவுக்கு இப்படியா ஒரு கலியாணம் என்று நினைத்தால் வருத்தமாய்த்தானிருக்கிறது. அம்மாவுக்கு இது தெரிந்தால் உயிரையே விட்டு விடுவாள்."


"விட்டால் விடட்டுமே! உலகத்திலே எத்தனையோ பேர் செத்துப் போகிறார்கள்! நிமிஷத்துக்கு லட்சம் பேர் சாகிறார்கள்! அப்பேர்ப்பட்ட காந்தி மகானே போய் விட்டார். உன் அம்மா இருந்து என்ன ஆகவேணும்? சூரியாவைப் போன்ற பிள்ளையைப் பெறுவதற்கு உன் அம்மா தபஸ் செய்திருக்க வேண்டும். அதை அவள் தெரிந்து கொள்ளாவிட்டால் யாருடைய தப்பு? நீயும் அவளோடு சேர்ந்து ஏன் அழவேண்டும்? நானாயிருந்தால் இப்பேர்ப்பட்ட தமையனைப் பெற்றதை யெண்ணி இறுமாந்து போவேன். 'என் அண்ணனுக்கு நிகர் இல்லை' என்று ஊரெல்லாம் தம்பட்டம் அடிப்பேன். எங்கே, லலிதா! சூரியாவின் கடிதத்தில் அந்தப் பகுதியை மட்டும் எனக்கு இன்னொரு தடவை வாசித்துக் காட்டடி!"

கீழே கிடந்த கடிதத்தை லலிதா எடுத்து ஒரு தடவை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாள். அவளுடைய கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, பின் வரும் பகுதியைப் படிக்கத் தொடங்கினாள்:—

"அருமைத் தங்கையே! உனக்கும் சீதாவுக்கும் ஒரே பந்தலில் இரட்டைக் கலியாணம் நடந்ததே, ஞாபகமிருக்கிறதா? இது என்ன கேள்வி? உன் கலியாணம் உனக்குக் கட்டாயம் ஞாபகம் இருக்கும். கலியாணத்துக்கு இரண்டு நாளைக்கு முன்னால் நமக்குள்ளே ஒரு விவாதம் நடந்தது. சீதாவும் நீயும் நானும் குளத்தங்கரை பங்களாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோதுதான். 'கலியாணத்தின்போது அம்மி மிதிப்பதற்கு முன்னால் அக்கினி வலம் வருகையில் மாப்பிள்ளை மணப்பெண்ணின் கையைப் பிடித்துக் கொள்ள வேண்டுமே, — எந்தக் கையினால் எந்தக் கையைப் பிடித்துக் கொள்வது?' என்ற கேள்வி ஏற்பட்டது. மாப்பிள்ளையின் வலது கரத்தினால் மணப்பெண்ணின் வலது கரத்தைப் பிடிப்பதா அல்லது இடது கரத்தைப் பிடிப்பதா? வலது கரத்தைப் பிடிப்பதா யிருந்தால் இரண்டு பேரும் நடந்து எப்படிப் பிரதட்சணம் வர முடியும் என்று வெகு நேரம் தர்க்கம் செய்தோம். தலைக்கு ஒரு அபிப்பிராயம் சொன்னோம். அப்புறம் கலியாணம் நடந்த போது அந்த விஷயத்தை நான் கவனிக்கவில்லை; அதைப் பற்றிப் பிறகு பேசவும் இல்லை.

லலிதா! அத்தங்காள் தாரிணியை நான் கலியாணம் செய்து கொள்ளும் போது அந்தக் கஷ்டமான பிரச்னை ஏற்படவே ஏற்படாது. அவளுக்கு இருப்பது ஒரே ஒரு கைதான். அதைத்தான் நான் பிடித்துக் கொண்டாக வேண்டும். இன்னொரு கை இல்லை என்பது பற்றி எனக்கு வருத்தம் கிடையாது. அதை நினைக்கும்போதெல்லாம் நான் பூரித்து மகிழ்வேன். தாரிணி இழந்து விட்ட அந்த ஒரு கை இரு நூறு ஸ்திரீகளைக் காப்பாற்றியது என்பதையும் சீதாவின் குழந்தையைக் காப்பாற்றியது என்பதையும் நினைத்து நினைத்துக் கர்வம் அடைவேன். நான் மிகவும் அதிர்ஷ்டக்காரன். இத்தனை நாள் கலியாணம் செய்து கொள்ளாமல் நான் காத்துக் கொண்டிருந்தது வீண் போகவில்லை! இனி என் வாழ்நாளில் என்றென்றைக்கும் ஆனந்தந்தான்!......

லலிதா! தாரிணியின் அழகைப் பற்றி முன் இரண்டொரு தடவை



உனக்குச் சொல்லி யிருக்கிறேன். ஆனால் முன்னேயெல்லாம் அவளுடைய அழகு மனித உலகத்துக்குரிய அழகாயிருந்தது. இப்போதோ தெய்வீக சௌந்தர்யம் பெற்று விளங்குகிறாள்;—என் கண்களுக்கு. வேறு யார் என்ன நினைத்தால் அதைப்பற்றி எனக்கு என்ன? யார் என்ன வம்பு பேசினால்தான் எனக்கு என்ன?..."

கடிதத்தைப் படிக்கும்போது லலிதாவுக்குத் தொண்டையை அடைத்தது. சித்ராவுக்கோ கண்ணில் கண்ணீர் வந்து விட்டது. கொஞ்சம் உணர்ச்சி அடங்கிய பிறகு சித்ரா கூறியதாவது:—"லலிதா! நம்முடைய தேசத்து மகான்கள் 'உலகத்தில் துன்பம் என்பதே இல்லை. துன்பம் என்பது வெறும் மாயைதான்' என்று சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் சில மகான்கள், 'துன்பத்திலேதான் உண்மையான இன்பம் இருக்கிறது' என்றும் சொல்லி யிருக்கிறார்கள். அதன் பொருள் இத்தனை நாளும் எனக்கு விளங்காமலிருந்தது. இன்றைக்குத்தான் விளங்குகிறது. பிறருடைய துன்பத்தைத் துடைப்பதற்காக நாம் கஷ்டப்படுகிறோமே, அதைப் போன்ற இன்பம் இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை; மறு உலகத்திலும் கிடையாது. உனக்கு மன்னியாக வரப்போகிறவள் அந்த ஆனந்தத்துக்கு உரியவளா யிருக்கிறாள். அதை அறிந்த அதிர்ஷ்டசாலி உன் தமையன் சூரியா! அவர்கள் இரண்டு பேரையும் தம்பதிகளாகப் பார்க்க வேண்டும் என்று எனக்கு மிக்க ஆவலாயிருக்கிறது!" என்றாள்.

அத்தியாயம் 43

பாமா விஜயம்

ராஜம்பேட்டை கிராமச் சாலை முன்போலவே இருபுறமும் மரம் அடர்ந்து நிழல் படர்ந்து விளங்கியது. தபால் சாவடியும் பதினைந்து வருஷத்துக்கு முன்னால் அளித்த தோற்றத்துக்கு அதிக மாறுபாடில்லாமல் காட்சி அளித்தது. ரன்னர் தங்கவேலு முன்னைப்போல் அவ்வளவு அவசரப் படாமல் சாவதானமாக நடந்து தபால் கட்டைக் கொண்டு வந்தான். ஜிங் ஜிங் என்ற சதங்கைச் சத்தம் சவுக்க காலத்தில் கேட்டது.

ராஜம்பேட்டை அக்கிரகாரம் அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாமல் இருந்தது. உலகமே தலை கீழாகப் புரண்டாலும் நம்முடைய கிராமங்களில் அவ்வளவாக மாறுதலைக் காண முடிவதில்லை. அப்படி மாறுதல் இருந்தால் முன்னே வீடாயிருந்த சில கட்டிடங்கள்! இப்போது குட்டிச்சுவர்களாயிருக்கலாம். வேறு பிரமாத மாறுதலைப் பார்த்துவிட முடியாது.

ராஜம்பேட்டை முன்னைப் போல அவ்வளவு கலகலப்பாயில்லை என்பது மட்டும் உண்மை. ஏனெனில், இப்போது அங்கே பட்டாமணியம் கிட்டாவய்யர் இல்லை. அவர் பார்த்த பரம்பரைக் கிராம முனிசீப் உத்தியோகத்தைச் 'சுண்டு' என்கிற சியாமசுந்தர் பார்த்து வந்தான். ஸினிமா டைரக்டர் ஆகும் ஆசையையெல்லாம் அவன் விட்டு விட்டான். "படம் எடுத்தால் சீதாவைக் கதாநாயகியாக வைத்து எடுக்கவேண்டும்; இல்லாவிடில் என்ன பிரயோஜனம்?" என்பது அவன் கருத்து. கொஞ்ச நாள் முன்பு வரையில் கூட அந்த ஆசை அவனுக்குச் சிறிது இருந்தது. சீதா இறந்த செய்தி வந்தபின் அடியோடு போய் விட்டது. அவன் நிம்மதியாகக் கிராம முனிசீப் வேலையைப் பார்த்து வந்தான்.

ஊரில் கலகலப்புக் குறைந்திருந்ததற்கு இன்னொரு காரணம் "என்ன ஓய்?" சீமாச்சுவய்யர் ஊரில் இல்லாதது. அவர் இப்போது சிறைச்சாலையில் இரண்டு வருஷம் கடுங்காவல் அநுபவித்துக் கொண்டிருந்தார். கள்ள மார்க்கெட் கேஸில் அசல் முதலாளி தப்பித்துக் கொண்டு சீமாச்சுவய்யரை மாட்டி வைத்து விட்டான். அதைப் பற்றி ஊரில் யாரும் அநுதாபப்படவில்லை. நடுவில் பணம் அதிகமாக வந்தபோது சீமாச்சுவய்யர் யாரையும் இலட்சியம் செய்யாமல் அகம்பாவத்துடன் நடந்து கொண்டார். ஆகவே

அவர் சிறைப்பட்டபோது கிராமத்தார் "என்ன ஓய்? சோச்சு திரும்பி வருவானா?" என்று கேட்டுக் கொள்வதுடன் திருப்தி யடைந்தார்கள்.

* * *

கிட்டாவய்யர் வீட்டுக் கூடத்தில் லலிதா உட்கார்ந்து குழந்தை பட்டுவின் தலை வாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். சரஸ்வதி அம்மாள் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்தாள். குழந்தை பால சுப்பிரமணியன் ஏதோ ஒரு வாரப் பத்திரிகையில் வந்திருந்த காந்தி மகான் கதையை எழுத்துக் கூட்டி இரைந்து படித்துக் கொண்டிருந்தான்.

தபால் ரன்னர் வரும் 'ஜிங் ஜிங்' சத்தம் கேட்டதும் லலிதாவுக்குப் பழைய ஞாபகங்கள் ஏற்பட்டுக் கண்கள் ஈரமாயின.

"லலிதா! பட்டுவின் வயதில் நீ தபால் கட்டு வரும் சத்தம் கேட்டதும் எழுந்து தபாலாபீஸுக்கு ஓடுவாயே? ஞாபக மிருக்கிறதா?" என்று சரஸ்வதி அம்மாள் கேட்டாள்.

"ஞாபகம் இல்லாமல் என்ன? நன்றாய் இருக்கிறது. இப்போதுகூடத் தபாலாபீஸுக்குப் போய் ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா என்று பார்த்துவிட்டு வரத் தோன்றுகிறது!" என்றாள் லலிதா.

"நீ அப்படிப் போனாலும் போவாய்! உன் நெஞ்சுத் தைரியம் யாருக்கு வரும்?" என்றாள் தாயார்.

* * *

அரை மணி நேரத்துக்குப் பிறகு வாசலில் "தபால்!" என்ற சத்தம் கேட்டதும் லலிதா விழுந்தடித்து ஓடினாள். ஒரு கணம் ஒரு வேளை தபால்கார பாலகிருஷ்ணனா யிருக்குமோ என்று எண்ணினாள். பார்த்தால், உண்மையிலேயே அந்தப் பழைய பாலகிருஷ்ணன்தான்!

"நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்களா, அம்மா! ரொம்ப சந்தோஷம். எனக்கும் டவுன் வாழ்க்கை பிடிக்கவில்லை. ஒருவழியாக இங்கேயே வந்துவிட்டேன்" என்றான் பாலகிருஷ்ணன்.

"அதுதான் கொஞ்ச நாளாக உன்னைத் தேவபட்டணத்தில் காணோமே என்று பார்த்தேன்! குழந்தைகள் சௌக்யமா?" என்றாள் லலிதா.

"கடவுள் புண்ணியத்திலே சௌக்யந்தான். ஆனால் என்ன சௌக்யம் வேண்டிக் கிடந்தது? அப்பேர்ப்பட்ட காந்தி மகாத்மாவையே சுட்டுக் கொன்று விட்டார்கள். இனிமேல் யார் சௌக்யமா யிருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?" என்றான் பாலகிருஷ்ணன். பிறகு, "இந்தாருங்கள் தபால்!" என்று ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனான்.

ரேழி நடையிலேயே நின்று லலிதா கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். அவளுடைய கணவரிடமிருந்து வந்திருந்தது. அதில் அவர் குழந்தைகளின் க்ஷேம லாபங்களை விசாரித்த பிறகு எழுதி யிருந்ததாவது:—

"ஒரு அதிசயமான சமாசாரம் சொல்லப் போகிறேன். ஆச்சரியப்பட்டு மூர்ச்சையாகி விழுந்து விடாதே! உன் தமையன் சூரியா வந்திருக்கிறான். அவனுடைய மனைவியையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான். அவனுடைய மனைவியைப் பார்த்ததும் உனக்கு ஒரு வேளை ஏமாற்றம் உண்டாகலாம். விஷயம் என்னவென்று கடிதத்தில் எழுத விரும்பவில்லை. நேரிலேயே பார்த்துத் தெரிந்துகொள். மூன்று பேரும் நாளை ரயிலில் புறப்பட்டு அங்கே வருகிறோம்."

இதைப் படித்ததும் லலிதா மிக்க கலக்கம் அடைந்தாள். அவள் முக்கியமாக ராஜம்பேட்டைக்கு வந்தது தன் தாயாரிடம் சூரியாவின் கலியாணத்தைப் பற்றிச் சொல்வதற்காகத்தான். ஆனால் இன்றுவரை அவளுக்குத் தைரியம் வரவில்லை. இனிமேல் தள்ளிப் போட முடியாது. அவர்கள் நாளைக்கு வந்து விடுவார்களே?

சரஸ்வதி அம்மாளிடம் லலிதா மாப்பிள்ளையிட மிருந்து கடிதம் வந்தது பற்றி முதலில் சொன்னாள். சூரியாவையும் அவர் அழைத்து வருவதைப் பற்றிப் பிறகு சொன்னாள். சூரியா கலியாணம் செய்துகொண்டு மனைவியையும் அழைத்து வருவதைப் பற்றிக் கடைசியாகச் சொன்னாள்.

சரஸ்வதி அம்மாள் வியப்படைந்தாள்; மகிழ்ச்சி யடைந்தாள்; பிறகு திடுக்கிட்டுப் போனாள்.

"கலியாணமா? அது என்ன? நம் ஒருவருக்கும் சொல்லாமலா? இப்படி

யும் உண்டா? பெண் யாரோ, என்னமோ, தெரியவில்லையே!" என்று புலம்பி அங்கலாய்த்தாள்.

"அதென்னமோ, போ, அம்மா! நானும் முன்னாலேயே கேள்விப்பட்டேன். உண்மையா யிராது என்று நினைத்தேன். இப்போது வந்திருக்கும் கடிதத்தைப் பார்த்தால் உண்மை என்றே தோன்றுகிறது" என்றாள்.

"என்னடி உண்மை? நீ என்ன கேள்விப்பட்டாய்?" என்றாள்.

"சூரியா கலியாணம் செய்துகொண்டிருக்கும் பெண்ணுக்கு ஏதோ அங்கஹீனம் என்று கேள்வி. சிலர் 'ஒரு கண்ணில்லை' என்கிறார்கள். சிலர் 'ஒரு கையில்லை' என்கிறார்கள். சூரியாவின் காரியமே இப்படித்தான். என்னமோ, போ, அம்மா! ரொம்ப விசாரமா யிருக்கிறது!" என்றாள் லலிதா.

"இதென்னடி அநியாயம்? இப்படியும் ஒரு பிள்ளை செய்வானா? அது நிஜமா யிருக்குமாடி? நிஜமா யிருந்தால் நாலுபேர் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்!" என்று சரஸ்வதி அம்மாள் மேலும் புலம்பினாள்.

• • •

பட்டாபிராமனும் சூரியாவும் சூரியாவின் மனைவியும் ஜல்ஜல் என்று சதங்கை சப்தித்த மாட்டு வண்டியில் வந்து இறங்கினார்கள். லலிதா பரபரப்புடன் ரேழிக்குப் போனாள். தாரிணியைப் பார்ப்பதற்கு அவள் மனது துடிதுடித்தது. எவ்வளவு தான் மனதைத் திடப்படுத்திக் கொண்டிருந்தாலும் சமயத்தில் கேட்கவில்லை. நெஞ்சு பட்பட் என்று அடித்துக்கொண்டது. தாரிணியைப் பார்த்ததும் அம்மா என்ன ரகளை செய்யப் போகிறாளோ என்ற பீதிவேறு இருந்தது.

முதலில் பட்டாபியும் சூரியாவும் இறங்கினார்கள். பிறகு ஒரு ஸ்திரீ இறங்கினாள். இது என்ன விந்தை? எதிர்பார்த்தபடி இல்லையே! இரண்டு கையிலும் இரண்டு கைப்பெட்டியுடன் இறங்குகிறாளே? கண்களிலும் ஹீனம் இல்லையே? கொஞ்சம் நவநாகரிகத்தில் அதிகம் மூழ்கினவளாகக் காணப்பட்டாள். மற்றப்படி அங்கஹீனம் ஒன்றும் தெரியவில்லை. பின்னால் ஒருவேளை தாரிணி இறங்குகிறாளோ என்று பார்த்தாள். அப்புறம் யாரும் இறங்கவில்லை. வந்தவர்களை முகமன் கூறி க்ஷேமம் விசாரித்து உள்ளே அழைத்துப் போனாள். "சூரியா! இந்த லேடி யார்? நீ எழுதி யிருந்தாயே?........." என்று ஆரம்பித்தாள்.

"நான் எழுதி யிருந்தது வேறு. இந்தப் பெண்ணரசிதான் என்னை மணக்க முன்வந்த என் மனைவி. திவான் ஆதிவராகாச்சாரியார் மகள். இவள் பெயர் பாமா. எங்களுக்குக் கலியாணம் ஆகி இரண்டு வாரம் ஆகிறது. 'ஹனிமூன்' வந்திருக்கிறோம்" என்றான் சூரியா.

லலிதாவின் மனம் நிம்மதி அடைந்தது. லலிதாவின் தாயாரும் தன் மாட்டுப் பெண் பார்ப்பதற்கு ஒரு மாதிரி பரட்டைத் தலைப் பிசாசு மாதிரி இருந்தாலும் லலிதா சொன்னதுபோல் அங்கஹீனமா யில்லை என்பது குறித்து மனதிற்குள்ளே திருப்தி அடைந்தாள்.

பிறகு லலிதா சூரியாவைத் தனியாக சந்தித்துப் பேசியபோது அவன் கூறியதாவது: "உனக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகத் தானிருக்கும். எனக்கோ அதைவிட ஏமாற்றமா யிருந்தது. ஆனால் ஏமாற்றியவள் அத்தங்காள் தாரிணி அல்ல; சௌந்தர ராகவன் தான். அவனுடைய சுபாவத்தை அறிந்திருந்த அனைவரையும் ஏமாற்றி விட்டான். தாரிணியைத் தான் கலியாணம் செய்து கொண்டே தீருவேன் என்றும், அவளுடைய முக லாவண்யத்துக்காக அவளிடம் தான் பிரியம் வைக்கவில்லை என்றும் சத்தியம் செய்தான். மேலும் சீதாவுக்குத் தாரிணி கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடாதென்றும் தன்னிடமும் அதே விஷயத்தைச் சீதா சொல்லி யிருக்கிறாள் என்றும் வற்புறுத்தினான். தாரிணி அநேக ஆட்சேபங்களைச் சொல்லியும் கேட்கவில்லை. 'டில்லியில் உங்களுடைய உத்தியோக வாழ்க்கைக்கு இடைஞ்சலா யிருக்கும்' என்று தாரிணி சொன்னபோது உத்தியோகத்தை விட்டு விட முன்னமே தீர்மானித்து விட்டதாகப் பதில் சொன்னான். லலிதா! உண்மையில் தாரிணிக்கும் ராகவன் பேரில் இருதய பூர்வமான அன்பு என்று தெரிந்தது. ஆகவே, நான் விட்டுக்கொடுத்து அவர்களுடைய திருமணத்தையும்கூட

இருந்து நடத்தி வைத்தேன். சௌந்தர ராகவன் உண்மையாகவே உத்தியோகத்தை விட்டு விட்டார். இருவரும் வஸந்தியையும் அழைத்துக் கொண்டு ரஜனிபூருக்குப் போயிருக்கிறார்கள். ரஜனிபூர் ராஜ்யம் இந்தியாவுடன் சேர்ந்து ஐக்யமாகிவிட்டாலும், ரஜனிபூர் ராணியம்மாளுக்கு ஏராளமான சொந்த சொத்து இருக்கிறது. தாரிணியின் பேரில் அவளுக்கு மிக்க பிரியம். இரண்டு பேரும் ரஜனி பூருக்கு வந்து பஞ்சாப் அகதிகளுக்கு உதவி செய்து குடியும் குடித்தனமுமாக்க முயலவேண்டும் என்றும், அதற்காகத் தன் சொத்துக்களை யெல்லாம் எழுதி வைப்பதாகவும் ரஜனிபூர் ராணியம்மாள் சொன்னாள். அதனால் இருவரும் ரஜனிபூருக்குப் போயிருக்கிறார்கள். குழந்தை வஸந்தியையாவது நான் என்னுடன் ராஜம்பேட்டைக்கு அழைத்துப் போவதாகச் சொன்னேன். அந்தக் குழந்தையும் கண்டிப்பாக வர மறுத்து விட்டாள்!"

இந்தக் கடைசி வாக்கியங்களை மட்டும் கேட்டுக் கொண்டு வந்த சரஸ்வதி அம்மாள், "ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. அவளுடைய தாயார் இங்கே வந்து படுத்திய பாடெல்லாம் போதாதா? பெண் வேறே வந்து கலகம் பண்ண வேண்டுமா?" என்றாள். அம்மாவின் சுபாவம் அப்படியென்று தெரிந்தவர்களானதால் மற்றவர்கள் சும்மா இருந்து விட்டார்கள்.

பிறகு லலிதா "இந்தப் பெண்ணை எப்படிப் பிடித்துக் கலியாணம் செய்து கொண்டாய்?" என்று கேட்டாள்.


"முதலில் இவள் பேரில் எனக்கு மிக்க வெறுப்பு இருந்தது. இவளுடைய குணாதிசயங்களைப் பற்றி மிகவும் தப்பான அபிப்பிராயம் கொண்டிருந்தேன். தாரிணிதான் இவளைப் பற்றி எனக்குச் சொன்னாள். முதன் முதலில் என்னைப் பார்த்ததிலிருந்து இவளுக்கு என் பேரில் பிரியம் என்றும் சொன்னாள். அது மட்டுமல்ல; 1942—இயக்கத்தின் போது இவள் சர்க்கார் உத்தியோக கோஷ்டியுடனே வெளிப்படையாகப் பழகிக்கொண்டே உள்ளுக்குள் இயக்கத்துக்கு மிக்க உதவி செய்தாளாம். தாரிணியைப் போலீஸார் கைது செய்யாமல் இவள் தான் ரொம்ப நாள் பாதுகாத்து வந்தாளாம். என்னைப் போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்புவிப்பதற்கும் இவள்தான் உதவி புரிந்தாளாம். இவ்வளவுக்கும் மேலே, இவள் பஞ்சாப்புக்கு முன்னதாகவே போய்ச் சீதாவைக் காப்பாற்றிக் கொண்டு வர முயன்றாளாம். இதையெல்லாம் கேட்டதும் என் மனம் அடியோடு மாறி விட்டது. பேசிப் பார்த்ததில் என்னுடைய இலட்சியமும் இவளுடைய இலட்சியமும் ஏறக்குறைய ஒன்று என்று தெரிந்தது. இவளுடைய வெளித் தோற்றத்தைப் பார்த்து ஒன்றும் முடிவு செய்யாதே, லலிதா! உன் மன்னியுடன் பழகிப் பார்த்து விட்டுப் பிறகு சொல்லு!" என்றான்.

* * *

வெளியே சென்றிருந்த சியாமசுந்தர் திரும்பி வந்து அண்ணாவையும் மன்னியையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். சூரியாவின் கலியாணத்தினால் தன்னுடைய கலியாணத்துக்கு இருந்த தடை நீங்கிவிட்டதல்லவா?

"அண்ணா! ரிடர்ன் டிக்கெட் வாங்கிக்கொண்டு வந்தாயா? அல்லது கொஞ்ச நாள் இங்கே இருப்பதாக உத்தேசமா?" என்று கேட்டான்.

"நீ எங்களை விரட்டியடித்தாலொழிய ரொம்ப நாள் இங்கே இருப்பதாக உத்தேசம். தேசம் சுதந்திரம் அடைந்து விட்டது. காந்தி மகாத்மா இறுதியாக ஆத்மத் தியாகம் செய்து நாட்டில் அமைதியையும் நிலைநாட்டி



பெரியவர்:-நேற்றைக்கு யாரையா ரேடியோவில் பாடினது!
பாகவதர்:—ஹி...... ஹி...... நான் தான் பாடினேன். மன்னிக்கணும்...

விட்டார். இனிமேல் தேசத்தில் செய்ய வேண்டியதெல்லாம் பொருள் உற்பத்தியும் உணவு உற்பத்தியும் தான். முதலில் நம்முடைய சொந்தக் கிராமத்திலிருந்து ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறேன். உழுது பாடுபடுகிறவர்களுக்கு முதலில் உற்சாகம் ஊட்ட வேண்டும்......"

"இப்போது இங்கே யெல்லாம் அவ்வளவு கிஸான்தொந்திரவு இல்லை. கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவன் கிஸான் சங்கத்தின் பணம் ஐயாயிரத்தைச் சூறையிட்டுக் கொண்டு போய் விட்டான். அதிலிருந்து இயக்கம் படுத்து விட்டது. இனிமேல், நீதான் வந்திருக்கிறாயே, நீ ஆரம்பித்தால் தான் உண்டு!"

"கிஸான் இயக்கம் இல்லை என்று திருப்திப்படுவதில் பயனில்லை, சுண்டு! உழவர்கள் மனத்திருப்தியும் உற்சாகமும் அடைய வேண்டும். தாங்கள் உற்பத்தி செய்வதில் தங்களுக்கு நியாயமான பங்கு கிடைக்கிறது என்று அவர்கள் உணர வேண்டும். இல்லாவிட்டால் என்றைக்கிருந்தாலும் கலகமும் குழப்பமும்தான். உணவு உற்பத்தியும் தடைப்படும். ஆகையால் முதலில் உழைப்பாளிகளைச் சரிக்கட்டிக்கொள்ளப் போகிறேன். பிறகு விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாண்டு காட்டப்போகிறேன். என்னுடைய மனைவி பாமாவும் எனக்கு உதவி செய்வதாகச் சொல்லுகிறாள். நீ என்ன சொல்லுகிறாய், சுண்டு?"

"சொல்லுவதென்ன அண்ணா? நம்முடைய நிலம் முழுவதையும் பிரித்து உழவர்களுக்குக் கொடுத்து விட்டாலும் எனக்குச் சம்மதந்தான். நீ ஊர் ஊராக அலையாமல் இந்த ஊரிலேயே இருந்தால் போதும்! நான் எங்கேயாவது போய் ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்வேன்!" என்றான் சுண்டு.

"அப்படி நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டிய காலமும் வரும். அதற்கும் நாம் தயாராகத்தானிருக்க வேண்டும். வேறு வேறு தொழில்கள் செய்ய இப்போதிருந்தே கற்றுக் கொள்ள வேண்டும்!" என்றான் சூரியா.

சுண்டு புன்னகை செய்து கொண்டான். தான் அநியாயமாக விட்டு விட்டு வந்த டாக்கி டைரக்ஷன் வேலை இருக்கவே இருக்கிறது என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டான்.

அவர்களுடைய தாயார் சரஸ்வதி அம்மாள் அங்கு வந்து, "நான் கண் மூடும் வரையில் பொறுத்திருங்கள். அப்புறம் எது வேணுமானாலும் செய்யுங்கள்!" என்றாள்.

"நாங்கள் காத்திருக்கலாம், அம்மா! ஆனால் பூகம்பமும் புயலும் எரிமலையும் பிரளயமும் யாருக்காகவும் காத்திராதே!" என்றான் சூரியா.


லலிதா, "பூகம்பம் பிரளயம் என்றெல்லாம் நீ சொல்லும் போது, அத்தையும் சீதாவும் அடிக்கடி 'அலை ஓசை கேட்கிறது' என்று சொல்லிக் கொண்டிருந்தது ஞாபகம் வருகிறது. அவர்களுக்கு என்ன பிரமையா அல்லது அவர்களுடைய காதில் ஏதாவது கோளாறா?" என்று கேட்டாள்.

"பிரமையா, காதில் ஏதேனும் கோளாறு என்று எனக்குத் தெரியாது; அல்லது ஏதேனும் ஒரு தெய்வீக சக்தியினால் வரப் போகும் பயங்கர விபத்துக்களின் அறிகுறி அவர்களுடைய மனதிற்குப்பட்டதா என்றும் தெரியாது. பஞ்சாப்பிலிருந்து தப்பி ஓடி வந்து நதியில் முழுகியபோது சீதாவின் காது அடியோடு செவிடாகி ஒன்றுமே கேட்காமல் போய்விட்டது. உரத்த பயங்கரமான அலை ஓசை போன்ற சத்தம் மட்டும் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்ததாம். ஆனால் காந்திஜியின் புனித உடல் தகனமான அன்று சீதாவின் காது கேட்கத் தொடங்கியது. பயங்கரமான அலை ஓசையும் அடியோடு நின்று விட்டது. 'ஹரி! மக்களின் துன்பத்தைப் போக்குவாயாக' என்ற மகாத்மாவின் மனதுக்கு உகந்த கீதந்தான் முதன் முதலில் அவள் காதில் கேட்டதாம். இது ஒரு சுப சூசகம் என்று எனக்குத் தோன்றுகிறது. மகாத்மாவின் மகா தியாகத்துக்குப் பிறகு இந்தப் பெரிய தேசத்துக்குப் பெரும் விபத்து ஒன்றும் கிடையாது! இனிமேல் சுபிட்சமும் முன்னேற்றமுந்தான்!" என்றான் சூரியா.


அந்த தேசபக்தத் தியாகியின் வாக்கும் விருப்பமும் பலிக்குமாக!

முற்றும்.



சீப்பின்  பயங்கரம்?

மயிர் கொட்டிவிடும் என்ற பயத்திற்காக கூடிய வரை தலைமயிரை வார பயப்படும் பெண்மணிகளில் நீங்களும் ஒருவரா? மயிர் கொட்டுவது வாருவதால் இல்லை. அதன் வேர்க்கால் பலமற்றிருப்பதால்தான் கொட்டுகிறது. இந்த வேர்க் கால்களுக்கு ஜபகுஸும் தேயுங்கள். அது மயிரை ஆரோக்கியமுள்ளதாக செய்வதற்கு வேண்டிய மருந்து சத்துக்கள் சேர்ந்தது. லக்ஷக் கணக்கானவர்களை எழுபத்தொரு வருஷங்களாக திருப்தி செய்துவருகிறது.



பகுஸும்

டானிக் குணங்களுடன் கூடிய ஹேர் ஆயில்

C. K. ஸேன் & கம்பெனி லிட்., ஜபகுஸும் ஹவுஸ்–கல்கத்தா–12. பிராஞ்ச்: 29, கோதுடோலா.


சிறந்த சலவை ...
இந்த OK கொண்டுதான்!



கணவரின் கண்ணீர்

தினஜா

ஆம்; நான் ஒரு கொலைகாரி! கொண்ட கணவனால் 'கொலைகாரி' என்று வெறுக்கப்பட்ட துர்ப்பாக்கியவதி. ஊரார் அனுமானத்திலும் நான் கொலைகாரிதான். 'மூத்தாள் மகளைக் கொலை செய்யவில்லை' என்று சொல்லும் இளையாளின் சொல் அம்பலத்தில் ஏறுமா? எப்படி நான் கொலைகாரி என்பதை நிரூபிக்கப் போதுமான சாட்சியில்லையோ, அப்படியே நான் கொலைகாரி அல்ல என்பதை நிரூபிக்கவும் சாட்சியில்லை. புண்பட்டுத் துடிக்கும் என் மனமே அதற்குச் சாட்சி. இந்தச் சாட்சியை யாரும் நம்பமாட்டார்கள். அது என் விதி. இல்லாவிட்டால் மூன்று தினம் வரை எல்லாவிதத்திலும் எனக்கு ஆதரவாக இருந்த தாயாரும், இன்று என்னைத் தன்னந் தனியாகத் தவிக்க விட்டுப் போவானேன்? இனி நான் வாழ்வது — 'மௌனம்' என்னும் சத்துருவையும் உடன் வைத்துக் கொண்டு மானமாகக்காலம் கழிப்பது எப்படி? நினைக்கவே பயமாக இருக்கிறது; தலையைச் சுற்றி மயக்கமாக வருகிறது. கண்களை இறுக மூடிக் கொண்டேன். இறந்த கால சம்பவங்கள் ஒவ்வொன்றாக என் மனக் கண்முன் ஓடிவந்தன.

• • •

என் தகப்பனார் இருந்த அந்த நாட்களை நினைத்தாலே உள்ளத்தில் ஒரு குளிர்ச்சி

ஏற்படுகிறது. எழு வேலி நிலம்; மச்சுக் கோப்பான இரண்டு வீடுகள்; ஒரு சிறு ஓட்டு வீடு; இவைகளுக்கு என் தகப்பனார் ஒருவரே வாரிசு. அவரது ஆசை, அருமை யாவற்றுக்கும் எதிரொலியாக நான் ஒருத்தியே அவர்தம் பெண்ணாகப் பிறந்தேன். கேட்க வேண்டுமா செல்வாக்குக்கு? பாட்டுக்கு ஒரு வாத்தியார்; படிப்புக்கொரு வாத்தியார்; என் கூடவேயிருந்து ஏவல் செய்ய ஒரு பணிமகள்; நான் ஏது வேண்டுமென்று கேட்டாலும், 'இல்லை' என்ற பேச்சே இல்லாமல் செய்ய ஒரு பணிமகள். இப்படிப்பட்ட சூழலுக்கிடையே என் இளமைப் பருவம் ஒரு நொடியில் கழிந்து விட்டது. யுவதிப் பருவத்தை நான் அடையும்போதே தந்தையையும், அவரால் எனக்கேற்பட்ட செல்வாக்கையும் ஒருங்கே இழந்தேன். வழியோடு போகிற வம்பை விலை கொடுத்து வாங்கி வழக்காடுவதில் என் தகப்பனாருக்கு அலாதிப் பிரியம். அத்துடன் குடும்பத்திலும் அளவுக்கு மீறிய செலவு. இவைகளால் ஏற்பட்ட கடன்களுக்கே இருந்த சொத்துக்கள் சரிக்கட்டிப் போய் விட்டன. மிஞ்சிய ஓட்டு வீட்டில் நானும் என் தாயும் குடியேறினோம்.

வறுமையும் வயதுவந்த பெண்ணின் வளர்ச்சியும் என் தாயின் உள்ளத்தில் பெரும் கிளர்ச்சியை உண்டாக்கின. அத்துடன் ஊராரின் உணர்ச்சியற்ற பேச்சுக்களும் அவள் உள்ளத்தைப் புண்படுத்தியது. வேறு வழியொன்றும் காணாததால் தரகர்களின் தயவையும், தெய்வத்தின் அருளையும் நம்பி காரியத்தைத் தொடங்கினாள் அவள்.

தரகர்கள் விரித்த வலையில் சிக்கிய ஒரு டாக்டர், இரண்டாம் தாரமாக என்னை ஏற்றுக் கொள்ள முன் வந்தார். பணம் பெருத்த அந்த டாக்டருக்கு வயது முப்பதுக்கும் குறைவு. அவரது மூத்த தாரத்தின் எட்டு வயது நிரம்பிய ஒரு பெண் வீட்டில் இருந்தது. இந்த இடம் கிடைத்தது என் அதிர்ஷ்டம்தான் என்று யாவரும் ஒரு முகமாகக் கூறினர். என் அதிர்ஷ்டத்திற்குக் காரணமாக இருக்க அவர் என்னைப் பார்க்க வந்த அன்று சொன்னார்:—

"கமலம்! உன் முகத்தின் அழகைப் போலவே அகத்தின் அழகும் அமைந்து இருக்கும் என்ற நம்பிக்கையில்தான் இந்த விவாகத்துக்குச் சம்மதிக்கிறேன். நானும் சிறு வயதில் தாயை இழந்தவன். என் தகப்பனாருக்கு இளையாளாக வந்த சிறிய தாயாரின் கொடுமைக்கு ஆளானவன். தன் வயிற்றிலே சிசுவொன்று தோன்றியவுடன் அவள் என்னைப் பலவித முயற்சிகளால் கொன்றுவிடவே தீர்மானித்தாள். ஒரு சமயம் அவள் எனக்கென்று வைத்திருந்த பாலை நாய் குடித்து இறந்து கிடந்தது என்றால் அவளுடைய கொடுமை எப்படிப் பட்டது என்பதை நீயே ஊகித்துக் கொள். இதையெல்லாம் எண்ணி நான் இரண்டாம் கலியாணமே செய்து கொள்வதில்லை என்று இருந்தேன். ஆனால் ஒரு பெண் குழந்தையை வளர்ப்பதற்குத் தந்தையை விட, தாயின் போஷணையே மிக்க அவசியம் என்று தோன்றியதால், உன்னை என் பெண் பரிமளாவின் தாய் ஸ்தானத்தில் ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். பரிமளா இனி உன் குழந்தை; கனவிலும், நனவிலும் அவள் சுகமே உனக்குப் பிரதானமாக இருக்க வேண்டும். இது ஒன்றே நான் உன்னிடம் வேண்டுவது" என்று கூறி முடித்தார்.

என் உடல் சிலிர்த்தது. விவாகத்துக்கு முன்பே என்னை உற்ற துணைவியாக எண்ணித் தம் உள்ளத்தைத் திறந்து காட்டிய அந்த உத்தம புருஷரின் முகத்தைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலை அடக்க முடியாமல் தலை நிமிர்ந்தேன். களை சொட்டும் அவர் முகம் என் உள்ளத்தை உணர்ச்சியால் நிரப்பியது. மனதின் அடிவாரத்திலிருந்து எழுந்த அன்பு ஊற்றிலே குமிழி விட்ட பல அடுக்குச் சொற்களை அவர் முன் கொட்டத் துடித்தது மனம். ஆனால், கூச்சத்தால் புரள மறந்து விட்டது நாக்கு. அன்பின் இரக்கத்தால் பொங்கி எழுந்த கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு சொன்னேன்:—

"தங்கள் மனம்போல நடந்து தங்களைத் திருப்தி செய்ய முயலுகிறேன்!"

இவ்வாறு சொன்ன பின் அங்கு நிற்க முடியாமல் நான் ஓடிவந்துவிட்டேன். பிறகு வெகு விரைவில் எங்கள் விவாகத்திற்கான நாளும் குறிக்கப்பட்டது.

அன்பே உருவான அவர் தம் கை பற்றி, அக்கினி வலம் வந்து, அம்மி மிதித்து, அவருடைய அருமைப் பெண் பரிமளாவின் தாய் ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டேன். அன்றே என் உள்ளத்தில் வற்றியிருந்த சந்தோஷம் மீண்டும் ஊற்றெடுத்துப் பெருகத் தொடங்கியது.

2

மன்னார்குடி ஹரித்திரா நதியின் வட கரையில் வானோங்கி நிமிர்ந்து நின்ற அந்த வெள்ளைக் கட்டிடம் என் உள்ளத்தைக்

கொள்ளை கொண்டது. இந்த அழகிய பங்களாவுக்கு இனி நானே எஜமானி என்று எண்ணிப் பூரித்தேன். பங்களாவின் முன் பக்கம் வந்து நின்றால், ஹரித்திரா நதியின் அற்புதமான தோற்றம் கண்ணைக் கவர்ந்து விடும். பங்களாவின் பின் பக்கம் வந்து நின்றாலோ, நெளிந்து குழைந்து செல்லும் பாமணி ஆற்றின் அழகிய தோற்றம் மனதில் பல இன்ப நினைவுகளை எழுப்பி விடும். இத்தகைய அழகான வாசஸ்தலத்தில் என் இல்லற வாழ்க்கை ஆரம்பமாயிற்று.

“சித்தி! சித்தி!” என்று என்னைச் சுற்றி வந்தாள் குழந்தை பரிமளா. அன்றலர்ந்த தாமரையைப் போலிருந்த அவள் அழகிய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே பசி, தாகம் எடுக்காது; அவள் சாதுர்யமான பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தாலே போதும்—‘இந்த உலகில் வேறு இன்பமும் உண்டோ?’ என்று தோன்றும். இத்தனை அழகான குழந்தைச் செல்வத்தைப் பத்து மாதம் சுமக்காமல் பெற்றுவிட்ட என் அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்தேன். ஒரு நாளைக்கு ஒன்பது தரமாவது அவள் தலையை வாரி அலங்கரிக்காவிடில் என் மனம் சமாதானப் படாது. குழந்தை பரிமளா ஒரு நிமிஷம் கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றால் எனக்கு வேலையே ஓடாது. அப்படியிருந்தும் என்னை யாவரும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது மட்டும் ஏனோ நிற்கவில்லை!

மாலை நேரத்தில் பங்களாவின் பின்புறமுள்ள பாமணியாற்றின் கரையில் உட்கார்ந்து நானும் என் கணவரும் பொழுது போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருப்போம். அப் பேச்சுக்களில் பெரும் பகுதி பரிமளாவைப் பற்றியதாகவே யிருக்கும். எங்களுக்கு முன் சற்றுத் தூரத்தில் உள்ள பவழ மல்லிகை மரத்தடியில் உட்கார்ந்து தன் பட்டுப் பாவாடையில் பூக்களை அள்ளி அளைந்து விளையாடிக் கொண்டிருக்கும் பரிமளாவைப் பார்த்துக் கொண்டே, அவள் அன்று விளையாடியது, பேசியது, பிடிவாதம் செய்து அழுதது இவைகளைக் கேட்பதில் என் கணவருக்கு அலாதி ஆனந்தம். அவருடைய ஆனந்தம் எதில் என்பதை அறிந்து நடப்பதே என் ஆனந்தம். இப்படியே நாட்கள் வெகு குதூகலமாக ஓடிக்கொண்டிருந்தன. நெடுகிலும் ஓடியிருக்கலாம்; நான் இதை எழுதவும் நேர்ந்திராது. ஆனால் என் விதி? என்னோடு மட்டுமின்றிப் பரிமளாவையும் அல்லவா கட்டி இழுத்தது!

அன்றுதான் அவர் ஆசையுடன் வாங்கி வந்த பட்டுப் புடவையைக் கட்டிக் கொள்வதற்காக மேஜைமீது எடுத்து வைத்து விட்டுப் பின் கட்டில் முகம் கழுவிக் கொண்டிருந்தேன். பரிமளா முன் அறையில் ஏதோ உருட்டிய சத்தம் கேட்டு ஓடி வந்தவள் திகைத்து நின்று விட்டேன். ஏதோ விஷமத்தில் மேஜைமீதிருந்த இங்கிப் புட்டியைக் கவிழ்த்துவிட்ட பரிமளா, என்னைக் கண்டவுடன் அவசரமாக மேஜைமீதிருந்த புதுப் புடவையை எடுத்துக் கொட்டிய இங்கியைத் துடைத்தாள். எல்லை மீறிய என் கோபத்தில் இன்னது செய்கிறோம் என்பதை யறியாமல் குழந்தையின் கன்னம் சிவக்க வைத்தேன் இரண்டு அறை! அதே சமயம், ‘டிஸ்பென்ஸரி’யிலிருந்து திரும்பிய என் கணவர் உள்ளே நுழைவதும், ‘வீல்’ என்று அலறிய பரிமளாவை வேலைக்காரி ஓடிவந்து அணைப்பதும் சரியாக இருந்தது. “ஆ! பச்சை மண்ணை கல்லா அடிச்சட்டே!” என்று சொல்லிவிட்டு என்னை வேலைக்காரி எரித்து விடுபவள் போலப் பார்த்தாள். திகைத்து நின்ற என் கணவரும் என்னைக் கோபத்துடன் நோக்கினார். அந்த நிமிஷத்தில்தான் நான் அடித்தது—மூத்தாள் பெண்ணை அடித்தது—‘தவறு’ என்பதை உணர்ந்து உள்ளம் நடுங்கினேன்.

இது நடந்து ஒரு வாரம் வரை அவர் என்னுடன் பேசவேயில்லை. மிக்க சரளமாக நடந்து கொள்ளும் அவரால் கடின



“உங்கள் மருமகன் சோமு இன்னும் இரண்டு வாரமாவது ஆஸ்பத்திரியில் இருப்பான்.”

“உனக்கு எப்படித் தெரியும்? ஆஸ்பத்திரியில் சோமுவைப் பார்த்தாயா?”

“இல்லை; அந்த வார்டில் இருக்கும் நர்ஸைப் பார்த்தேன்!”

மாகவும் உடைத்துக்கொள்ள முடியும் என்பதை அந்த ஒரு வாரத்தில் நான் நன்றாக உணரும்படி அவர் செய்துவிட்டார்.

3

நாட்கள் செல்லச் செல்ல நான் அந்த விஷயத்தை மறந்துவிட்டேன். என் குதூகலத்தில் அவரும் அதை மறந்து விட்டார் என்றே நம்பினேன்—என்ன அசட்டுத்தனம்! அசட்டுத்தனமா? இல்லை; அப்போது அளவுக்கு மீறிய ஆனந்தத்தில் மூழ்கியிருந்த நான் எதையுமே லக்ஷியம் செய்யவில்லை. காரணம் என் வயிற்றில் ஏழு மாதத்திய சிசு இருந்து இன்பம் அளித்ததேயாகும்.

அன்றும் வழக்கம் போலக் கரைபுரண்டு ஓடும் பாமணியாற்றின் கரையில் வந்து உட்கார்ந்திருந்தோம். யாரோ, ஒரு 'பேஷண்ட்' வந்திருப்பதாக வேலையாள் வந்து சொல்லவே அவர் சற்று நேரத்தில் திரும்பி வருவதாகச் சொல்லி விட்டு எழுந்து சென்றார். அவர் சென்றதும் என் சிந்தனை எல்லை மீறிச் சென்று என்னுடைய நினைவையே அபகரித்துக்கொண்டு விட்டது. கரை புரண்டு ஓடும் பாமணியாற்றின் தோற்றம் கரைபுரண்டு ஓடும் என் ஆனந்தத்திற்கு அஸ்திவாரம் போட்டது. என் வயிற்றின் இடது பக்கத்தில் தன் சின்னஞ்சிறிய குதிகாலால் உதைத்து இன்ப வேதனை தந்த என் செல்வம் அப்போது என் மனக் கண்முன் தவழ்ந்து ஓடி வந்தது. 'களுக்' கென்ற அதன் சிரிப்பொலியும், காதள வோடிய அதன் கயல் விழிகளும் என் சிந்தையைக் கொள்ளை கொண்டுவிட்டன. பின் இந்த உலக நினைவு எனக்கு எப்படி வரும்?

“இன்னுமா இங்கு உட்கார்ந்திருக்கிறாய்! பரிமளா எங்கே!” என்ற என் கணவரின் கேள்வி என்னைத் திடுக்கிட்டு விழிப்படையச் செய்தது. பரபரப்புடன் எழுந்தேன். அதற்குள் நன்றாக இருட்டி விட்டது. 'எனக்கு முன்னால் சற்றுத் தூரத்தில் விளையாடிக்கொண்டிருந்த பரிமளா எங்கே?' என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. இந்தக் கேள்வியுடன் திகைத்து நின்ற என் மௌனத்தைக் கண்டு அவர் வெருண்டு விரைவாக வீட்டை நோக்கி நடந்தார்.

பரிமளா வீட்டிலும் இல்லை; வெளியிலும் இல்லை! பதறிப் போன என் கணவர் பரபரப்புடன் ஆட்களை அழைத்துக் கொண்டு கரை முழுவதும் ஓடித் தேடினார்.

குழந்தை தவறித் தண்ணீரில்......?

இதற்குமேல் நினைக்கவே முடியாமல் தலையைச் சுற்றியது.

ஆட்கள் நீரில் இறங்கிச் சோதிக்கவும் ஆரம்பித்துவிட்டனர். என் கணவர் முகத்திலிருந்து இரத்தம் வெளியே தெறித்து விடும்போல் இருந்தது. அவரும் ஆட்களுடன் தண்ணீரில் இறங்கித் தேடினார். இருள் சூழ்ந்த அந்த நேரத்தில், விளக்குகளின் உதவி கொண்டு எவ்வளவு தூரம் தேட முடியுமோ அவ்வளவு தூரம் தேடியாகிவிட்டது. எந்தவிதமான புலனும் அகப்படவில்லை.

என்னுடைய நெஞ்சு குமுறியது. 'அந்தப் பயங்கர இரவைப் போல் இனி என் வாழ்வில் என்றுமே வர வேண்டாம். என் செல்வமே! பரிமளா!' என்று என் உள்ளம் வெடித்துவிடும்போல் குமுறினேன். நீண்ட, பயங்கரமான அந்த இரவும் முடிந்து விடிந்தது. எங்கேயோ மூங்கில் புதர்களுக்கிடையில் சிக்கி, அடையாளம் தெரியாமல் நசுங்கிப் போயிருந்த ஒரு பெண் குழந்தையின் பிரேதம் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டு வரப் பட்டது. பிரேதத்தைக் கண்டதும் வீடே 'ஹோ' வென்று கதறிவிட்டது.

அன்னம், தண்ணீரின்றிக் கதறிக் கொண்டிருந்த என்னைத் தட்டி எழுப்பிய வேலைக்காரி, “அம்மா! ஐயா உங்களை இந்த வண்டிக்கே வேண்டுமானாலும் ஊருக்குப் புறப்படச் சொல்லிருக்க!” என்றாள்.

விஷயம் விளங்காததால் நான் எழுந்து அவர் அறைக்குள் நுழைந்தேன். “அப்படியே நில்!” என்ற இடிக் குரல் கேட்டு நடுங்கிச் சிலையாக நின்றுவிட்டேன்.

அதே இடிக் குரலில் என் கணவர் தொடர்ந்து, “பாவி! கொலைகாரி! என் குழந்தையை மெள்ளிடைப் பிடித்து ஆற்றில் தள்ளிக் கொன்ற கொலைபாதகி! துரோகி! போ! என் முன் நில்லாதே! சண்டாளி!” என்று இரைந்து கத்தினார்.

அந்த அறையிலுள்ள ஒவ்வொரு பொருளும், 'கொலைகாரி!' 'கொலைகாரி!' 'கொலைகாரி!' என்று எதிரொலி கொடுத்துக் கொண்டு என்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன. “ஐயோ!” என்று இரு கைகளாலும் காதைப் பொத்திக் கொண்டேன். தலை சுழன்றது. 'கொலைகாரி!' 'கொலைகாரி' என்று பல குரல்கள் என் காதுகளில் ரீங்காரம் செய்ய, உடல் சோர்ந்து கீழே விழுந்தேன். (அடுத்த இதழில் முடியும்)



காற்று

அமரகவி பாரதியார்

ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல். ஓலைப் பந்தல், தென்னோலை.

குறுக்கும் நெடுக்குமாக ஏழெட்டு மூங்கிற் கழிகளைச் சாதாரணக் கயிற்றால் கட்டி மேலே தென்னங் கீற்றுகளை விரித்திருக்கிறது.

ஒரு மூங்கிற் கழியிலே கொஞ்சம் மிச்சக் கயிறு தொங்குகிறது.

ஒரு சாண் கயிறு.

இந்தக் கயிறு, ஒரு நாள் சுகமாக ஊசலாடிக் கொண்டிருந்தது.

பார்த்தால் துளிக் கூடக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை.

சில சமயங்களில் அசையாமல் 'உம்' மென்றிருக்கும்; கூப்பிட்டாற்கூட ஏனென்று கேட்காது.

இன்று அப்படியில்லை. 'குஷால்' வழியிலிருந்தது.

எனக்கும் இந்தக் கயிற்றுக்கும் ஸ்நேஹம். நாங்கள் அடிக்கடி வார்த்தை சொல்லிக் கொள்வதுண்டு.

"கயிற்றினிடத்தில் பேசினால், அது மறுமொழி சொல்லுமா?"

பேசிப் பார், மறுமொழி கிடைக்கிறதா இல்லையா என்பதை.

ஆனால் அது ஸந்தோஷமாக இருக்கும் ஸமயம் பார்த்து வார்த்தை சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், முகத்தைத் தூக்கிக் கொண்டு சும்மா இருந்து விடும், பெண்களைப் போல.

எது எப்படியிருந்தாலும், இந்த வீட்டுக் கயிறு பேசும். அதில் ஸந்தேஹமேயில்லை.

ஒரு கயிறு சொன்னேன்? இரண்டு கயிறு உண்டு.

ஒன்று ஒரு சாண்; மற்றொன்று முக்கால் சாண்.

ஒன்று ஆண்; மற்றொன்று பெண்; கணவனும், மனைவியும்.

அவை யிரண்டும் ஒன்றையொன்று காமப் பார்வைகள் பார்த்துக் கொண்டும், புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டும், வேடிக்கைப் பேச்சுப் பேசிக் கொண்டும் ரஸப் போக்கிலே யிருந்தன.

அந்தத் தருணத்திலே நான் போய்ச் சேர்ந்தேன்.

ஆண் கயிற்றுக்குக் 'கந்தன்' என்று பெயர்.

பெண் கயிற்றுக்குப் பெயர் 'வள்ளியம்மை.

(மனிதர்களைப் போலவே துண்டுக் கயிறுகளுக்கும் பெயர் வைக்கலாம்.)

கந்தன் வள்ளியம்மைமீது கையைப் போட வருகிறது. வள்ளியம்மை சிறிது பின் வாங்குகிறது. அந்தச் சந்தர்ப்பத்திலே நான் போய்ச் சேர்ந்தேன்.

"என்ன, கந்தா! ஸௌக்கியந்தானா? ஒரு வேளை, நான் ஸந்தர்ப்பந் தவறி வந்து விட்டேனோ, என்னவோ, போய், மற்றொரு முறை வரலாமா?" என்று கேட்டேன்.

அதற்குக் கந்தன் "அட போடா, வைதிக மனுஷன்! உன் முன்னேகூட லஜ்ஜையா? என்னடி வள்ளி, நமது ஸல்லாபத்தை ஐயர் பார்த்ததிலே உனக்குக் கோபமா?" என்றது.

"சரி, சரி, என்னிடத்தில் ஒன்றும் கேட்க வேண்டாம்" என்றது வள்ளியம்மை.

அதற்குக் கந்தன், கடகட வென்று சிரித்துக் கைதட்டிக் குதித்து, நான் பக்கத்திலிருக்கும்போதே வள்ளியம்மையைக் கட்டிக்கொண்டது.

வள்ளியம்மை கீச்சுக் கீச்சென்று கத்தலாயிற்று. ஆனால் மனதுக்குள்ளே வள்ளியம்மைக்குச் சந்தோஷம். நாம் சுகப்படுவதைப் பிறர் பார்ப்பதிலேயே நமக்கு ஸந்தோஷந்தானே?

இந்த வேடிக்கை பார்ப்பதிலே எனக்கு மிகவும் திருப்திதான். உண்மையைச் சொல்லி விடுவதிலே என்ன குற்றம்? இளமையின் ஸல்லாபம் கண்ணுக்குப் பெரியதோர் இன்ப மன்றோ?

வள்ளியம்மை அதிகக் கூச்சலிடவே, கந்தன் அதை விட்டுவிட்டது.

சில க்ஷணங்களுக்குப் பின் மறுபடி போய்த் தழுவிக்கொண்டது.

மறுபடியும் கூச்சல், மறுபடியும் விடுதல்; மறுபடியும் தழுவல், மறுபடியும் கூச்சல்; இப்படியாக நடந்துகொண்டே வந்தது.

"என்ன, கந்தா, வள்ளியிடத்தில் ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டேனென்கிறாயே? வேறொரு சமயம் வருகிறேன். போகட்டுமா?" என்றேன்.

"அட போடா, வைதிகம்! வேடிக்கை! தானே பார்த்துக்கொண்டிருக்கிறாய். இன்னும் சிறிது நேரம் நின்று கொண்டிரு. இவளிடம் சில வ்யவஹாரங்கள் தீர்க்கவேண்டியிருக்கிறது. தீர்ந்தவுடன் நீயும் நானும் சில விஷயங்கள் பேசலாம் என்றிருக்கிறேன். போய்விடாதே, இரு" என்றது.

நின்று மேன்மேலும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் கழிந்தவுடன், பெண்ணும் இன்ப மயக்கத்திலே நான் நிற்பதை மறந்து நாணத்தை விட்டுவிட்டது.

உடனே பாட்டு. நேர்த்தியான துக்கடாக்கள். ஒரு வரிக்கு ஒரு வர்ணமெட்டு. இரண்டே 'ஸங்கதி'. பின்பு மற்றொரு பாட்டு.

கந்தன் பாடி முடிந்தவுடன் வள்ளி. இது முடிந்தவுடன் அது. மாற்றி மாற்றிப் பாடி — கோலாஹலம்!

சற்று நேரம் ஒன்றையொன்று தொடாமல் விலகி நின்று பாடிக் கொண்டேயிருக்கும். அப்போது வள்ளியம்மை தானாகவே போய்க் கந்தனைத் தீண்டும்.

அது தழுவிக் கொள்ள வரும். இது ஓடும். கோலாஹலம்!

புரியவில்லை!



கிட்டு:—டேய் மணி! எங்கப்பா சொல்லிக் கொடுக்கிறது எனக்குப் புரிகிறதே இல்லை.........

மணி:—உங்க அப்பா தேவலையே! எங்கப்பா சொல்லித் தருகிறது அவருக்கே புரிகிறதில்லை!

இங்ஙனம் நெடும்பொழுது சென்ற பின் வள்ளியம்மைக்குக் களியேறி விட்டது.

நான் பக்கத்து வீட்டிலே தாகத்துக்கு ஜலம் குடித்து விட்டு வரப் போனேன்.

நான் போவதை அவ்விரண்டு கயிறுகளும் கவனிக்கவில்லை.

நான் திரும்பி வந்து பார்க்கும்போது வள்ளியம்மை தூங்கிக் கொண்டிருந்தது.

கந்தன் என் வரவை எதிர்நோக்கியிருந்தது.

என்னைக் கண்டவுடன், "எங்கேடா போயிருந்தாய், வைதிகம்! சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டாயே?" என்றது.

"அம்மா நல்ல நித்திரை போலிருக்கிறதே?" என்று கேட்டேன்.

ஆஹா! அந்த க்ஷணத்திலே கயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டு என் முன்னே 'நின்ற தேவனுடைய மஹிமையை என்னென்று சொல்வேன்!

காற்றுத் தேவன் தோன்றினான்.

அவனுடல் விம்மி விசாலமாக இருக்குமென்று நினைத்திருந்தேன்.

வயிர ஊசிபோல் ஒளி வடிவமாக இருந்தது.

"நமஸ்தே வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி."

காற்றே, போற்றி! நீயே கண்கண்ட பிரம்மம்.

அவன் தோன்றிய பொழுதிலே வான முழுதும் ப்ராண சக்தி நிரம்பிக் கனல் வீசிக் கொண்டிருந்தது


ஆயிரம் முறை அஞ்சலி செய்து வணங்கினேன்.

காற்றுத் தேவன் சொல்வதாயினன்:— "மகனே, ஏதடா கேட்டாய்? அந்தச் சிறிய கயிறு உறங்குகிறதா என்று கேட்கிறாயா? இல்லை. அது செத்துப் போய் விட்டது. நான் ப்ராண சக்தி.

"என்னுடனே உறவு கொண்ட உடல் இயங்கும். என்னுறவில்லாதது சவம். நான் ப்ராணன். என்னாலேதான் அச்சிறு கயிறு உயிர்த்திருந்தது; சுகம் பெற்றது. சிறிது களைப்பெய்தியவுடனே அதை உறங்க இறக்க விட்டுவிட்டேன். துயிலும் சாவுதான்; சாவும் துயிலே. நான் விளங்குமிடத்தே அவ்விரண்டும் இல்லை. மாலையில் வந்து ஊதுவேன். அது மறுபடி பிழைத்துவிடும்.

"நான் விழிக்கச் செய்கிறேன். அசையச் செய்கிறேன். நான் சக்தி குமாரன். என்னை வணங்கி வாழ்க!" என்றான்.

"நமஸ்தே, வாயோ! த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி. த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம வதிஷ்யாமி."



கடவுளுக்கு 144

❀ ராஜேந்திர சங்கர் ❀

எலிபெண்டா குகையில் பார்ப்போருடைய கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் திரிமூர்த்தியின் சிலைக்கு அடியில் ஸ்ரீனிவாசன் படுத்திருந்தான். அவனுடன் வந்திருந்த அவனுடைய நண்பர்கள் குகையைச் சுற்றி உல்லாசமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சூரியன் தகித்துக் கொண்டிருந்தான். அந்தக் கொடிய வெப்பத்தில், அங்கு நாற்புறமும் கிடந்த பிரம்மாண்டமான பாறைகளும் கூட உருகிவிடும்போலத் தோன்றின.

ஸ்ரீனிவாசன் 'கல்கி' இதழைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். தெய்வங்களை வைத்து சினிமாப் படங்கள் எடுப்பதைத் தடுக்கவேண்டும் என்பது பற்றி அந்த இதழில் வெளியான 'வட்டமேஜைக் கடிதங்'களை அவன் படித்தான்.

• • •

ஸ்ரீனிவாசன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. தான் ஏதோ ஒரு புது இடத்துக்கு வந்துவிட்டதுபோல இருந்தது அவனுக்கு. முன்பின் பழக்கம் இல்லாத யாரோ ஒரு ஆசாமி அவனருகே வந்து, "வா போகலாம்! தெய்வங்களை வைத்து சினிமாப் படங்கள் பிடிக்கக் கூடாது என்று பூலோகத்தில் ஒரு கிளர்ச்சி தோன்றியிருக்கிறது அல்லவா? இதைப் பற்றி அந்த தெய்வங்களுடைய அபிப்பிராயங்கள் என்னவென்பதைக் கேட்போம்" என்றார். ஸ்ரீனிவாசன் அந்த ஆசாமியை உற்று நோக்கினான். அவர் நாரதராகத் தான் இருக்க வேண்டுமென்று அவனுக்கு நிச்சயமாகப் பட்டது. தம்புராவை மாத்திரம் எடுத்துக் கொண்டுவர அவர் மறந்துபோய் விட்டார் போலிருக்கிறது!

அவன் நாரதரைப் பார்த்து, "சுவாமி, இது சம்பந்தமாக தெய்வங்களுடைய அபிப்பிராயம் என்னவென்பதைத் தெரிந்து கொள்ள எனக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் அவர்களை நான் எப்படிப் பார்க்க முடியும்?" என்றான்.

நாரதர் கடகடவென்று சிரித்தார். "ஹே மனிதா! இது பூலோகம் அல்ல" என்றார் திரிலோக சஞ்சாரியான நாரதர்.

ஸ்ரீனிவாசனுடைய ஆச்சரியம் பன்மடங்காயிற்று. அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நாரதர் ஸ்ரீனிவாசனை அழைத்துக் கொண்டு வானவெளியின் ஒரு கோடியை நோக்கிச் சென்றார். பூலோகத்தில் காணாத பல அற்புதங்களையும் விந்தைகளையும் ஸ்ரீனிவாசன் அங்கு கண்டான். கடைசியில் ஒரு தடாகத்தருகே போய் இருவரும் நின்றார்கள். அந்தத் தடாகம் முழுவதும் அல்லியும் தாமரையும் மலர்ந்து பார்ப்பதற்கு வெகு அழகாக விளங்கியது. படித்துறையருகே, நடமாடும் மலர்களைப் போல விளங்கிய பல இளம் பெண்கள் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கைவளையல்கள் குலுங்கும் ஓசையும் கால் மெட்டிகள் ஒலிக்கும் ஓசையும் இனிய வீணாகானம் போல இருந்தது ஸ்ரீனிவாசனுக்கு. அத்தனை பேருக்கும் மத்தியில் நீலமேக சியாமள ரூபத்தில் ஒரு சுந்தர புருஷன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

நாரதர் ஸ்ரீனிவாசனைப் பார்த்து, "இவர் யார் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"கிருஷ்ணபகவானாக இருக்குமோ?" என்று பீதியுடன் கேட்டான் ஸ்ரீனிவாசன்.

"ஆம், அவரேதான்!" என்றார் நாரதர்.



நாரதரைப் பார்த்ததும் அந்தப் பெண்கள் ஒரு புறமாக ஒதுங்கி நின்றார்கள். நாரதரும் ஸ்ரீனிவாசனும் கிருஷ்ண பகவானைக் கைகுவித்து வணங்கினார்கள்.

ஸ்ரீகிருஷ்ண பகவான் நாரதரைப் பார்த்து, "நாரத முனிவரே, பூலோகத்திலிருந்தா வருகிறீர்கள்? அங்கு ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டார்.

"விசேஷத்துக்கு என்ன குறைச்சல்? இப்போது அங்கு புதிதாக ஒரு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. என்ன தெரியுமா?"

"என்ன?" என்று அதிசயத்துடன் கேட்டார் கிருஷ்ணன்.

நாரதர் ஸ்ரீனிவாசனைப் பார்த்து, "நீயே சொல்" என்றார்.

ஸ்ரீனிவாசன் கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்து, "சுவாமி, முதலாவது என்னுடைய சந்தேகம் ஒன்றைத் தீர்த்துவைக்க வேண்டும்" என்றான்.

"என்ன?" என்று கேட்டார் கண்ணன்.

"பரமாத்மாவாகிய தாங்கள் சதா பெண்களுக்கு மத்தியில் இப்படி விளையாடிக் கொண்டிருக்கலாமா?"

"இதில் என்ன தப்பு?" என்று கேட்டார் கண்ணன்.

ஸ்ரீனிவாசன் ஒருமாதிரித் தயங்கிக் கொண்டே, "தப்பு ஒன்றும் இல்லை, ஆனால் அதை பூலோகத்தில் சினிமாப் பட முதலாளிகள் பணம் சம்பாதிப்பதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களே!" என்றான்.

"ஹூம், அப்படியா! என்ன செய்கிறார்கள் அவர்கள்?"

"கோபியர் உள்ளத்தைக் கவர்ந்த கோகுல பாலனாகிய தங்களுடைய பால்ய லீலைகளை யெல்லாம் வைத்து அவர்கள் வெகு ஆபாசமாகப் படங்கள் எடுக்கிறார்கள். ராதை உங்களைப் பார்த்துக் கண்ணடிப்பது போலவும்,

---

★ பம்பாய் நகருக்குச் சமீபத்தில் கடலில் பல தீவுகள் உண்டு. அவற்றில் ஒரு தீவில், மாமல்லபுரம், அஜந்தா, எல்லோரா முதலிய இடங்களில் உள்ளது போன்ற அற்புதமான குகைச் சிற்பங்கள் இருக்கின்றன. இந்தத் தீவுக்கு எலிபெண்டா தீவு என்று பெயர்.



நீங்கள் ராதையைப் பார்த்துக் கண்ணடிப்பது போலவும் எடுக்கிறார்கள். இதைப் பார்த்து விட்டு பூலோக வாசிகள் தங்களைப் பற்றி எவ்வளவு பரிகாசமாகப் பேசுகிறார்கள் தெரியுமா?" என்றான்.



இதைக் கேட்டதும் கிருஷ்ண பகவானுடைய முகத்தில் கோபம் பொங்கியது. "அப்படியா சேதி! இதோ சக்கராயுதத்தை எடுக்கிறேன்" என்று இடிமுழக்கம் செய்தார்.

நாரதர் கிருஷ்ணனை நோக்கி, 'கண்ணா, அவசரப்படாதேயும்! நீர் சக்கராயுதத்தை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. தெய்வங்களை சினிமாப் படங்களில் நுழைத்துப் பரிகாசம் செய்வதைத் தடுப்பதற்காகப் பூலோகத்திலேயே ஒரு கிளர்ச்சி தோன்றியிருக்கிறது" என்றார்.

"அப்படியா! செய்த தப்பிதத்தை அவர்கள் உணருகிறார்களா! ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லும். செய்த தப்பிதத்தை திருத்திக்கச் சொல்லும்" என்று சொல்லிவிட்டு மீண்டும் தடாகக் கரையில் அமர்ந்து கேளிக்கைகளில் ஆழ்ந்துவிட்டார்.

நாரதரும் ஸ்ரீனிவாசனும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

வெகு தூரம் போனார்கள். கடைசியில் சொர்ணமயமான ஒரு மாளிகையை அடைந்தார்கள். மாளிகையின் வெளித் திண்ணையில் நன்கு கொழுத்துப் பருத்திருந்த ஒரு ஆசாமி படுத்திருப்பதைக் கண்டார்கள். ஸ்ரீனிவாசன் நாரதரைப் பார்த்து, "சுவாமி, இவர் யார்?" என்று கேட்டான்.

"இவர்தான் குபேரன். வானுலக நிதி மந்திரி" என்றார் நாரதர்.

நாரதரைப் பார்த்ததும் குபேரன் எழுந்து உட்கார்ந்தான்.

"குபேரா, என்ன இப்படிப் பகலில் தூங்கிக்கொண்டிருக்கிறாய்! வேலையொன்றும் இல்லையா?" என்று கேட்டார் நாரதர்.

"நான் என்னசெய்வது, சுவாமி? கலியுகம் பிறந்த பிறகு நான் ஒரு தடவைகூட பட்ஜெட் சமர்ப்பிக்க முடியவில்லை. வருமானம் மிகவும் குறைந்துவிட்டது. புதிய திட்டங்கள் எதுவும் போட முடியவில்லை. சிக்கனத்தை உத்தேசித்து வெளிநாட்டு ஸ்தானிக காரியாலயங்களை யெல்லாம் வரவழைத்து விட்டோம்."

"அதை யெல்லாம் என்னிடம் எதற்காகச் சொல்லுகிறாய்? நான் மற்றவர்களுடைய விவகாரங்களில் தலையிடுவது கிடையாது. அதெல்லாம் இருக்கட்டும்—இதோ, இந்த வாலிபன், பூலோகத்திலிருந்து வந்திருக்கிறான். உங்கள் கணக்குப் புத்தகங்களை ஒரு தடவை புரட்டிப் பார்த்து, பூலோகத்து சினிமாப் படங்களிலிருந்து உமக்கு எவ்வளவு பணம் கிடைக்கிறது என்று சொல்லுகிறீரா?"

குபேரனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. "பணமா? சினிமாப் படங்களிலிருந்தா?—ஹஹ்ஹா! — படம் வெளியாகும் முகூர்த்தத் திருநாளன்று சில அழுகல் தேங்காய்களையும் கொஞ்சம் நெய்யையும் அபிஷேகம் செய்வார்கள். அந்த நெய்யாவது சுத்த நெய்யாக இருக்குமா?—கிடையாது. இவ்வளவுதான். இதைச் சொல்லுவதற்குக் கணக்குப் புத்தகங்களை வேறு புரட்டிப் பார்க்கவா வேண்டும்?" என்றான்.

இதைக் கேட்டதும் ஸ்ரீனிவாசன், "அப்படியானால் ராமாயண—மகா பாரதத்தில் உள்ள பல அற்புதமான கதைகளை சினிமாப்பட முதலாளிகள் கொலை செய்யும்படி ஏன் விடுகிறீர்கள்?" என்று கேட்டான்.

குபேரன் மீண்டும் கோபத்துடன் சொன்னான்: "திருடர்கள், கொள்ளைக்காரர்கள், கள்ள மார்க்கட்காரர்கள்—முதலியவர்கள் கூட எங்களுக்கு ஏராளமான காணிக்கையும் பணமும் அனுப்பி வைக்கிறார்கள். ஆனால், எங்களை வைத்துக் கொள்ளை கொள்ளையாகப் பணம் சம்பாதிக்கும் பட முதலாளிகள் மகா கருமிகளாக இருக்கிறார்கள்."

"இவர்களுக் கெல்லாம் நீங்கள் நரக தண்டனை கொடுப்பதாகக் கேள்விப்பட்டேனே, அது வாஸ்தவந்தானா?" என்று கேட்டான் ஸ்ரீனிவாசன்.

"அதற்கெல்லாம் சினிமாப் பட முதலாளிகள் பயப்படப் போகிறார்களா, என்ன?" என்றார் நாரதர்.

குபேரன் சற்று நேரம் வரை யோசனை செய்துவிட்டு, "ஓய் நாரதரே, இப்போதுள்ள நிலைமை எனக்குப் பிடிக்கவில்லை. இதை நாம் ஒழிக்கவேண்டும். நம்முடைய

தெய்வங்கள் விழித்து உட்காருவதற்காக நாம் ஏதாவது ஒருவகைக் கிளர்ச்சியையோ புரட்சியையோ அல்லது குழப்பத்தையோ உண்டாக்க வேண்டும். இதற்கு இந்த வாலிபன் ஏதாவது உதவிசெய்ய மாட்டானா?—தம்பி, நீ கம்யூனிஸ்டா?" என்றான்.

"இல்லை, ஸ்வாமி! நான் வேலையில்லாக் கூட்டத்தைச் சேர்ந்தவன். ஆனால் எனக்கு உணவையும் உடையையும் எந்தக் கட்சி கொடுத்தாலும் அதில் சேர நான் தயாராக இருக்கிறேன்" என்றான் ஸ்ரீனிவாசன்.

நாரதர் அதிசயத்துடன் குபேரனை நோக்கி, "குபேரா, என்ன இது! கம்யூனிஸ்ட்கள் வந்தால் உன் கதி என்ன ஆகும் தெரியுமா? வந்ததும் வராததுமாக முதலில் உன்னுடைய பொக்கிஷத்தைத்தான் கைப் பற்றுவார்கள்!" என்றார்.

இந்தச் சமயத்தில் ஹநுமார் அந்தப் பக்கமாகப் போவதை ஸ்ரீனிவாசன் கண்டான். உடனே கைகுவித்து அவரை வணங்கி விட்டு, "மகாப் பிரபுவே, தங்களுடன் கொஞ்சம் பேசலாமா?" என்று கேட்டான்.

"நான் மகாப் பிரபு அல்ல; பிரபுவும் அல்ல; பிரபுவின் தாஸன் அடியேன்" என்றார் ஹநுமார்.

"தாங்கள் யாராக இருந்தபோதிலும் என்ன!—பூலோகத்து சினிமாப் படங்களிலே தாங்கள் ஈடு இணையற்ற 'ஸ்டண்ட்' வீரராக விளங்குகிறீர்கள். இதை யாரும் மறுக்கவே முடியாது."

ஹநுமார் சிரித்துக் கொண்டே, "அப்படியா, சந்தோஷம்! பூலோகத்தில் எனக்கு ஏராளமான பக்தர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்."

"சினிமாப் பட முதலாளிகள் தங்களை இதுவரை ஒரு காதல் கட்டத்தில்கூட மாட்டி வைக்கவில்லை. அப்படியிருந்தும் கூட......" என்று ஸ்ரீனிவாசன் முடிப்பதற்குள், "காதலா? அதென்ன? காதல் என்றால் என்ன?" என்று கேட்டார் ஹநுமார் திகைப்புடன்.

நாரதர் சிரித்துக் கொண்டே, "சுத்த கட்டுப் பெட்டியாக இருக்கிறீரே!" என்று சொல்லி விட்டு காதல் என்றால் என்னவென்பதை ஹநுமாருக்கு விளக்கினார்.



ஹநுமார் அதைக் கேட்டதும் காது இரண்டையும் பொத்திக் கொண்டு, "ராம் ராம்! நான் பால பிரம்மச்சாரி அல்லவா? நான் புலனடக்கம் மிக்கவன் என்பது பூலோகவாசிகளாகிய உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

"புலனடக்கமா? அப்படியென்றால் என்ன?" என்று கேட்டான் ஸ்ரீனிவாசன்.

நாரதர் மீண்டும் சிரித்துவிட்டு, "ஹநுமாரே, உமக்குக் காதல் என்றால் என்னவென்று தெரியவில்லை; பூலோக வாசிகளுக்குப் புலனடக்கம் என்றால் என்னவென்று தெரியவில்லை. நன்றாயிருக்கிறது!" என்றார்.

ஒரு மெல்லிய மேகத்திரை அவர்களைச் சூழ்ந்தது. சற்று நேரத்துக்குப் பிறகு ஸ்ரீனிவாசன், நாரதமகா முனியுடன் தான் பழைய இடத்துக்கே திரும்பி வந்து விட்டதை உணர்ந்தான். அவன் நாரதரை நோக்கி, "எங்கள் சினிமாப் படங்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான்.

அப்போது அங்கு திடீரென்று ஏதோ ஒரு ஓசை கேட்டது. ஸ்ரீனிவாசன் சுற்று முற்றும் பார்த்தான். நாரதர் ஸ்ரீனிவாசனை நோக்கி, "ஒன்றும் இல்லை. கணேசனை உனக்குத் தெரியும் அல்லவா?—அவன் எலியின்மேல் சவாரி செய்துகொண்டு வருகிறான். அவ்வளவுதான்!" என்றார்.

"அப்படியா!" என்று சிரித்துவிட்டு ஸ்ரீனிவாசன் நாரதரை நோக்கி, "முனி புங்கவரே, கணேசருடைய தந்தையைப் பார்க்க முடியுமா?" என்று கேட்டான்.

"யார்?—சிவனையா?"

"ஆமாம்" என்றான்.

"பார்வதியின் அநுமதியில்லாமல் அவரைப் பார்க்க முடியாதே!"

"என்ன!"

"ஆம், பார்வதியின் அநுமதியில்லாமல் அவரைப் பார்க்க முடியாது. இப்போது பார்வதிக்கு இங்கே செல்வாக்கு அதிகம். கொஞ்ச காலத்துக்கு முன்பு இங்கே ஒரு லேடீஸ் கிளப் ஏற்படுத்தினாள். பெண்ணுக்குச் சம உரிமை வழங்க வேண்டு

மென்று தீவிரமாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறான். — இதோ வந்துவிட்டோம் சிவபெருமான் மாளிகைக்கு — நமஸ்காரம் தாயே!"

"வாங்கோ! வாங்கோ! நாரதமுனிவரே, என்ன சமாசாரம் இப்படி வந்தது? புதிதாக ஏதாவது கலகம் மூட்ட வந்திருக்கிறீரா?" என்று கேட்டாள் பார்வதிதேவி.



"இல்லை தாயே! அன்று வேடல் ஜெப்பில் தாங்கள் கொடுத்த குட்டுக்குப் பிறகு இனிமேல் கலகம் செய்ய எனக்குத் தைரியம் வருமா?—பகவானைப் பார்க்கவேண்டுமென்று இந்த இளைஞன் வந்திருக்கிறான்."

"இப்போது முடியாது. அவர் ரொம்பக் கோபமாக இருக்கிறார். அவரை ஒரு அறையில் அடைத்துப் பூட்டியிருக்கிறேன்."

ஸ்ரீனிவாசன் பார்வதியை நோக்கி, "தேவி, பூலோகத்துப் பெண்களெல்லாம் உங்களைப் பார்த்துப் பரவசமடைந்து பெருமையால் பூரித்துப் போகிறார்கள்" என்றான்.

இதைக் கேட்டதும் தேவியின் முகம் மலர்ந்தது. "அப்படியா! ரொம்ப சந்தோஷம்!" என்றாள். பிறகு ஒரு அறையைச் சுட்டிக் காட்டி, "இதோ இந்த அறையில் தான் பகவான் இருக்கிறார்; போய்ப் பாருங்கள்" என்றாள்.

நாரதர் அந்த அறைக்குள் புகுந்தார். சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டால் என்ன செய்வது என்று அஞ்சி ஸ்ரீனிவாசன் வாசலருகே நின்றுகொண்டிருந்தான். பார்வதிதேவி தம்முடைய பதியருகே சென்று, "ஸ்வாமி, தங்களைக் கண்டு பேசுவதற்காக மண்ணுலகத்திலிருந்து ஸ்ரீனிவாசன் வந்திருக்கிறான்" என்றாள்.

"அப்படியா! எங்கே அந்த ஸ்ரீனிவாசன்?" என்று கேட்டார் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்.

ஸ்ரீனிவாசன் அஞ்சி அஞ்சி ஒடுங்கிய வண்ணம் சூலபாணியனான ஈசனருகே சென்று, "தேவ தேவ! தெய்வங்களுக்கெல்லாம் ஆதிநாயக! வணங்குகிறேன்" என்றான்.

ஈஸ்வரன் பயங்கரமான ஒரு புன்னகை செய்துவிட்டு, "நம்முடைய மேன்மையையும் பெருமையையும் நீ உணர்ந்திருக்கிறாய் போதும்" என்றார்.

ஸ்ரீனிவாசன் பயபக்தியுடன், "ஸ்வாமி, நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் பூலோகத்து மக்கள் எவ்வளவு கேலிக்கிடமாகத் தங்களைச் சித்திரிக்கிறார்கள், தெரியுமா?" என்றான்.

"என்ன?" என்று கேட்டார் உமையொரு பாகர்.

"பூலோகத்தில் எடுக்கும் சினிமாப் படங்களில் தங்களுக்கு நிஜமான புலித்தோல் கொடுப்பதே இல்லை."

"பின் என்ன தோலைக் கொடுக்கிறார்கள்?" என்றார் பினாகபாணி.

"போலி புலித்தோலைக் கொடுக்கிறார்கள்!" என்றான் ஸ்ரீனிவாசன்.

"ஆ! அது யாருக்கு வேண்டும்? நான் ஒரு புலியைக் கொன்றாவது புலித்தோல் எடுத்துக் கொள்வேன்."

"ஆனால் இப்போது இந்தியாவில் புலிகள் அதிகமாக இல்லை. பாகிஸ்தானத்தில்தான் இருக்கின்றன. இந்திய யூனியனில் ஜூனாகாத் சமஸ்தானத்தில் சிங்கங்கள் அதிகமாக இருக்கின்றன. தாங்கள் ஒரு சிங்கத்தைக் கொன்று அதன் தோலை உபயோகித்துக் கொண்டால் என்ன?"

"ஆனால் அதில் புலித்தோலைப் போலப் பட்டைக் கோடுகள் இருக்காதே!"

"அதனால் என்ன? சில டாலர்களை எடுத்து வீசினால் அமெரிக்காவிடமிருந்து அத்தகைய கோடுகளை வாங்கிக் கொள்ளலாமே!" என்றான் ஸ்ரீனிவாசன்.

"டாலரா? அதென்ன அது,—டாலர்?"

அதை எப்படி விளக்கிச் சொல்லுவது என்று ஸ்ரீனிவாசன் யோசித்துக் கொண்டிருந்தபோது, பார்வதி அவனுக்கு ஒத்தாசை செய்தாள்.

அவள் ஈசனைப் பார்த்து, "ஸ்வாமி, கொஞ்ச நாளைக்கு முன்பு தாங்கள் ஒரு அமெரிக்கக் கம்பெனியிடம் கைலாஸத்தில் நூறு 'ஸ்கை ஸ்கிராப்பர்' மாளிகைகள் கட்டும்படியாக ஆர்டர் கொடுக்கவில்லையா?" என்று கேட்டாள்.

"ஆமாம்"

"அப்புறம் ஆயிரம் டாங்குகளும் பதினாயிரம் வெடி விமானங்களும் நாலாயிரம் குரூய்ஸர் கப்பல்களும் வேண்டுமென்று

மற்றொரு அமெரிக்கக் கம்பெனியிடம் ஆர்டர் கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா ?"

"ஆம், ஆனால் அதற்கும் டாலருக்கும் என்ன சம்பந்தம் ?"

"நீங்கள் அமெரிக்காவிலிருந்து ஏதாவது ஒன்றை வரவழைக்க வேண்டுமானால் அதற்கு அமெரிக்க நாணயமாகிய டாலரைக் கொடுக்க வேண்டும். டாலரைக் கொடுத்திருந்தால்தானே உங்களுக்கு இதெல்லாம் தெரியப்போகிறது! நாம் இதுவரை மிகவும் இரகசியமாக வைத்திருந்த அணுகுண்டையும் ராடாரையும் நீங்கள் அமெரிக்காவுக்குக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக டாங்குகளையும் விமானங்களையும் வரவழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்ல வேளையாக நான் கடைசியில் புகுந்து தடுத்திராவிட்டால், நீங்கள் காஸ்மிக் குண்டு இரகசியத்தையும் அமெரிக்காவுக்கு வெளியிட்டுவிட்டு, ஒரு ஜதை 'பிளாஸ்டிக் பூட்'ஸ்களையோ நைலான் ஸ்டாக்கிங்ஸ்களையோ வாங்கிக் கொண்டிருப்பீர்கள்.—அது இருக்கட்டும். பூலோகத்து மனிதன் ஒருவன் இங்கு காத்துக் கொண்டிருக்கிறானே, மறந்து விட்டீர்களா ?"

"எதற்காக அவன் காத்துக் கொண்டிருக்கவேண்டும்? போகச் சொல்லுகிறது தானே !" என்றார் பகவான்.

"சுவாமி, அவன் சினிமாப் படங்களைப் பற்றி அல்லவா பேசிக் கொண்டிருந்தான்?"

"ஓஹோ, மறந்தே போய்விட்டேன்— நல்லது, ஸ்ரீனிவாசா! அப்புறம் என்ன விசேஷம் இந்தியப் படவுலகிலே ?"

ஸ்ரீனிவாசன் மிக்க உற்சாகத்துடன் "சுவாமி, உலகத்துக்கெல்லாம் ஒரு பெருங் கடவுளாக விளங்கும் தங்களைப் பட முதலாளிகள் நடராஜப் பெருமானாக—அதாவது நடனமாடிக் கொண்டே யிருப்பதுபோலச் சித்திரிக்கிறார்களே !" என்றான்.

"இதில் தப்பு என்ன இருக்கிறது? நாட்டியக் கலையில் எனக்குள்ள பற்று எல்லோருக்கும் தெரிந்தது தானே!"

"ஆனால் சினிமாப்படங்களில் வரும் சிவபெருமான், தாண்டவ நிருத்தியம் என்ற பெயரால் காலை உதைத்து உதைத்து ஆடுவது எவ்வளவு ஆபாசமாக இருக்கிறது தெரியுமா ?"

இதைக்கேட்டதும் சிவபெருமானுடைய முகம் பெரிதும் விகாரம் அடைந்தது. "அப்புறம் ?" என்று கேட்டார்.

"உதயசங்கர் என்று ஒருவர் இருக்கிறார்......"

"உதயசிங்கரா ?—அது யார் ?"


"தங்களுடைய நாட்டியத்தின் சிறப்பைப் போற்றிப் புகழ்ந்து, அதைப் போல நாட்டிய மாட முயல்பவர்களில் அவரும் ஒருவர். ராம்கோபால் என்று இன்னொருவர் இருக்கிறார். அவரும் தங்களைப் பின்பற்றி......"

"என்ன ராம் கோபால் ? ராமனுடைய பெயரையும் கோபாலனுடைய பெயரையும் சேர்த்து வைத்துக் கொண்டவன் என்னை எப்படிக் காப்பியடிக்கலாம் ?"

"சுவாமி, படமுதலாளிகள் தங்களைப் பரிகசிக்கத்தக்க முறையில் படம் எடுக்கிறார்கள். அந்தப் பரிகாசத்தை யெல்லாம் கண்டு களிப்பதற்காக கோடிக் கணக்கான பொது ஜனங்கள் பணத்தைக் கொட்டிச் சினிமாவுக்குப் போகிறார்கள்."

இதைக் கேட்டதும் சிவபெருமானுடைய முகத்தில் பயங்கரமான ஒரு கோபப் புன்னகை உண்டாயிற்று. குதித்தெழுந்தார். "பார்வதி! எங்கே என் திரிசூலம்?— கொண்டு வா!" என்றார்.

"சாந்தம்! சாந்தம்! சுவாமி, சாந்தமடையுங்கள்" என்றாள் பார்வதி.



"இவர் யாருங்க? உங்களுக்கு ஏதேனும் உறவோ ?"

"ஆமாம். என் ஷட்டகருக்கு மச்சினன் தம்பியோட மாமனுக்கு மூணாவது மாப்பிள்ளைக்கு ஷட்டகர். ஏன் கேட்கிறீர்கள் ?"

"உங்க சாயலா இருக்கேன்னு கேட்டேன் ?"

"ஆமாம்; என் தம்பிதான் !"



"முடியாது! முடியாது! இந்த அநியாயத்தையும் அயோக்கியத் தனத்தையும் ஒழித்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன்" என்று இடி முழக்கம் செய்தார் பரமசிவன்.

சிவனுடைய ருத்ர வேசத்தைக் கண்ட பார்வதி சட்டென்று எழுந்து போய்க் கதவைச் சாத்தினாள்.

ஸ்ரீனிவாசன் தப்பித்தோம் பிழைத்தோம் என்று வெளியே ஓடினான்.

• • •

கண்ணை விழித்துப் பார்த்தான் ஸ்ரீனிவாசன். பள்ளி மாணவர்கள் பலர் ஒருவரையொருவர் துரத்திக்கொண்டு திரிமூர்த்தியின் சிலையருகே ஓடி வந்தார்கள். ஸ்ரீனிவாசன் தன் முகத்தில் அரும்பி யிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு மேலே பார்த்தான். அமைதியும் அருளும் பொங்கித் ததும்பிய அந்தத் திரிமூர்த்தியின் திருமுகங்களைப் பார்த்ததும் அவன் மெய் சிலிர்த்தான். அவனுடைய கண்களில் பக்திக் கண்ணீர் ததும்பியது.

மண்டியிட்டு அவன் சொன்னான்: "பகவானே, நாங்கள் எவ்வளவு அநாகரிகமாகிக் கொண்டு வருகிறோம்! நீங்கள் எங்களைப் படைத்தீர்கள். ஆனால் நாங்களோ உங்களை ஒழித்துக் கட்டுவதில் முனைந்திருக்கிறோம். எங்கள் பட முதலாளிகள் செய்து வரும் திருத்தொண்டின் மூலம் நாங்கள் எத்தகைய குப்பையை விலைக்கு வாங்கிக் கொட்டிக் கொள்கிறோம்............"

இதைச் சொல்லிவிட்டு ஸ்ரீனிவாசன் அக்கம்பக்கம் பார்த்தான். யாரையும் காணோம். உடனே அவன் திரிமூர்த்தியை நோக்கி ஒரு பிரதிக்ஞை செய்தான். "ஆண்டவனே, நான் எப்போதாவது சொந்தமாக ஒரு படம் எடுத்தாலும் சரி, அல்லது மற்றவர்களுக்காக ஒரு படத்தை டைரக்ட் செய்தாலும் சரி, தங்களைப் பரிகாசத்துக்கும் அவமதிப்புக்கும் உள்ளாகும்படியாக எடுக்கவே மாட்டேன். இது சத்தியம்........."

இந்தச் சமயத்தில் திடீரென்று அவனுடைய நண்பன் அங்கு வந்தான். ஸ்ரீனிவாசன் மண்டியிட்டுக் கடவுளைத் தொழுது கொண்டிருப்பதைக் கண்டதும் சிரித்துக் கொண்டே, "பேஷ், பெரிய இடத்திலேயே அப்ளிகேஷன் போடுகிறாயா?" என்றான்.

ஸ்ரீனிவாசனுக்கு வெட்கம் உண்டாயிற்று. அவன் எழுந்து நின்றான்.

அவன் பல ஸ்டுடியோக்களுக்குப் போய் வேலைக்காகத் தவம் புரிந்தது உண்மைதான்!

கண்கள்

சுந்தா



வைத்த பெயர் காரணத்தால் அல்லாமல் வாய்த்த கண் காரணத்தாலேயே, மீனாட்சிகளும் ஏணாட்சிகளும் இருக்கிறார்கள். இந்தச் சேல்விழியர்களையும் மான் விழியர்களையும் தவிர, மலர்விழியர்களான பத்மாட்சிகளும், பங்கஜாட்சிகளும், அம்புஜாட்சிகளும் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் நிகராக, தனித்தமிழ்ப் பூவையரான தாமரைக் கண்ணிகளும் அங்கயற் கண்ணிகளும் இருக்கிறார்கள். மற்றும், தேன் கண்ணிகளும், வேல்க் கண்ணிகளும் காந்தக் கண்ணிகளும், மின்சாரக் கண்ணிகளும் கூட இருக்கிறார்கள். இவ்வாறான பெயர்கள்தான் ஏதோ வழக்கில் இல்லை!

மீனினத்திலும் பூவினத்திலும் எத்தனை விதங்களும் வண்ணங்களும் உண்டோ, அத்தனை விதங்களையும் வண்ணங்களையும் கண்ணினத்திலும் காணலாம். விண் மீன்களின் அழகையும் விண்தாமரையின் அழகையும் வர்ணிக்கும் கவிஞர்கள், கண்களின் அழகையும் கவிதையில் புனைந்திருக்கிறார்கள். கண்ணழகு பற்றிய பாமலர்களையெல்லாம் தொகுத்தால், அந்தக் கண்மணி மாலை, நட்சத்திர மாலையைவிட எழில் மிக்கதாய் இருக்கும்.

மீன்விழியோ அல்லது மான்விழியோ, விசாலாட்சியாக, அதாவது அகலக் கண்ணாகவும் வாய்த்து விட்டால், அதன் அழகை அளவிட முடியாது. அகலக் கண்களை, சாகர நேத்திரங்கள் என்று அளவற்ற கடலோடு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. 'கடலினும் பெரிய கண்கள்' என்று கடலைக் குறுக்கிக் கண்ணைப் பெருக்கிக் கூறுவதும் உண்டு. இக்கூற்று மிகைக் கூற்றேயாயினும், கற்பனைக்கண் எவ்வளவு விசாலமானது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

கற்பனைக் கண்ணுக்கு, சிறிது பெரியதாகத் தோன்றும்; பெரிது சிறிதாகத் தோன்றும். வெவ்வேறானவை ஒன்றாகத் தோன்றும்; ஒன்றானது வெவ்வேறாகத் தோன்றும். புறக்கண் பெண்ணைப் பார்க்கையில், அகக்கண் மயிலைப் பார்க்கும். புறக்கண் எழுத்தைப் பார்க்கையில், அகக் கண் பொருளைப் பார்க்கும். புறக் கண் புறத்தைப் பார்க்கையில், அகக் கண் அகத்தைப் பார்க்கும். எதிரே இருப்பதைத்தான் புறக்கண் காண முடியும்; எதிரே இல்லாததையும் அகக்கண் காண முடியும். கடல் கடந்து, உலகம் கடந்து, காலமும் கடந்து நோக்கும் கற்பனைக் கண். நிற்க......

கண்ணைக் கடலோடு ஒப்பிடுவதற்கு, வேறு பல ஒற்றுமைகளும் இருக்கின்றன. ஆனந்த அலைகளும் இன்பத்திரைகளும் நயனக் கடலில் எழுந்தாடுகின்றன. ஆசைப் புயல்கள் வீசுகின்றன. சினம் கொந்தளிக்கிறது. அன்பு பொங்குகிறது. இவற்றிற்கெல்லாம் அடியிலே, எட்டாத ஆழத்திலே, எத்தனையோ சஞ்சலங்கள்; மர்மங்கள்.

நீலக்கடலையொத்த நீலாட்சியை வெள்ளைக்காரர்கள் அழகெனக் கருதுகிறார்கள். வானத்தின் அழகையெல்லாம் நீலக்கண்ணில் கண்டு, அதை வானளாவப் புகழ்கிறார்கள். ஆனால் நாமோ, நீலக் கண்களைப் பூனைக் கண்களென்று கேவலமாகச் சொல்லுகிறோம். வெண் தாமரையின் நடுவே கருவண்டு அமர்ந்தது போன்ற கண்கள்தான் நமக்கு அழகாகத் தோன்றுகின்றன. பெண்களின் கருவிழிகளை, மோகக் கருவிழிகள், காமாட்சி என்று பாராட்டுகிறோம்

இந்தக் காமாட்சிகள், கண் மணியின் கருமை போதாதென்று, இமைகளிலும் கருமை தீட்டிக்கொள்கிறார்கள். தீட்டிக்கொண்டோரின் விழிகளுக்குத் தண்மையூட்டும் அஞ்சனம், காண்போர் நெஞ்சிலே கனலை மூட்டுகிறது. அல்லி அரசாணிமீது மையல் கொண்ட அர்ச்சுனன், "(அவள்) கண்ணுக்கு மையாவேன்" என்று புலம்பினான். ஆண் வாடை ஆகாத அல்லியின் கண் வழியே, அவளுடைய இதயக் கோட்டைக்குள் புகமுடியாது என்பதை அவன் கண்டு, மாயக் கண்ணனின் உதவியுடன் களவு வழியைக் கைக்கொண்டான்.

கண்டதும் காதல் கொள்வோர் உண்டு. காணாமலே காதல் கொள்வோரும் உண்டு. இந்த இரண்டு இனங்களைத் தவிர, கண் மூடித்தனமாகக் காதல் கொள்வோரும் உண்டு. காதலர் கண்கள், கிறுக்குக் கண்கள். அவற்றின் சக்தியும் சரி, கோளாறுகளும் சரி. புரியாப் புதிர்கள். அக் கண்களுக்கு, மேடு பள்ளம் புலப்படாது. அருகிலுள்ளது தொலையில் தோன்றும்; தொலையிலுள்ளது அருகில்

தோன்றும். கறுமை வெண்மையாகத் தோன்றும். வெண்மை வர்ணமாகத் தோன்றும். ஒரு சமயம் அவை மயக்கும்: இன்னொரு சமயம் அவை மயங்கும். பார்த்துப் பரவசமாகும்; பரவசமாகிப் பார்க்கும். ஆகையால் மலர்ந்து, நாணத்தால் குவியும். செவ்வானத்தைக் கண்டு ஏங்கி, வெண்ணிலாவைக் கண்டு வெதும்பி, துஞ்சாமல் தவிக்கும்.




காதலரும் சரி, அல்லாதாரும் சரி, வாயினால் மாத்திரமின்றி, கண்ணினாலும் கருத்தை வெளியிடுகிறார்கள். சொல்லுக்கு மூத்தையது. சொல்லுக்கு அப்பாலானது நயன பாஷை. ஆதி பாஷையான இது, அகில உலக பாஷையுமாகும். உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சிகளையெல்லாம், அப்படி அப்படியே கண்கள் ஒளி பரப்புகின்றன. உள்ளத்தில் உள்ளதை நாவானது ஒளித்தோ திரித்தோ வெளியிடக் கூடும். கண்களோவெனில், உள்ளத்தை உள்ளபடியே விண்டுரைக்கும்; கள்ளத்தைக் காட்டிக் கொடுக்கும்.

"கண்கள் பார்க்கின்றன" என்று சொல்லுகிறோம். உண்மையில், பார்ப்பது கண்களல்ல; மனசு தான் பார்க்கிறது, கண்கள் வழியாக. ஒருவர் மனசைப் போல், இன்னொருவர் மனசு இருப்பதில்லை யாதலால், பார்வைக்குப் பார்வை வித்தியாசப்படுகிறது. மலர் ஒன்றில் தேனைப் பார்க்கிறது வண்டு: அதே மலரில் புன்சிரிப்பைப் பார்க்கிறது குழந்தை. மங்கையைப் பார்க்கிறான் வாலிபன்: தன்னையே பார்க்கிறாள் மங்கை!

கடவுளும் கலைஞனும் சிருஷ்டித்த அழகுகளைக் கண்டானந்திக்க, ஆயிரம் கண்கள் வேண்டும், கோடிக் கண்கள் வேண்டும் என்றெல்லாம்சொல்லுகிறோம். 'காணக் கண் கோடி வேண்டும்' என்று பாடுகிறோம். கோடிக் கண்கள் வேண்டும் என்று விரும்பும்படியாக, அத்தனை அழகுகள் கோடிக் கணக்கில் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து அனுபவிக்க, கோடிக் கண்கள் மாத்திரம் போதாது: கோடி வயசுங்கூட வேண்டுந்தான். ஆனால், இருக்கிற இரண்டு கண் கொண்டே, இருக்கிற சொற்ப வயசுக்குள்ளேயே, பார்க்கக் கூடியதையெல்லாம் பார்க்கிறோமா?


TUSSANOL
for COUGHS
and COLDS
அந்த நர்ஸுக்குத்தான் தெரியும்!
வைத்தியர்களால் பெரிதும் சிபாரிசு செய்யப்
படும் டஸ்ஸனல் குழந்தைகள், பெரியவர்கள், இரும
லுக்கு மிகவும் சிறந்த சஞ்சீவி. டஸ்ஸனல் ஹிதமளிக்
கக் கூடியது. ஹானியற்றது. ருசியானது. வேதனை
யளிக்கும் இருமல், கக்குவான், ஆஸ்துமா, மார்ச்
சளி, நிமோனியா முதலியவைகளுக்கு சிறந்த மாற்று.
TUSSANOL
TUSSANOL
COUGH SYRUP
TS



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras



KALKI செப்டம்பர் 11, 1949 4 அணா

உங்களுக்கு
எடை குறைந்து தளர்ச்சி,
அதைரியம், பலவீனம்
வெறுப்பு உணர்ச்சிகள் ஏற்பட்டால்



இம் முன்னெச்சரிக்கைகளை கவனியுங்கள்!

இல்லையேல் ஏதேனும் விபரீதம் ஏற்படும்!

இன்றே மருந்துகளை உபயோகிக்காமல் உடனடியாகவே உங்கள் ஆரோக்கியத்தையும் சக்தியையும் நிலைப் படுத்துங்கள்.

இயற்கையில் போதிய அளவில் தாதுப் பொருள்களும் விடாமின்களும் இல்லை என்பதை எச்சரிக்கத்தான் "தாதுவும் விடாமினும்" குறைந்து விட்டது என்று வைத்தியர்களும் கூறுகிறார்கள். சமைத்த உணவும் பதார்த்தங்கள் உங்களுக்குப் போதிய தாதுக்களை அளிக்கின்றன என்று கூற முடியாது.

இந்த விஷயத்தில் நீங்கள் வெகுவாய் சிரத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால்— உங்கள் தேகத்தின் வியூக சக்தி குறைந்து, அற்பமானவைகளும் வியாதிகள் வெகு சுலபமாக உண்டாகும். பிற்பாடு வாரக் கணக்கில் வைத்தியமும் மருந்தும்தான்.

யோசனை செய்யாமல் விகெல்ப் சாப்பிடுங்கள். மனித வளர்ச்சி விருத்திக்கு, இன்றியமையாத அபூர்வமான தாதுக்களில்— கால்ஷியம், பாஸ்பரஸ், கந்தகம், இரும்பு, மக்னிஷியம், அயோடின் ஆகாரம் போன்ற 9 தாதுக்கள் அடங்கியிருக்கின்றன.

விகெல்ப் ஒரு சாதாரண முறையில், தாதுப் பொருள்கள் அனைத்துக்கும் இருப்பிடமான கடல் மூலிகையிலிருந்து தயாரிக்கப் பட்டது தான்.— தயாரிப்பில் விடமின் B 1, D 2 வும் கொஞ்சம், இரும்பும் சேர்க்கப் பட்டிருப்பதைத் தவிர வேறு மருந்து எதுவும் சேர்க்கப் படவில்லை. இன்றே விகெல்ப் உபயோகியுங்கள். எவ்வளவு விறுவிறுப்பாகவும், ஆரோக்யத்துடனும், ஆவலுடனும் வேலை செய்ய முடிகிறது என்பதை உணர்வீர்கள். விகெல்ப் ஒரு டானிக்குடன் ஆகாரமுங்கூட.

VIKELP டானிக் ஆகாரம்
விகெல்ப்





நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம்பிறை வடிவாகக் கட்டினாலும் சரி—கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலின்றி இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்க மாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும் கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் இட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங் கூந்தலைப் பெறுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் ஒருங்கே அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை
கிராஸ் கட் ரோடு, கோயமுத்தூர்

REGD. No. M. 4392